# மத்ஹபுகளின் அவசியம்

## பொருளடக்கம்

பக்கம்


| | |
|---|---|
| அணிந்துரை | |
| முன்னுரை | |
| பதிப்புரை | |
| மத்ஹபுகளின் அவசியம் | 9 |
| பொற்காலங்கள் | 17 |
| நான்கு மணிமொழிச் சட்டங்களே பிரகாசமடைந்தன | 27 |
| மத்ஹபுகள் | 29 |
| இமாம் அபூஹனீபா (ரஹ்) | 33 |
| அனுமானத்திற்கு முதலிடமா? | — |
| இருபெரும் இமாம்களிடையே வாதம் | 34 |
| இமாம் மாலிக் (ரஹ்) | 40 |
| மணிமொழி நூல் 'முஅத்தா' | 41 |
| மணிமொழிக்கே அவர்களது உயிர் | 45 |
| ஹஜ்ரத் இமாம் ஷாபியீ (ரஹ்) | 46 |
| அற்புதமான 'அர்ரிஸாலா' | 56 |
| இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் (ரஹ்) | 68 |
| அருள்மொழி உருவம் அஹ்மது இப்னு ஹன்பல் (ரஹ்) | 68 |
| அவர்களின் நோக்கமென்ன? | 73 |
| ஆள்காட்டி விரலை உயர்த்துவது சுன்னத்தாகும் | 76 |
| களாத் தொழுகை அவசியமாகும் | 79 |
| தராவீஹ் தொழுகை இருபது ரக்அத்துகள் | 84 |
| தக்பீர் தஹ்ரீமுக்காக உயர்த்திய கரங்களை எங்கே கட்டுவது? | 94 |
| கூட்டு துஆ | 101 |
| கப்ரு ஜியாரத் சுன்னத்தாகும் | 109 |


—★—



بسم الله الرحمن الرحيم

# மத்ஹபுகளின் அவசியம்

மத்ஹபுகள் அவசியம் என்பது, இயற்கையான ஒன்று. அதனை விளக்கிச் சொல்ல வேண்டிய தேவை எதுவும் இல்லை, மனிதனுக்கு உணவும் தண்ணீரும் அவசியம். இதனை சிறுவர் உட்பட ஒவ்வொரு மனிதனும் அறிந்திருக்கிறான். இதனை விளக்கிச் சொல்ல வேண்டிய அவசியமுண்டா? இல்லை. இப்படித்தான் சன்மார்க்க சட்ட அடிப்படையில் வாழ்வதற்கு மத்ஹபுகள் அவசியம். இதனை விளக்கிச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஆயினும் இயற்கையான ஒன்றைக் கூட விளக்கிச் சொல்ல வேண்டிய கால கட்டத்தில் நாம் மாட்டிக்கொண்டிருக்கிறோம்.

மத்ஹபுகள் என்று எவரேனும் கூறக் கேட்டு விட்டால் சிலர் சினமுற்று சீறி எழுகின்றனர். இன்னும் சிலர் மத்ஹபுகள் என்ன தேவை? நபிமொழி ஒன்றே போதாதா? என்று ஆயாசப்படுகின்றனர். வேறு சிலர் மத்ஹபுகள் எவர்களின் பெயரால் பிரபலமடைந்திருக்கின்றனவோ அத்தகைய மாபெரும் இமாம்கள் குறித்து மிக அலட்சியமாகப் பேசுகின்றார்கள். அவர்கள் ஏன் அப்படி பேசுகின்றார்கள், இந்த சமுதாயத்திற்கு அவர்கள் அரும்பணிகள் ஆற்றவில்லையா? உலகிற்கு முன்னோடியாகத் திகழ்கின்ற மாபெரும் சட்ட நூற்களை அவர்கள் வழங்கவில்லையா? அல்லது அவர்களின் பெயரால் பிரபலமடைந்துள்ள மத்ஹபுகள் வேறு, மாநபியின் மணிமொழிகள் வேறு என்று இவர்கள் எண்ணுகிறார்களா? அப்படியானால் இவர்களுக்கு உண்மைகளைச் சொல்லிக் காட்டுவது நம்மீது கடமையாகும்.

எனவே மத்ஹபுகள் என்றால் என்ன? அவைகள் மாநபியின் மணிமொழிகளுக்கு மாறுபட்டவையா? அல்லது அம்மணி மொழிகளை அடிப்படையாகக் கொண்டே எடுக்கப் பட்டவையா? என்பனவற்றைத் தெளிவுபடுத்துகிறோம். கொஞ்சம் கவனித்துக் கேளுங்கள்.

### மணிமொழிச் சட்டங்களே மத்ஹபுகளாகும்.

மத்ஹபுகள் என்பது தனியொரு மனிதனுடைய அறிவி லிருந்து பிறந்த முடிவல்ல, அல்லது அவனுடைய மனோ இச்சையை அடிப்படையாகக்கொண்டு ஆக்கப்பட்டதுமல்ல, எந்த ஒரு மனிதனுடைய அறிவின் முடிவின்பக்கமோ அல்லது மனோ ஆசையை அடிப்படையாகக் கொண்டு எழுந்த கருத்தின் பக்கமோ அல்லாஹ் முஸ்லிம் சமுதாயத்தைச் சார்ந்திருக்கும்படி வைக்கவில்லை.

வான்மறை, வள்ளல் நபிமொழி இவ்விரண்டையும் அடிப்படையாகக் கொண்டு அவ்விரண்டிலும் நம்முடைய இமாம்கள் ஆழமாக அகலமாக ஆராய்ந்து ஆராய்ந்து அவற்றில் மறைந்து கிடக்கின்ற மணி மணியான சட்டங்களை விளக்கித் தந்தார்கள். அப்படி அவர்கள் விளக்கித் தந்த சட்டங்களுக்கே மத்ஹபுகள் என்று கூறப்படுகிறது.

எனவேமத்ஹபுகள் வான்மறையிலிருந்தும் வள்ளல் நபி மொழிகளிலிருந்தும் ஆராய்ந்து எடுக்கப்பட்ட சட்டங்களே யாகும். அந்தச் சட்டங்கள் மாநபி மணிமொழிகளுக்கு மாறு பட்டவையா? அல்லது அவைகளுக்கு அப்பாற்பட்டவையா? வான்மறையிலிருந்தும், வள்ளல் நபிமொழி ஒளியில் இருந்தும் பிறந்த மத்ஹபுகள், எப்படி அவ்விரண்டுக்கும் மாறுபட்டவை களாக இருக்க முடியும்? ஒருக்காலும் இருக்க முடியாது.

### தங்கமும் தங்க நகையும்

தூய பத்தரை மாற்றுத் தங்கத்தை எடுத்துக் கொள்ளுங் கள். அத்தங்கத்திலிருந்து வளையல், சங்கிலி போன்ற அழ



கொளிரும் நகைகளை சமைத்துப் போட்டுக் கொள்கிறோம். அப்படிப் போட்டுக்கொண்ட நகைகள் அத்தங்கத்திற்கு மாறுபட்டவையா? அல்லது அவைகள் தங்கம் தானா? நீங்கள் கொஞ்சம் சிந்தியுங்கள். அவ்விரண்டுமே தங்கம் தான். தங்கம் வேறு அத்தங்கத்தினாலாய நகைகள் வேறு என்று சொல்ல முடியாது. தங்கமும், தங்கத்திலிருந்து பிறந்த நகைகளும் ஒன்றுதான். தங்கம் வேறு தங்கத்தி னாலாய நகை வேறு என்று சாதாரண மனிதன் கூட கூற மாட்டான்.

### நபிமொழியும் நபிமொழிச் சட்டமும்;

அப்படியே வான் மறையும் வள்ளல் நபிமொழியும் அவ் விரண்டிலிருந்து பிறந்த அற்புதமான தங்க நிகர் சட்டங்களும் ஒன்றுதான். இவ்விரண்டும் வேறு வேறு என்று அறிவுடைய எவரும் சொல்லமாட்டார். மத்ஹபுகள் வான் மறையிலிருந் தும் வள்ளல் நபிமொழியிலிருந்தும் பிறந்தவை என்பதினால் மத்ஹபுகளைப் பின்பற்றுபவன் அண்ணல் நபியவர்களைப் பின்பற்றுபவனாகவே ஆவான். இதில் எள்ளளவும் சந்தேகமேயில்லை.

உதாரணமாக இறைவன் கூறுகிறான்: ''நபியே! நீர் தொழக்கடவீராக! திண்ணமாக தொழுகை பாவங்களிலி ருந்தும் மானக் கேடானவைகளிலிருந்தும் மனிதனை விலக்கி விடுகிறது.''

இன்னொரு வசனத்தில், 'நீங்கள் தொழுகைகளை நிலை நாட்டுவீர்களாக' எனக் கூறப்பட்டிருக்கிறது. இப்படி பல வசனங்கள் வான்மறையில் கூறப்பெற்றிருக்கின்றன. அவை யாவும் ஆணைச் சொற்களாகும். கட்டளைச் சொற்களாகும். இக்கட்டளைச் சொற்களை அறிவுத் திலகங்களான இமாம் கள் ஆராய்கின்றனர். அவற்றில் அடங்கியிருக்கின்ற சட்டங் களை சிந்திக்கின்றனர்.

'நீங்கள் தொழக்கடவீர்களாக!' என்று வான்மறையில் வருகின்ற பல ஆணைச் சொற்களுக்கு என்ன பொருள்?

அவற்றில் உள்ளடங்கியிருக்கின்ற சட்டங்கள் யாவை? என்பன போன்றவற்றை இமாம்கள் சிந்திக்கின்றனர். அதுமட்டுமல்ல. அவைகளுக்கு ஆதரவாக அமைந்துள்ள மணிமொழிகளையும் ஆராய்கின்றனர். இப்படி அவர்கள் ஆராய்ந்து ஆராய்ந்து, ''தொழுகையை நிலை நாட்டுவது பர்லாகும்'' என்ற சட்டத்தை விளக்கித் தருகிறார்கள். பர்லு என்ற சட்டத்தின் காரணமாக,

''தொழுகையை நிலை நாட்டுவது கட்டாயக் கடமையாகும். அதனை விடுவது தண்டனைக்குரிய மாபெரிய குற்றமாகும்'' என்பது உண்டாகின்றது. இதுதான் தொழுகை பர்லு என்று சட்டம் சமைப்பதினால் உண்டாகும் பயனும் விளைவுமாகும்.

இப்பொழுது நீங்கள் கவனியுங்கள்! 'அகீமுஸ்ஸலாத்த' நீங்கள் தொழுகையை நிலை நாட்டுவீர்களாக! என்ற இறை வசனத்திலிருந்து, ''தொழுகை பர்லு'' என்று சட்டமாக்குவது இறைவசனத்திற்கு வேறுபட்டதா? அல்லது தொழுகையைக் கடைப்பிடிப்பதற்கு அது வலிவும் உறுதியும் ஊட்டுகிறதா? நீங்களே கொஞ்சம் ஆராய்ந்து பாருங்கள்!

எனவே தொழுகையை நிலை நாட்டுங்கள்! என்பதிலிருந்து இமாம்கள், ''தொழுகை பர்லு'' என்ற சட்டத்தை எடுத்திருப்பது முற்றிலும் நியாயமானது; இயற்கையானது.

இன்னொரு உதாரணம். தொழுகையின்போது ''திறப்பு அத்தியாயத்தை (அல்ஹம்து சூரா) ஓதுவது வாஜிபாகும்'' இப்படியொரு சட்டத்தை இமாம்கள் தம் அறிவின் அடிப்படையில் விளக்கித் தந்தார்களா? இல்லை அல்லது இந்தச் சட்டம் மாநபியின் மணிமொழிக்கு மாறுபட்டதா? இல்லை. வான் மறையிலிருந்தும் வள்ளல் நபிமொழியிலிருந்தும் அலசி ஆராய்ந்து எடுத்து தந்துள்ளார்கள்,

இறைவன் கூறுகிறான்: 'திருகுர்ஆனில் உங்களுக்கு மிகவும் இலகுவானவற்றை தொழுகையில் ஓதுவீர்களாக!'



இந்த வசனம் வான்மறையில் பல இடங்களில் வந்திருக்கிறது. இதற்கு விளக்கமாக நபிமொழி ஒன்று காணப்படுகிறது. அஃது ''எவர் தொழுகையின் போது சூரத்துல் பாத்திஹா — திறப்பு அத்தியாயத்தை — ஓதவில்லையோ அவருக்கு தொழுகையே இல்லை'' இதே கருத்துப்பட இன்னும் பல நபிமொழிகள் வந்திருக்கின்றன.

இவை யாவற்றிலும் இமாம்கள் ஆழமாக சிந்திக்கின்றார்கள்; ஆராய்கின்றார்கள். இப்படி ஆராய்ந்து தொழுகையின் போது, ''திறப்பு அத்தியாயத்தை ஓதுவது கட்டாயமாகும்'' என்ற சட்டத்தை விளக்கித் தந்தார்கள். இப்போது நீங்கள் கொஞ்சம் கவனியுங்கள். திறப்பு அத்தியாயத்தை ஓதாதவருக்கு தொழுகையே இல்லை என நபியவர்கள் நவின்றுள்ளார்கள். எனவே திறப்பு அத்தியாயத்தை தொழுகையில் ஓதுவது வாஜிப்—கட்டாயம் என்ற இமாம்கள் விளக்கித் தந்திருக்கிறார்கள். இவ்விரண்டுக்குமிடையே வேறுபாடு உள்ளதா? நபிமொழிக்கு தெளிவான விளக்கமாகவும் அதனை செயல்படுத்துவதற்கு வலிவூட்டுவதாகவுமே அமைந்திருக்கிறது.

இன்னொரு உதாரணம்: 'நீங்கள் ருகூஃ செய்பவர்களுடன் ருகூஃ செய்யுங்கள் என்பது கட்டளைச் சொல்லாகும். நபியவர்களும் நீங்கள் ருகூஃ செய்யுங்கள் என்று கூறியிருக்கிறார்கள். இம்மணிமொழிகளில் இமாம்கள் ஆராய்ந்து ''தொழுகையில் ருகூஃ செய்வது பர்லாகும்'' என்ற சட்டத்தை விளக்கித் தந்தார்கள். ''ருகூஃ செய்வது பர்லு'' என்ற சட்டம் ஏற்பட்டு விட்டதினால் அதனை விட்டு விட்டால் தொழுகை கூடாது என்பது உண்டாகும். இந்தச் சட்டம் நீங்கள் ருகூஃ செய்யுங்கள் என்ற இறைவனின் சொல்லுக்கும், மாநபியின் மணிமொழிக்கும் மாறுபட்டதா? அல்லது அம்மணிமொழிகளை செயல்படுத்துவதற்கு வலுவூட்டக் கூடியதா? நீங்களே கொஞ்சம் சிந்தித்துப்பாருங்கள்.

இன்னும் ஓர் உதாரணம்; நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிலையிலிருந்து ருகூவிற்குச் செல்லும்போது

அல்லாஹு அக்பர் என்று தக்பீர் செல்பவர்களாக இருந் தார்கள். இதே கருத்துப்பட இன்னும் பல மணிமொழிகள் வந்திருக்கின்றன. இவைகளில் இமாம்கள் மிகவும் கவனத் துடன் ஆராய்கின்றார்கள். அப்படி ஆராய்ந்து, நிலையில் இருந்து ருகூவிற்குச் செல்லும்போது ''தக்பீர் சொல்வது சுன்னத்'' என்ற சட்டத்தை விளக்கித் தந்தார்கள்.

சுன்னத் என்பது, அதை செய்வதினால் நன்மை கிடைக் கப்பெறும். அதைச் செய்யத் தவறினால் இலேசான கண்டனம் உண்டாகும். ஆனால் செயல் முறிந்துபோகாது. இதற்குத்தான் சுன்னத் எனப்படும், உதாரணமாக நிலை யிலிருந்து ருகூவுக்குச் செல்லும்போது, தக்பீர் சொல்வது சுன்னத்தாகும். அதனை சொல்லத் தவறினால் இலேசான கண்டனம் உண்டாகும். ஆனால் தொழுகை முறியாது. இப்படி ''தக்பீர் சொல்வது சுன்னத்'' என்று இமாம்கள் விளக்கித் தந்திருப்பது நபிவழிக்கு கொஞ்சமும் மாறுபட்ட தாக இல்லை. நபிவழியை செயல்படுத்துவதற்கு வலியூட்டுவ தாகவும் உறுதிப்படுத்துவதாகவுமே அமைந்திருக்கிறது.

இப்படி வணக்க வழிபாடுகள் போன்ற எல்லாச் செயல் களிலும், இன்ன செயல் பர்லானது, இன்ன செயல் வாஜி பானது. இன்ன செயல் சுன்னத்தானது. இன்ன செயல் ஹராமானது. இன்ன செயல் மக்ருஹானது போன்ற சட்டங்களை மிகத் தெளிவாக நம்முடைய இமாம்கள் விளக்கித் தந்துள்ளார்கள். அப்படி அவர்கள் விளக்கித் தந்த சட்டங்கள்,— மத்ஹபுகள் — மணிமொழிகளுக்கு மிகத் தெளிவான விளக்கங்களாகவே இருக்கின்றன. அவைகளை விட்டும் அவை வேறானவைகளாக இல்லை.

எனவே மத்ஹபுகள் தேவையில்லை என்று கூறுபவர்கள், மாநபி மணிமொழிகளே தேவையில்லை என்று கூறுவதாகத் தான் பொருளாகும். ஏனெனில் மணிமொழிகள், சட்டங்கள் இவ்விரண்டும் ஒன்றையொன்று இணைந்தேயிருக்கின்றன. நீங்கள் தொழுங்கள் என்று ஆணையிடுவது தொழுகை பர்லு என்பதற்குத் தான்; இவ்விரண்டையும் வேறுபடுத்த முடி



யாது. எனவே மத்ஹபுகள் — சட்டங்கள் என்பது வான் மொழி, வள்ளல் நபிமொழி இவ்விரண்டிலிருந்து பிறந்தவை யாகும் என்பதில் ஐயமில்லை.

## வினாவும் விடையும்

ஸஹாபாப் பெருமக்கள் சட்டங்களின் அடிப்படையிலா செயல்பட்டு வந்தார்கள்? அவர்கள் எது பர்லு, எது சுன்னத் என்று விளங்கிச் செயல்படவில்லையே! என்று நீங்கள் கேட்கலாம். ஸஹாபாப் பெருமக்கள் அப்படி விளங்கிச் செயல்படவில்லை என்பது உண்மைதான். ஆயினும் அவர் கள் நபியவர்களை நேர்முகமாகப் பார்க்கிறார்கள். அண்ண லவர்கள் எப்படிச் செய்வார்களோ அதுபோல இவர்களும் செய்தார்கள். அவர்கள் ருகூஃ செய்தார்கள். ஸஹாபாக் களும் அப்படியே ருகூஃ செய்தார்கள், நபியவர்கள் ருகூவுக் குக் செல்லும்போது அல்லாஹு அக்பர் என்று தக்பீர் சொன்னார்கள். அதுபோல அவர்களும் அல்லாஹு அக்பர் என்று தக்பீர் சொன்னார்கள். ஆனால் அப்படி தக்பீர் சொல் வது பர்லா? சுன்னத்தா? என்று அவர்கள் நபியவர்களிடம் கேட்டதில்லை.

அப்படியே தொழுகையின்போதும் ஒலுவின் போதும் ஹஜ்ஜின் போதும் வணக்க வழிபாடுகள் அனைத்தின் போதும் நபியவர்கள் எப்படிச் செய்வதை அவர்கள் பார்த் தார்களோ அப்படியே செய்தார்கள். எது பர்லு? எது சுன்னத்? என்று அவர்கள் நபியவர்களிடம் கேட்டதில்லை. பெரும்பாலும் அவர்கள், அண்ணலவர்கள் செய்வதைப் போல் செய்வதில் அளப்பரிய ஆர்வம் காட்டினார்கள். எதையும் கேட்டுக் கொண்டிருப்பதை அவர்கள் விரும்ப வில்லை.

அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறு கின்றார்கள்; நபித்தோழர்கள் மிகச் சிறந்தவர்கள். மிக்க மேலானவர்கள். அரும் பண்புகளுக்குச் சொந்தக்காரர்கள்

ஆயினும் அண்ணல் நபியவர்களிடம் பதிமூன்று கேள்வி களுக்கு மேல் அவர்கள் கேட்டதில்லை. அப்பதிமூன்று கேள்விகளும் கூட வான்மறை அல்குர்ஆனிலே விளக்கம் வந்திருக்கின்றன.

அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள் சொல்கின் றார்கள். அமீருல் முஃமினீன் உமர் (ரலி) அவர்கள் இல்லாத வற்றை எவரும் கேட்டுவிடுவாராயின் அவரை கண்டித் திருக்கிறார்கள்.

எனவே ஸஹாபாப் பெருமக்கள் கேட்பதில் நாட்டம் கொள்ளவில்லை. ஏனெனில் அவர்கள் அண்ணல் நபியவர் களை நேர்முகமாகப் பார்க்கின்றார்கள். அவர்களுக்கு வஹீ வருவதையும் பார்க்கின்றார்கள். அவர்கள் செய்வதை அப்படியே நோட்டமிடுகிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக தெய்வீக அருள் தென்றல் விசிக்கொண்டிருக்கும் அவர்களு டைய அவையில் அமர்ந்திருக்கிறார்கள். இம்மாபெரும் பாக்கியம் அவர்களுக்கு மட்டுமேயன்றி வேறெவருக்கும் கிட்டியதில்லை. எனவே எதனையும் அவர்களிடம் கேட்க வேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு எழவில்லை.

ஆனால் அண்ணல் நபியவர்களுடைய வபாத்திற்கு (மறைவிற்கு)ப்பிறகு ஸஹாபாப் பெருமக்கள் மதீனா நகரை விட்டும் பிரிந்து வெவ்வேறு ஊர்களில் சென்று வாழத் தொடங்கினார்கள், வெகு தொலைவான தூரங்களிலும் போய்த் தங்கிவிட்டார்கள், மக்களும் அதிகமதிகம் பெருகிக் கொண்டேயிருந்தனர். பிரச்சனைகளும் புதிது புதிதாகத் தோன்றின. அப்பிரச்சனைகளுக்கு தீர்வு கூறுவதிலும் முரண் பாடுகள் தோன்றின.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் இறைஞானம் பெற்ற இமாம்கள், வான்மறை வசனங்கள், வள்ளல் நபி மொழிகள் என்ற அறிவுக் கடலில் மூழ்கி முத்துக் குளிக்கத் தொடங்கி னார்கள், அறிவுப் பேரலைகளை — எழிலார்ந்த சட்டங் களை எழுப்பிக் கொண்டிருக்கும் இம்மாபெரும் கடலில்



அவர்கள் மூழ்கினார்கள். அப்படி மூழ்கிய அவர்கள் அவனி யோர்களை அருள்மொழிப் பிரகாசத்தின் பால் கொண்டு வருவதற்காக அல்லும் பகலும் அயராது அரும்பாடுபட்டு அணு அணுவாய் இறையச்சத்தை மனதில் தேக்கிக் கொண்டு ஞானமொளிரும் முத்து முத்தான சட்டங்களை விளக்கித் தந்தார்கள். ‘‘அந்தச் சட்டங்கள்தான் மத்ஹபு’ எனப்படுகிறது அந்த அந்த மத்ஹபுகளைப் பின்பற்றுபவன் மாநபியின் மணிமொழியை முற்றிலும் பின்பற்றுபவனாகவே ஆவான். அந்த சட்டங்களுக்கு அப்பால் மாநபியின் மணிமொழியைத் தேடுபவன் நெருப்புக் காட்டில் மலர்ச் செடியை தேடுபவ னைப் போலாவான். இமாம்கள் விளக்கித் தந்த சட்டங்கள் வான்மறை) வள்ளல் நபிமொழி என்ற பசுமையான ரோஜா செடியில் மலர்ந்து மணம் பரப்புகின்ற மலர்களாகும்.

இப்படி சுகந்தமான நறுமணத்தை நல்குகின்ற மலர் களைக் கொய்து தந்த இறையன்பர்களான இமாம்களைக் குறித்தும் அவர்களின் பொன்னான காலங்கள் குறித்தும் சில வார்த்தைகள் கூறுகிறேன். உன்னிப்பாகக் கவனி யுங்கள்.

# பொற்காலங்கள்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூன்று காலங்களைக் குறித்து மிகவும் சிறப்பித்து உயர்வுபடுத்திக் கூறியிருக் கிறார்கள், அக்காலங்கள் அன்பும் அருளும் அறிவும் அறமும் பெருகிவரும் அற்புதமான காலங்கள்.

## 1. அண்ணல் நபிகளாரின் காலம்:

அக்காலத்தில்தான் வான்வஹீ பொழிந்துகொண்டிருந் தது. வானவர்கோன் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் அவ்வஹீ யினைக்கொண்டு இத்தரணியில் இறங்கிக் கொண்டிருந்தார் கள். அண்ணல் நபியவர்கள் அவ்வஹியினைப் பெற்று] தம தரும் தோழர்களை ஏகத்துவ நெருப்பில் புடமிட்டு பத்தரை மாற்றுத் தங்கங்களாக ஒளிரச் செய்தார்கள். எனவே

அவ்வரும் ஸஹாபாக்கள் அண்ணலவர்களுடைய அருளுருவை நேர்முசமாகக் காணுகிறார்கள். அவர்களுடைய முகத்தில் தெய்வீகப் பொலிவு பிரகாசித்துக் கொண்டிருப்பதை கண் கொண்டு பார்க்கிறார்கள். அவர்களுடைய அருஞ் செயலைப் பார்க்கின்றார்கள், அவர்களுடைய அருள் மொழியைக் கேட்கின்றார்கள்.

இப்படிப்பட்ட மகத்தான வாய்ப்பைப் பெற்ற நபித் தோழர்கள் அண்ணலவர்களுடைய சொல்லையும் செயலையும் அப்படியே பிரதிபலிக்கிறார்கள், அண்ணலவர்களை அவர்கள் எப்படிக் காணுகிறார்களோ அப்படியே செய்கிறார்கள். அவர்கள் எப்படி தக்பீர் கட்டினார்களோ அப்படியே இவர்களும் தக்பீர் கட்டினார்கள். அவர்கள் ருகூஃ செய்தது போல்இவர்களும் ருகூஃ செய்தார்கள். அவர்கள் ஸுஜூது செய்ததுபோல இவர்களும் ஸுஜூது செய்தார்கள். இப்படி அணுவணுவாய் அவர்களைப் பின்பற்றி வந்தார்கள். எது பர்லு? எது சுன்னத்? என்ற சட்டங்கள் குறித்து அவர்களுக்கு சிந்திக்கத் தேவையில்லாமலிருந்தது.

அது மட்டுமல்ல, அண்ணல் நபியவர்களையும் அவர்கள் தம் தோழர்களையும் எந்நேரமும் எதிரிகள் கொடுமையாகத் தாக்கிக்கொண்டிருந்தார்கள். அவர்களுடைய தாக்குதல்கள் அலையலையாக வந்து வள்ளல் நபியவர்களையும் அவர்களுடைய தோழர்களையும் கொடுமையாக துன்புறுத்தி வந்தன. அக்கொடுந் துன்பங்களிலிருந்து தங்களையும் தாஹா நபியவர்களையும் காப்பாற்றும் பொருட்டு ஒவ்வொரு நேரமும் ஓயாது ஒழியாது கடும் முயற்சியினை மேற்கொண்டிருந்தார்கள்.

இப்படிப்பட்ட கடும் முயற்சி மக்கா வெற்றி பெறுகின்ற வரை தொடர்ந்து நீடித்துக்கொண்டேயிருந்தது. இதன் காரணமாக வணக்க வழிபாடுகளில் அண்ணல் நபி அவர்களின் அருஞ்செயல்களை அப்படியே அவர்கள் பின்பற்றி வந்தார்கள். அவர்களுக்கு கேட்கவேண்டிய அவசியம் ஏற்படவேயில்லை. இம்மகத்தான வாய்ப்பு ஸஹாபாப் பெரு



மக்களுக்கு மட்டுமே கிட்டியது. இஸ்லாமிய நடைமுறைகளுக்கும் பண்பாடுகளுக்கும் அவர்களே அடிப்படையாக இருந்தார்கள்.

## 2. தாபியீன்களுடைய காலம்:

அவர்கள் அண்ணல் நபியவர்களுடைய பொன்மொழியைப் பார்க்கவுமில்லை. அவர்களுடைய அருள்மொழியை நேரடியாகக் கேட்கவுமில்லை. இவ்வரும் பேற்றினை அவர்கள் பெற முடியவில்லை. ஆயினும் அவர்கள் அண்ணல் நபி அவர்களுடைய வஹீ என்ற கல்லூரியில் பயின்று பயிற்சி பெற்று தங்கக் கம்பியாக ஒளிர்ந்துகொண்டிருந்த ஸஹாபாப் பெருமக்களைப் பார்த்தார்கள். அவர்களுடைய சொல்லிலும் செயலிலும் செம்மல் நபியவர்களுடைய சொல்லையும் செயலையுமே கண்டார்கள்.

எனவே ஸஹாபாப் பெருமக்களை அவர்கள் அடியொற்றி வந்தார்கள். ஆயினும் அத்தோழர்சள் மதீனாவிலிருந்து பிரிந்து பல்வேறு நாடுகளுக்குச் சென்று விடுகின்றார்கள். எகிப்து. இராக், சிரியா, ஜோர்டான் முதலான நாடுகளுக்குச் சென்று பரவி வாழத் தொடங்கிவிட்டார்கள். நாடுகளும் விரிவடைந்து விட்டன. மக்களும் பெருகி விட்டனர். பிரச்சனைகளும் அதிகமதிகம் தோன்றிவிட்டன. இதன் காரணமாக கருத்து வேறுபாடுகளும் முரண்பாடுகளும் தோன்றின. எனவே ஒரு பிரச்சனையின் உண்மையைக் கண்டுகொள்ள பல நாடுகளிலும் பிரிந்து வாழுகின்ற ஸஹாபாப் பெருமக்களை தேடியலைய வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டு வருகிறது.

இன்னும் நபிமொழிகளை அறிந்துகொள்ளும் பொருட்டு ஆயிரமாயிரம் மைல்கள் பயணம் செல்யும் நிலை ஏற்பட்டது. இப்படி பலப்பல கஷ்டங்களை தாங்கிக்கொண்டு முரண்பாடுகளை முற்றிலும் அகற்றுவதற்கும் மாநபியவர்களின் உண்மையான நடைமுறைகளைக் கண்டு கொள்வதற்கும் எண்ணிறந்த அறிஞர் பெருமக்கள் முழுமையாகத் தல்மை

அர்ப்பணிக்கத் தொடங்கினார்கள். இந்தக் காலத்தில்தான் மாநபி மணிமொழிகளைத் தொகுக்கும் பணி தொடங்கியது. மணிமொழிக் கலையில் பேரார்வம் கொண்டிருந்த ஸுஹரி (ரஹ்) அவர்களை மணிமொழிகளைக் தொகுக்குமாறு கலீபா உமர்இப்னு அப்தில் அஸீஸ் (ரஹ்) அவர்கள் கட்டளையிட்டார்கள்,

இக்கட்டளையை ஏற்ற ஸுஹரி (ரஹ்) மற்றும் ஸயீது இப்னுல் முஸய்யப், தாவூஸ் இப்னு ஸீரீன், அல்கமா போன்ற உத்தமர்கள் குறிப்பிடத் தக்கவர்களாவர், இம்மா மேதைகள் நாடு நாடாக அலைந்து மாநபியின் உண்மையான மணிமொழிகளைக் கண்டுகொள்ள பகீரத பிரயத்தனத்தை மேற்கொண்டார்கள். இப்படி கடும் முயற்சிகளை மேற்கொண்டு மெய்யாய பலப்பல மணிமொழிகளைக் கண்டறிந்தார்கள். ஆயினும் அவர்கள் தாம் கண்டுகொண்ட மெய்யாய மணிமொழிகளைக் தொகுத்து நூல் வடிவுக்கு கொண்டு வரவில்லை. அப்படியே சிலர் நூல் வடிவுக்குக்கொண்டு வந்தாலும் அதுவும் மிகக் குறைவாகவே இருந்தது.

மகத்துவமிக்க இம்மேதைகள் நமக்கு முன்னிருந்த ஸஹாபாப் பெருமக்களுடைய நடைமுறைகளை பின்பற்றி வருவதின் மூலம் அவைகளைக் காப்பாற்றி வந்தார்கள். இந்தக்காலத்தில் மணிமொழிகளைக் தொகுக்கும் உன்னதமான பணி தொடங்கி வைக்கப்பட்டாலும் அவற்றை அதிமதிகம் நூல்வடிவுக்கும்கொண்டு வரப்படவில்லை.

## 3. 'தபஉத்தாபியீன்'களுடைய காலம்:

தபஉத் தாபியீன்கள் அண்ணல் நபியவர்களுடைய நேர்முக அருட்பார்வையின் அருமையான பராமரிப்பை விட்டும் இரண்டும் தலைமுறைகளைக் கடந்துவிட்டனர். இவர்களுடைய காலத்தில் முந்திய இரு காலங்களைவிட மக்கள் அதிகமதிகம் பெருகி விட்டனர். புதிதாக இஸ்லாமை மற்றவர்களும் பல்கிப் பெருகி விட்டனர். நாடுகளும் பெருகி மக்கள் வெகு தொலைவில் வாழத் தொடங்கினார்கள்.



கலீபாக்களுடைய ஆட்சிகள் மாறி மன்னர்களுடைய ஆட்சி தொடங்கி விட்டது.

மணிமொழிகளை எவர் அதிகம் தெரிந்துகொண்டாரோ அவர்தான் அந்தந்த ஊர்களில் பத்வா (தீர்ப்பு) வழங்குபவர்களாகவும் கதீபுகளாகவும் திகழ்ந்தார்கள். இதன் காரணமாக ஊருக்கு ஊர் நடைமுறை மாறுபட்டிருந்தது. மணிமொழி அறிவிப்பதிலும் முரண்பாடுகள் தென்பட்டன. இப்படிப்பட்ட முரண்பாடுகள் ஸஹாபாப் பெருமக்களுடைய காலத்திலேயே தோன்றி விட்டன. சிலர் கைகளை உயர்த்தித் தொழுதனர். வேறு சிலர் கைகளை தொங்க விட்டிருந்தனர். சிலர் ஹஜ்ஜினுடைய தவாப் செய்கின்றபோது ரமல் செய்வது சுன்னத் என்றனர். வேறு சிலர் அது சுன்னத் இல்லை என்றனர்.

அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள் இறந்த மய்யித்தின்மீது உறவினர்கள் அழுதால் அதன் மூலம் (மய்யித்திற்கு) இறந்தவருக்கு தண்டனை வழங்கப்படும் என்று கூறுகிறார்கள். ஆனால் அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் இறந்துபோன மய்யித்தின் மீது உறவினர்கள் அழுதால் மய்யித்திற்கு தண்டனை வழங்கப்படாது என்று கூறுகின்றார்கள்.

ஜனாபத்தாகிவிட்ட ஒருவன் தண்ணீரைப் பெறாவிடில் தயம்மம் செய்து தொழலாம் என்று அம்மார் இப்னு யாசிர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் உமர் (ரலி) அவர்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

பெண்கள் ஜனாபத்திற்காகக் குளிக்கும் போது சடை மயிர்களை அவிழ்த்து விட்டுக் கொள்ளவேண்டுமென்று அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். ஆனால், அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் அப்படி அவிழ்த்துவிடத் தேவையில்லை என்று கூறுகிறார்கள்.

இப்படி அருள்மிகு ஸஹாபாப் பெருமக்கள் காலத்திலேயே எண்ணிறந்த கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு விட்

டன. அவர்களுடைய வரலாறுகளை அலசி ஆராய்கின்ற போது அவர்களிடையேயிருந்த கருத்து வேறுபாடுகள் அதிகமதிகம் இருந்த போதிலும் அவர்களிடையே அன்பு நிலவி வந்தது என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். எனவே கருத்து வேறுபாடுகள் என்பது இயற்கையானது தான்.

மக்கள் விரிவடைந்து விட்ட தாபியீன்கள் காலத்திலும் அதனையடுத்து அதிகமதிகம் விரிந்து பெருகிவிட்ட தபஉத் தாபீயீன்கள் காலத்திலும் இந்த வேறுபாடுகள் அபரிமிதமாகி விட்டன. மாநபியின் மணிமொழிகளை அறிவிப்பவர்கள் பல நாடுகளில் பிரிந்து வாழத்தொடங்கியதன் காரணமாக மணிமொழிகளை அறிவிப்பதிலும் முரண்பாடுகள் தோன்றின. அவர்களுடைய நடைமுறைகளும் சிறிது மாறுபட்டிருந்தன. மக்காவில் வசிப்பவர்கள் தொழுகையின் போது கைகளை உயர்த்தினார்கள். கூபாவில் வசிப்பவர்களோ அப்படி கைகளை உயர்த்துவதில்லை.

இப்படி வணக்க வழிபாடுகளில் வேறுபாடுகள் அதிகமாகி விட்ட கால கட்டத்தில்தான் உண்மையான நடை முறைகளைக் கண்டு கொள்ளும் பொருட்டு அறிவு ஜீவிகளான இமாம்கள் தோன்றினர். இப்ராஹீம் நுகயீ, அபூஹனீபா மாலிக், ஷாபியீ, அஹ்மது இப்னுஹன்பல், சுப்யான் இப்னு உயைனா, வகீஃ, அவ்ஸாயீ, தவ்ரி போன்ற பெரும்பெரும் மேதைகள் மெய்யாய மணிமொழிகளைக் கண்டு அவற்றில் இருந்து சட்டங்களைத் தோண்டியெடுக்கும் பணியில் ஈடுபட்டார்கள். அல்லும் பகலும் அயராது உழைத்து பெரும்பாடு பட்டார்கள்.

மாநபி மணிமொழிகளும், அன்னவர்களின் அருளார்ந்த நடைமுறைகளும் பல நாடுகளிலும் பிரிந்து பரவி வாழ்கின்ற மக்களில் அறவோர்களாகத் திகழும் சிலரிடமே மறைந்து போய்க் கிடந்தன. அறவோர்களை இனம் கண்டு அவர்களிலிருந்து மெய்யாய மணிமொழிகளையும், நடைமுறைகளையும் கண்டு கொள்ளவேண்டிய கட்டாய நிலை இருந்து



வந்தது. இதுமட்டுமல்ல, அம்மெய்யாய மணிமொழிகளை அறிந்து கொண்டு அப்பால் அம்மணி மொழிகளிலிருந்து எள்ளின் நுனியளவுகூட மாறுபடாத சட்டங்களை விளக்கி வைக்க வேண்டிய நிலையும் இருந்தது.

## மணிமொழிகளைக் கண்டுகொள்ள பேரார்வம்

எனவே இது பேரலைகளை எழுப்பிக் கொண்டிருக்கும் மாபெரிய கடல், ஆழம் காணமுடியாத ஆழ்கடல். அந்தக் கடலிலே மூழ்குவதற்கும் ஆரம்பத்தில் அவர்கள் திகைத்தார்கள்; தயங்கினார்கள். ஏன் தெரியுமா? எனதரும் நேயர்களே! கொஞ்சம் கவனியுங்கள்!

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்: ''எவன் வேண்டுமென்றே என்மீது பொய்யுரைக்கின்றானோ அவன் தங்குமிடம் நரகமாகும்.''

இம்மணிமொழியின் பொருளை உணர்ந்த அவர்கள் அஞ்சினார்கள். ஏந்தல் நபியவர்கள் சொல்லாத ஒன்றை சொல்ல நேர்ந்திடுமோ! இதனால் எரி நரகில் புகவேண்டிய நிலை ஏற்படுமோ! என ஏங்கி அவர்கள் ஆரம்பத்தில் தயங்கினாலும் அண்ணல் நபியவர்களுடைய மணிமொழிகளின் உண்மைகளைக் கண்டு கொண்டு உலகிற்கு எடுத்துரைக்க வேண்டுமே என்ற ஆர்வத் துடிப்பு மிகுதியால் அம்மாபெரும் பணியில் ஈடுபட்டார்கள். அப்படி அவர்கள் ஈடுபடும் ஒவ்வொரு கட்டத்திலும் இறையச்சத்தைக் கடைபிடித்தார்கள்.

மாநபியின் மணிமொழிகளை மிகத் துல்லியமாக அறிந்து கொள்ளும் பொருட்டு அம்மணிமொழிகளை அலசி ஆராய்வார்கள். அப்பால் அம்மணிமொழிகளை அறிவிப்பவர் யார் யார்? அவர்களிடம் இறையச்சம், நேர்மை, வாய்மை, தூய்மை, நினைவாற்றல் போன்ற மேலாம் பண்புகள் இருந்தனவா? என்பதை வரலாற்று ரீதியாக ஆராய்வார்கள்.

இப்படி மணிமொழிகளை அறிவிக்கின்ற ஒவ்வொருவரைக் குறித்தும் ஆராய்ந்து அப்பால் அவர்களுடைய

உண்மை நிலைகளின் அடிப்படையில் மணிமொழிகளுடைய உண்மையைக் கண்டறிய முயல்வார்கள். எந்த வாகன வசதியும் சாலை வசதியும் இல்லாத பாலைவன நகர்களில் கால் நடையாகச் சென்று ஒவ்வொரு அறிவிப்பாளர் குறித்தும் ஆராய்வார்கள். ஏனெனில் அறிவிப்பாளர்களுடைய உண்மையான நிலைகளை அனுசரித்தே மாநபிமணிமொழிகளின் உண்மைகளைக் கண்டறியப் படுகிறது.

இமாம் ஷாபியீ (ரஹ்) அவர்கள் எகிப்து, இராக், ஷாம், ஜோர்டான் முதலான நாடுகளுக்கெல்லாம் எண்ணத் தொலையாத இன்னல்களை ஏற்றுக் கொண்டு இம்மாபெரும் பணியில் கடும் பயணத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் நெடுகிலும் பயணம் செய்யாவிடினும் அவர்கள் வசித்து வந்த மதீனா நகரில் உலகெங்கிலும் இருந்து புனித ஹஜ்ஜை நாடிவரும் எண்ணிறந்த அறிஞர்கள் அறவோர்களெல்லாம் வந்து குவிவார்கள். அப்படிக் குவிகின்ற மக்களிடத்தில் கருணை நபியவர்களுடைய கன்னல் மொழியினைக் கேட்டுத் தெரிந்து கொள்வார்கள்.

இப்படியே இமாம் அபூஹனீபா (ரஹ்), இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் (ரஹ்) போன்ற பேரறிஞர்களெல்லாம் கடும் முயற்சி செய்துள்ளார்கள். மணிமொழிகளை மட்டுமல்ல; மணிமொழிகளை அறிவிப்பவர்களுக்கும் கடும் நிபந்தனைகளை விதித்து அந்நிபந்தனைகளுக்குட்பட்டவர்களிடமிருந்தே மணிமொழிகளைப் பெறுவார்கள். அப்படி நிபந்தனைக்குட்படாதவர்கள் எத்துணை பெரியமேதைகளாக இருந்திடினும் அவர்களிடமிருந்து அம்மணிமொழிகளைப்பெறுவதில்லை. எனவே மெய்யாயமணிமொழிகளைக் கண்டு கொள்வதற்காகவும் அம்மணிமொழிகளை அறிவிப்பவர்களின் உண்மை நிலையைக் கண்டு கொள்வதற்காகவும் கடும் பிரயாசையினை மேற்கொண்டிருக்கிறார்கள்.



இப்படி அவர்கள் அறிவும், அறமும், பத்தியவாழ்வும், வணக்கமும், வழிபாடும் நிரம்பப் பெற்று அல்லாஹ்வினுடைய அருளுக்கு இலக்கானவர்களாக இருந்துகொண்டு மாநபியின் மணிமொழிகளின் உண்மைகளை மட்டுமல்ல; அம்மொழிகளில் மறைந்து கிடக்கின்ற மகத்தான சட்டங்களையும் அவனி மாந்தர்களுக்கு விளக்கித் தந்தார்கள். அப்படி மணிமொழிச் சட்டங்களை விளக்கிட அவர்கள் ஆற்றிய அரும்பணிகள் உலகம் வியந்து பாராட்டக் கூடியதொன்றாகும். சட்டங்களின் மகத்துவம் அவர்கள் காலத்தில் உணரப்பட்டது.

## அரிய நிபந்தனைகள்

வான் மறையிலிருந்தும் வள்ளல் நபிமொழியிலிருந்தும் சட்டங்களைத் தோண்டியெடுப்பதற்கு எத்தனை எத்தனை நிபந்தனைகளை அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள் தெரியுமா? அந்த நிபந்தனைகளையெல்லாம் வரிசைப்படுத்தி எண்ணிப்பார்க்கும்போது நமக்கெல்லாம் மலைப்பாகத் தோன்றும். அவர்கள் ஏற்படுத்திய நிபந்தனைகள், சொல்லியல். இலக்கணம், இலக்கியம், மொழி, வரலாறு, இவைகளில் அளப்பெரிய ஞானமும், திறனாய்வும் பெற்று இருக்க வேண்டும்.

அது மட்டுமா? சட்டம், சட்ட ஆதாரங்கள், அவற்றிற்குரிய பரிபாஷைகள், வான்மறை, வள்ளல் நபிமொழி, இவ்விரண்டினுடைய மெய்யாய பொருட்கள், உள்நோக்கங்கள் குறிக்கோள்கள் இவற்றை ஐயமறத் தெரிந்திருக்கவேண்டும் என்பது மட்டுமல்ல, மணிமொழிகளை அறிவிப்பவர்களின் வரலாறுகளையும் நன்கு தெரிந்திருக்கவேண்டும்; இவற்றிற்கெல்லாம் மேலாக தெய்வீக உதிப்பைப் பெறத்தக்க விதத்தில் உளத்தூய்மையையும் தெளிவையும் பெற்றிருக்க வேண்டும்.

# மணிமொழி நூற்கள் சட்ட நூற்கள்

இம்மாபெரும் தகுதிகளையெல்லாம் பெற்ற இமாம்கள் தங்களுடைய தகுதிகளில் மட்டும் சார்ந்திருக்காமல் எந்நேரமும் இறைவனிடம் கையேந்தி மணிமொழிகளுடைய உண்மையினையும் அவற்றில் அடங்கியிருக்கின்ற மெய்யாய சட்டங்களையும் எங்கள் உள்ளங்களில் உதிப்பாக்கி வைப்பாயாக! என்று பிரார்த்தனை செய்தவண்ணம் இருப்பார்கள். அப்பிரார்த்தனையின் பயனாய் கிடைக்கப்பெற்ற மிகையான உள்ளுணர்வின் அடிப்படையில் மணிமொழிகளையும் அவற்றின் சட்டங்களையும் தொகுத்தார்கள். ஆயிரமாயிரம் சட்டங்களையும் அவைகளுக்கான மணிமொழிகளையும் தொகுத்து அவைகளையெல்லாம் நூல் வடிவுக்குக் கொண்டு வந்தார்கள்.

இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் மாநபி மணிமொழிகளைத் தொகுத்து மிகவும் பிரபல்யமான 'முஅத்தா' என்ற மணிமொழி நூலை உலகிற்கு வடித்துக் கொடுத்தார்கள். அப்துல் மாலிக் இப்னு ஜுரைஹ், இமாம் அஸ்ஸாயீ, சுப்யான் அஸ்ஸெளரி, அப்துல்லாஹ் இப்னு முபாரக் போன்ற ஹதீஸ்கலை வல்லுநர்கள் மணிமொழிகளைத் தொகுத்து நூல் வடிவுக்குக் கொண்டு வந்தார்கள். அதனையடுத்து இமாம் அஹ்மது இப்னு ஹன்பல், இமாம் ஷாபியீ, இமாம் அபூஹனீபா, இஸ்ஹாக் இப்னு ராஹவைஹி, உஸ்மான் இப்னு அபீஷைபா போன்றவர்களெல்லாம் தம்முடைய முஸ்னதுகளை நூல் வடிவுக்கு கொண்டு வந்தார்கள்.

இன்னும் எத்தனை எத்தனையோ பேரறிஞர்கள் மாநபியின் மணிமொழிகளைத் தொகுக்கும் பணியில் மூழ்கினார்கள். அதுமட்டுமா?, அம்மணிமொழிகளின் பேருண்மைகளைக் கண்டு அப்பால் அவ்வுண்மையான மணிமொழிகளிலிருந்து மணிமொழிச் சட்டங்களை விளக்கித் தருவதிலே ஆழ்கடலென அறிவுபெற்ற இமாம் அபூஹனீபா, இமாம் மாலிக், இமாம் ஷாபியீ, இமாம் அஹ்மது இப்னு ஹன்பல், அவ்ஸாயீ, சுப்யான் இப்னு உயைனா போன்றோர் மணிமொழிச் சட்டங்களையும் நூல் வடிவுக்குக் கொண்டு வந்தார்கள்.

# நான்கு மணிமொழிச் சட்டங்களே பிரகாசமடைந்தன

தபஉத் தாபியீன்களுடைய காலம் மணிமொழிக் கல்விக்கும், மணிமொழிச் சட்டகல்விக்கும் பொற்காலமாக இருந்தது. அப்பொற்காலத்தில் பிரகாசித்துக் கொண்டிருந்த மேலே கண்ட இமாம்களுடைய சட்டங்கள்தான் நாடு நெடுகிலும் பரவிப் போயிருந்தன. அந்தக் காலத்தில் எங்கு நோக்கினும் இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்களுடைய மணிமொழிச் சட்டங்களும், இமாம் மாலிக் (ரஹ்) அவர்களுடைய மணிமொழிச் சட்டங்களும், இமாம் ஷாபியீ (ரஹ்) அவர்களுடைய மணிமொழிச் சட்டங்களும், இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்களுடைய மணிமொழிச் சட்டங்களும்விண்மீன்களைப்போன்று பிரகாசித்துக்கொண்டிருந்தன

எத்தனையோ ஹதீஸ்கலை வல்லுநர்கள், இமாம்களுடைய மணிமொழிச் சட்டங்களிலே மாநபி மணிமொழிகள் இலங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு ஆனந்தம் அடைந்து அச்சட்டங்களுக்குள்ளே புதைந்து போய் விட்டனர். ஏனெனில் அப்பெரும் இமாம்கள், மாநபி மணிமொழிகளுக்கு எள்ளின் நுனியளவு கூட மாறுபடாமல் மணி மணியான சட்டங்களை விளக்கித் தந்தார்கள். அந்தப் பொற்காலத்தில் தான் மாநபி மணிமொழிகளும் அவற்றிலிருந்து தோண்டியெடுக்கப்பட்ட சட்டங்களும் அவனியை ஒளிபெறச் செய்தன.

எண்ணிறந்த அறிஞர் பெருமக்கள் இத்துறையில் மாபெரும் முயற்சியை மேற்கொண்டாலும் நன்மணிகளான இமாம் அபூஹனீபா, இமாம் மாலிக், இமாம்ஷாபியீ, இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் ஆகியோர்களை அல்லாஹ் அவனியில் மேலோங்கச் செய்தான். நூற்றுக்கணக்கான இறைத்தூதர்களில் மூஸா (அலை), தாவூத் (அலை), ஈஸா (அலை) முஹம்மது (ஸல்) ஆகியோரை மேலோங்கச் செய்ததுபோல, ஆயிரக்கணக்கான நபித்தோழர்களில் அபூபக்கர், உமர்,

உஸ்மான், அலி ரலியல்லாஹு அன்ஹும் ஆகியோரை மேலோங்கச் செய்தது போல,

மாநபி மணிமொழிகளாலும், மணிமொழிச் சட்டங்களாலும் ஒளி பெற்ற இத்தரணி மாந்தர்கள் மணிமொழித் துறையிலும் மணிமொழிச் சட்டத் துறையிலுல் ஆழமாக மூழ்கினார்கள். அவைகளுக்கு விரிவாக்கம் செய்யும் பொருட்டு கூட்டம் கூட்டமாக அறிவாளிகள் முயன்றார்கள். விரிவுரை செய்வதிலே அளப்பெரிய தாக்கம் கொண்டார்கள். அபூயூசுப் (ரஹ்), முஹம்மது (ரஹ்), ஹகம் இப்னு அப்திர் ரஹ்மான் (ரஹ்), ரபீஃ இப்னு சுலைமான் (ரஹ்), யூஸுப் இப்னு புவைத்திய்யி (ரஹ்) இன்னும் இவர்களை அடுத்து வந்த எண்ணிறந்த அறிவு ஜீவிகளும் ஆயிரமாயிரம் சட்ட நூற்களையும், விரிவுரைகளையும் எழுதி அவைகளைக் கொண்டு உலகை நிரப்பினார்கள். இத்துறையில் அவர்கள் ஆற்றிய அரும் பணிகளும், சந்தேகத்திற்கிடமில்லாத விளக்கங்களும் வான்மறைக்கும் வள்ளல் நபிமொழிக்கும் அரணாக அமைந்து வழி கெட்டவர்களின் தவறான கருத்துக்கள் அவற்றில் புகா வண்ணம் தடுத்து நிறுத்தி விட்டன.

நபியவர்களுக்கு முன்னால் இறக்கி வைக்கப்பட்ட வேதங்கள் அவற்றிற்குரிய இயற்கையான தன்மைகளை விட்டும் மாற்றப்பட்டு விட்டன. அவ்வேதங்களுக்குச் சொந்தக்காரர்களென சொல்லிக்கொண்ட வேத அறிஞர்கள், அவற்றில் தம்முடைய சொந்தக் கருத்தைப் புகுத்தி அதையே வேதமெனக் கூறினார்கள். அவ்வேதங்களில் அடங்கியுள்ள இறைச் சட்டங்களையெல்லாம் புறக்கணித்து விட்டு அவைகளுக்கு மாற்றமான எதிரான சட்டங்களையே மக்களுக்குக் கூறிவந்தார்கள். இதன் காரணமாக அவ்வேதங்கள் உரு மாறி மறைந்து போய்விட்டன, அழிந்து போய் விட்டன.

## நபித்தோழர்கள் குர்ஆனுக்கு அரண் செய்தார்கள்

ஆனால் வான்மறை அல்குர்ஆன் அழியாதது. என்றென்றும் நிலையானது, ஜீவத்துடிப்புடன் இயங்கக்கூடியது.



இத்துணை மகத்துவ மிக்க அல்குர்ஆனை அண்ணல்நபி (ஸல்) அவர்கள் தமதரும் தோழர்கள் என்ற நிலத்தில் பயிரிட்டு வளர்த்தார்கள். அப்பயிரை அத்தோழர்கள் பழுது நேரா வண்ணம் காப்பாற்றி அதற்கு அரணாக அமைந்தார்கள். அரண் செய்யப்பட்ட அல்குர்ஆனுக்கு விளக்கமாக அண்ணல் நபி(ஸல்) அவர்களுடைய மணிமொழிகள் அமைந்திருந்தன. அம்மணிமொழிகளில் உண்மையானவற்றை அறிந்து அவைகளிலிருந்து சட்டங்களை ஆராய்ந்து எடுத்து அவனியோருக்கு வழங்க வேண்டிய பொறுப்பு தபஉத் தாபியீன்களிடத்தில் விடப்பட்டிருந்தது. எனவே நபித் தோழர்களுக்குப் பிறகு வான்மறை அல்குர்ஆனையும் வள்ளல் நபிமொழிகளையும் பெருமைக்குரிய இமாம்கள் ஆராயத் தொடங்கினார்கள். மிக்க ஆழமாகவும் அகலமாகவும் அவற்றை ஆராய்ந்தார்கள். மணிமொழிச் சட்டங்களை சமைத்திட பெரும் பாடுபட்டார்கள். ஹிஜ்ரீ 100-வது ஆண்டிலிருந்து 250-வது ஆண்டு வரை தொடர்ந்து தொய்வில்லாது ஆராய்ந்து ஆராய்ந்து மணிமொழிச் சட்டங்களை உலகிற்கு வழங்கினார்கள்.

## நபிமொழிக்கு இமாம்கள் அரண் செய்தனர்

வான்மறையையும் வள்ளல் நபிமொழிகளையும் எப்படி விளங்க வேண்டுமென்பதற்கு பல உஸுல்களையும் அடிப்படைகளையும் உறுதிப்படுத்தினார்கள். மணிமொழிகளில் வருகின்ற பதங்களை ஆதாரமாகக் கொள்ளவேண்டுமாயின் எந்த அடிப்படையில் ஆதாரமாகக் கொள்ள வேண்டும் என்பதற்கெல்லாம் விதியமைத்தார்கள். இப்படி பல உஸுல்களையும் விதிகளையும் அமைத்து மணிமொழிகளுக்கு அரண் செய்தார்கள்.

# மத்ஹபுகள்

இப்படி மாநபி மணிமொழிகளுக்கு சட்ட வடிவங்கள் கொடுத்து அவற்றை உலகம் உள்ளளவும் நிலைக்கச் செய்வதற்கு அரும்பணியாற்றியுள்ளார்கள். அவர்கள் ஆற்றிய அரும்பணிகள் வியக்கத் தக்கவை, பாராட்டத் தக்கவை,

அவர்களுக்குப் பின் வருகின்ற அறிவாளிகளுக்கு முன் மாதிரியாக அமைந்திருப்பவை. அவர்கள் விளக்கித்தந்த சட்டங்கள் அறிவுலக மேதைகளால் ஆராயப்பட்டு உறுதி செய்யப்பட்டவை. அணுவளவுகூட மாநபி மணிமொழிகளுக்கு மாறுபடாதவை என தீர்மானிக்கப்பட்டவை. இப்படி அவர்களுக்குப் பின் வந்த ஒவ்வொரு காலத்து அறிஞர்களும் அந்த சட்டங்களை ஏற்று அவற்றை நியாயப்படுத்தியுள்ளார்கள்.

இப்படி எல்லா வகையிலும் உறுதிப்படுத்தப்பட்ட சட்டங்களாகவே மத்ஹபுகள் அமைந்திருக்கின்றன. எனவே மத்ஹபுகள் என்ற மணிமொழிச் சட்டங்களுக்கு அப்பால் மணிமொழிகளைப் பார்ப்பது அறிவுடமையாகாது. ஏனெனில் ஷரீஅத்தினுடைய சட்டங்கள் ஒவ்வொன்றையும் நாம் ஆராய்ந்து பார்ப்போமாயின் அவைகளின் ஆணிவேர் மாநபியின் மணிமொழியாகவே அமைந்திருக்கும். ஆகவே மணிமொழிச் சட்டங்கள் என்கிற மத்ஹபுகளையும், மணிமொழிகளையும் வேறுபடுத்திப் பார்ப்பது நியாயமாகாது.

எனவே இஸ்லாமிய உலகமெங்கிலும் நான்கு வகையான சட்டங்கள்—மத்ஹபுகள் பரவி நிலைத்து விட்டன. எந்தப் பகுதி மக்களிடத்திலும் இந்நான்கு வகையான சட்டங்களே ஆராயப்பட்டு அவைகளை அடியொற்றி வந்தனர். இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்கள் விளக்கியுள்ள சட்டங்கள் மாநபி மணிமொழிகளுக்கு மாறுபடாமல் இருக்கின்றனவா என்பதை அறிவு ஜீவிகளான அபூயூசுப் (ரஹ்) முஹம்மது இப்னு ஹஸன் (ரஹ்) சுபர் இப்னு ஹுதைல் (ரஹ்) ஹஸன் இப்னு ஸியாத் (ரஹ்) ஆகியோர் ஆராய்ந்தார்கள். தங்களுக்கிடையே வாதம் பண்ணினார்கள். மணிமொழித் துறையில் பேரறிவு பெற்ற அவர்கள், இமாமவர்கள் விளக்கிய சட்டங்களில் அதிகமானவை நபிமொழிக்கு மாறுபடவில்லை என்பதை மிகத்தெளிவாக அறிந்து கொண்டார்கள். அவற்றிற்கு மாறுபட்டவைகளையும்கூட தாம், பெற்றிருந்த மணிமொழிகளுக்கொப்ப மாற்றி அமைத்துக் கொண்டார்கள். இப்படி அமைக்கப்பட்ட சட்டங்களுக்கு ஹனபி மத்ஹபு என்று



என்று வழக்கில் கூறப்பெற்று அப்பால் அது இன்று வரை நிலைத்து விட்டது. கூபாவில் பிரகாசிக்கத் தொடங்கிய இம் மத்ஹப் இஸ்லாமிய உலகின் பெரும்பகுதியில் பரவத் தொடங்கியது, அது மட்டுமல்ல, ஒவ்வொரு தலை முறையிலும் ஆயிரமாயிரம் அறிவு மேதைகள் தோன்றி அச்சட்டங்களுக்கு விரிவுரை நூற்களை எழுதி மக்களிடையே பரப்பி மாபெரும் தொண்டாற்றி வந்தார்கள்.

இமாம் ஷாபியீ (ரஹ்) அவர்கள், அருள் மொழிகளை ஆராய்ந்து ஆராய்ந்து அவற்றில் இழையோடிக் கொண்டிருந்த எண்ணிறந்த சட்டங்களை விளக்கித் தந்தார்கள். அவர்கள் விளக்கித் தந்த சட்டங்கள் ஒவ்வொன்றிலும் நபி மொழிகளே பிரகாசித்துக் கொண்டிருந்தன. அவர்களே பல அரிய மணிமொழிச் சட்ட நூற்களை இயற்றி நாடு நெடுகிலும் பரப்பினார்கள். அவர்களுடைய மாணவர்களான இமாம் முஸ்னி, இமாம் ஸெளரி, இமாம் புவைத்தி போன்றவர்கள் இமாமவர்கள் விளக்கித் தந்த சட்டங்கள் மாநபி மணிமொழிகளுக்கு எள்ளின் நுனியளவு கூட மாறுபடவில்லை என்பதை அலசி ஆராய்ந்து உறுதி செய்தார்கள்.

இப்படி உறுதி செய்யப்பட்ட மணிமொழிச் சட்டங்களே ஷாபியீ மத்ஹப் என்று வழக்கில் கூறப்பட்டு அதுவே மிகவும் பிரபலமடைந்து விட்டது. அவர்களுக்குப் பிறகு ஒவ்வொரு காலத்திலும் பேரறிஞர்கள் அம்மத்ஹபினுடைய சட்டங்களை ஆராய்ந்து ஆராய்ந்து அவை நபி மொழிகளுக்கு முற்றிலும் நேர்பட்டிருந்தனஎன்ற பேருண்மையை விளக்கி ஆயிரமாயிரம் நூற்களை வெளியிட்டனர். எனவே ஷாபியீ மத்ஹப் மணிமொழித் துறையில் ஈடுபாடு உள்ள வல்லுநர்களாலும் உறுதி படுத்தப்பட்டு உலகெங்கிலும் பிரகாசிக்கத் தொடங்கியது.

இப்படி இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் விளக்கித் தந்த மணிமொழிச் சட்டங்களுக்கு மாலிக் மத்ஹப் என்றும், இமாம் அஹ்மது இப்னுஹன்பல் (ரஹ்) அவர்கள் விளக்கித் தந்த மணிமொழிச் சட்டங்களுக்கு ஹன்பலி மத்ஹப் என்றும் மக்களால் சொல்லப்பட்டு நெடுகிலும் பிரகாசிக்கதொடங்கின.

எனவே மேலே கண்ட நான்கு மத்ஹபுகள் இமாம்களுடைய யூகத்திலிருந்தோ அனுமானத்திலிருந்தோ பிறந்தவை அல்ல. நபிமொழிகளிலிருந்து ஆராய்ந்தெடுக்கப்பட்டவைகளாகும். அவர்களின் சட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் நபிமொழியே ஆணிவேராக இருந்திருக்கிறது. ஆகையினால் மத்ஹபுகள் மாநபி மணிமொழிகளுக்கு எள்ளின் நுனியளவு கூட மாறுபட்டவைகளாக இல்லை. அது அறிவுத் திலகங்களால் உறுதிசெய்யப்பட்ட பேருண்மையாகும்.

ஆனால் சிலர், மத்ஹபுகள் வேறு மணிமொழிகள் வேறு என்று கற்பித்துக்கொண்டு 'மத்ஹபுகளின்படி நடப்பவர்கள் நபிமொழிக்கு மாறாக நடப்பவர்கள்' என்று இட்டுக்கட்டி பொய்யுரைக்கின்றனர். இப்படிப்பட்டவர்கள் ஒவ்வொரு காலத்திலும் தோன்றி மத்ஹபுகளோடு மோதியே வந்திருக்கின்றனர். அவர்களுடைய மோதல்கள் கற்பாறைகளில் எறியப்பட்ட கண்ணாடிகள் போல துகள் துகளாக, பொடிப் பொடியாக நொறுங்கி சிதைந்து விட்டன.

எனவே மத்ஹபுகளின்படி நடப்பவர்களே நபிமொழிப்படி நடப்பவர்களாகும். ஏனெனில் மத்ஹபுகள் நபிமொழிகளிலிருந்து ஆராய்ந்தெடுக்கப்பட்ட சட்டங்கள் என்பதால்,

மத்ஹபுகள் நான்காயினும் அவைகளின் அடிப்படைகள் ஒன்றுதான். பெரும்பாலான சட்டங்கள் ஒரே அசலை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதினால் அவைகளின் வேறுபாடுகள் அன்பையே வளர்க்கின்றன. உண்மையைக் கண்டறிய ஆர்வத்தைத் தூண்டுகின்றன.

இம்மாபெரும் மத்ஹபுகளை அற்புதமாய் விளக்கித் தந்த தங்க மணிகளாகத் திகழும் நான்கு இமாம்கள் குறித்து மணிமொழிகளின் தொடர்புகளோடு கூடிய வரலாற்றை மிக சுருக்கமாகக் கூறுகிறேன். நீங்கள் கருத்தூன்றிப் படியுங்கள்.

# இமாம் அபூஹனீபா (ரஹ்)

இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்கள் ஹிஜ்ரீ 80-ல் பிறந்து 150-ல் மரணிக்கின்றார்கள். அவர்கள் அறிவுக் கடலாக, அறவோர் திலகமாக, அள்ளி வழங்கும் வள்ளலாக அடக்கத்தின் பேருருவாக ஆன்றோர்களின் ஆசானாக இலங்கி வந்தார்கள். அவர்கள் மாநபியின் மணிமொழிகளுடைய உண்மையை உறுதியாக அறிந்துவிட்டார்களாயின் அதனை இருகப்பற்றி நடப்பார்கள்.

ஒருநாள் இமாமவர்களிடம் ஒருவர் வந்து, அருள் நபியவர்களின் அருஞ்சொற்களைப் பார்க்கிலும் உமதறிவுக்கு நீர் முதலிடம் கொடுக்கின்றீராமே! என வேகமாகக் கேட்டார். உடனே இமாம் அவர்கள், ''மாநபியின் மணிமொழிகளைப் பார்க்கிலும் என் அறிவுக்கு நான் முதலிடம் கொடுக்கிறேன் என்று என்மீது எவன் இட்டுக்கட்டி கூறுகிறானோ அவன் அப்பட்டமான பொய்யன், மெய்யாய மணிமொழிச் சட்டத்திற்கு அப்பால் அனுமான அறிவுக்கு இடமுண்டோ!'' என்று உரைத்தார்கள்.

## அனுமானத்திற்கு முதலிடமா?

இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்கள் தன் அனுமான அறிவுக்கே முதலிடம் கொடுக்கிறார்கள் என்று அன்றைய ஹதீஸ் கலை வல்லுநர்களில் பலர் குறை கூறியிருக்கிறார்கள். இப்படி அவர்கள்பால் குறை கூறுவது முறையாகாது. உண்மையாகாது. மாநபி மணிமொழிக்கே அவர்கள். முதலிடம் கொடுத்திருக்கிறார்கள். மாநபி மணிமொழிகள் இல்லையாயின் மணிமொழிச் சட்டங்களை என்னால் எவ்வாறு விளக்க முடியும்? மணிமொழிகளை மாநபி மணிமொழிகளை அடிப்படையாகக் கொண்டே எடுத்திருக்கிறேன் என்று இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்கள் பல இடங்களில் அறுதியிட்டுக் கூறியிருக்கிறார்கள்,

அனுமானத்தைவிட மாநபி மணிமொழிக்கே அவர்கள் முதலிடம் தந்துள்ளார்கள். மாநபி மணிமொழிக்கு மாறாக அவர்கள் நடந்ததுமில்லை. அதனை அவர்கள் விட்டதும் இல்லை, ஆயினும் அவர்கள் மணிமொழிகளை அறிவிக்கக் கூடிய அறிவிப்பாளர்களிடையே தரம் பிரித்திருக்கிறார்கள். எவர்எவர் மிக்கமேலானவர் என்று தான் கருதுகிறார்களோ அத்தகையவர்களிடமிருந்து மட்டுமே மணிமொழிகளை ஏற்றுக்கொள்வார்கள். இந்த விஷயத்தில் அவர்கள் மிகக் கடுமையாக இருந்திருக்கிறார்கள்.

## இரு பெரும் இமாம்களிடையே வாதம்

ஹதீஸ் கலை வல்லுநரான இமாம் அவ்ஸாயீ (ரஹ்) அவர்களும், இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்களும் ஒரு தையல் நிறுவனத்தில் வைத்து எதிர்பாராத நிலையில் ஒருவரையொருவர் சந்தித்துக் கொண்டனர். அவ்விருவரும் மணிமொழிச் சட்டங்கள் குறித்து உரையாடிக் கொண்டிருந்தனர்.

அப்போது இமாம் அவ்ஸாயீ (ரஹ்) அவர்கள் இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்களை நோக்கி, ''நீங்கள் தொழுகையில் ருகூவுக்குச் செல்லும்போதும் அதிலிருந்து உயரும் போதும் இரு கரங்களையும் உயர்த்துவதில்லையே ஏன்?'' எனக் கேட்டார்கள். அதற்கு அபூஹனீபா (ரஹ்) அவர்கள் ''இது குறித்து நபிமொழி எதுவும் வரவில்லையே!'' என பதிலளித்தார்கள்.

உடனே அவ்ஸாயீ (ரஹ்), அவர்கள் ''நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுகையில் ருகூவுக்குச் செல்லும்போதும் அதிலிருந்து உயரும்போதும் தம்மிரு கரங்களையும் உயர்த்தியிருக்கிறார்கள். இம்மணிமொழியினை ஸுஹரீ (ரஹ்), ஸாலிம் (ரஹ்), அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) ஆகிய உத்தமர்கள் அறிவித்திருக்கிறார்கள். இவ்வறிப்பாளர்கள் நேர்மையானவர்கள். உறுதி மிக்கவர்கள், இப்படிப்பட்டவர்களைக் கொண்டு அறிவிக்கப்பட்ட மணிமொழி உங்களுக்குக் கிடைக்கவில்லையா!'' எனக் கேட்டார்கள்.



அதற்கு இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்கள், ''நான் சொல்வதையும் கொஞ்சம் கவனியுங்கள்! 'அருள் நபியவர்கள் தொழுகையில் தக்பீர் தஹ்ரீமாவிற்கே தவிர வேறெங்கும் தம் கரங்களை உயர்த்தவில்லை.' இம்மணிமொழியினை ஹம்மாத் (ரஹ்), இப்ராஹீம் (ரஹ்). அல்கமா (ரஹ்) அஸ்வது (ரஹ்) அப்துல்லாஹ் இப்னு மஸ்வூது (ரலி) ஆகிய அறிவிப்பாளர்கள் அறிவித்திருக்கின்றனர்'' என்று இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்கள் கூறி முடிப்பதற்கு முன்னரே இமாம் அவ்ஸாயீ (ரஹ்) அவர்கள் குறுக்கிட்டு, ''என்ன நீங்கள்! நான் ஸுஹரீ, ஸாலிம். இப்னு உமர் போன்ற மேலோர்களை நல்லோர்களைக் கூறுகிறேன். நீங்கள் ஹம்மாத், இப்ராஹீம் என்று கூறுகிறீர்களே! இஃதென்ன நியாயம்? எனக் கேட்டார்கள்.

உடனே இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்கள் கொஞ்சமும் தயங்காமல் ஹம்மாத், இப்ராஹீம் அல்கமா போன்றோர் சட்டத் துறையில் திறனாய்வு பெற்றவர்கள், இப்படிப்பட்டவர்கள் மணிமொழிகளை அறிவிப்பதில் மிக்க மேலானவர்களாகும். இப்படி திறனாய்வு பெற்ற அறிவிப்பாளர்களின் மணிமொழியை நான் ஏற்க வேண்டாமா? இன்னும் கொஞ்சம் கவனியுங்கள்! ஸாலிம் (ரஹ்) அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) இவர்களை விட அல்கமா (ரஹ்) அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் (ரலி) ஆகியவர்கள் கொஞ்சமும் மட்டமானவர்களல்லவே என்று இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்கள் மேலும் கூறினார்கள்.

எனதரும் நேயர்களே! மேலே கண்ட சம்பவத்தை கொஞ்சம் கவனியுங்கள். இருபெரும் இமாம்கள் மெய்யாய மணிமொழிகளைக் கண்டு கொள்ள மிக்க உறுதியோடு இருந்திருக்கிறார்ாள். ஆனால் மணிமொழிகளை அறிவிப்பவர்களை நியாயப்படுத்துவதிலும், நேர்மைப்படுத்துவதிலும்

தரம் பிரிப்பதிலும் வாக்குவாதம் பண்ணியிருக்கிறார்கள். ஏனெனில் அறிவிப்பாளர்களுடைய நேர்மையான உண்மையான நடைமுறைகளை மையமாகச் கொண்டு தான் மணிமொழிகளுடைய உண்மைகளை கண்டு கொள்ளப்படுகிறது. நேர்மையான நடைமுறைகளை மட்டும் இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்கள் கவனத்தில் கொள்ளவில்லை. அறிவிப்பாளருடைய விளக்கம், நினைவாற்றல் இவற்றையும் பிரதானமாகக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த வகையில்தான் இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்கள், அல்கமா, அஸ்வது, இப்னு மஸ்ஊது (ரலி) அறிவித்த மணிமொழிகளை மேலெனக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்குப் பிறகு வந்த ஹதீஸ் கலை வல்லுநர்களும் அறிவிப்பாளர்களுக்கு கடும் நிபந்தனைகளை விதித்து அந்நிபந்தனைகளுக்கு'உட்பட்ட மணிமொழிகளை மட்டுமே மெய்யானவை என்று உறுதிப்படுத்தினார்கள். எனவே இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்கள் மணிமொழிகளை அலசி ஆராய்ந்து அவற்றின் உண்மைகளை கண்டு கொண்ட பிறகே அவற்றை பின்பற்றுவார்கள்; கூறுவார்கள்.

## நபிமொழியைப் பின்பற்றுதல்

ஒருநாள் இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்கள் பஜ்ரு தொழுகையை முடித்து விட்டு தித்திக்கும் தேன்மறையாம் அல்குர்ஆனை அவர்களுக்கே உரிய இனிய குரலில் மெய்மறந்து ஓதிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒருவர் அங்கு வந்து,

''நீர் அறிவின் வழி நடப்பதாகவும் வள்ளல் நபிமொழியை விட்டு விடுவதாகவும் நான் கேள்வியுற்றேன் இது உண்மையா?'' எனக் கேட்டார்.

அதற்கு இமாமவர்கள் தம் கரத்தில் மலர்ந்து கொண்டிருந்த மாமறையினை சுட்டிக் காட்டி, இதோ பாருங்கள்! அவனியோருக்கு நேர்வழி காட்டும் அல்குர்ஆன்! இதில் ஒளிர்கின்ற சட்டங்களையே நான் பின்பற்றுகிறேன் என்றும்



எனக்கு இதில் எந்த ஒரு சட்டமும் கிடைக்கப் பெறாவிட்டால் வள்ளல் நபிமொழியில் இலங்கிக் கொண்டிருக்கின்ற சட்டத்தைப் பின்பற்றுவேன் என்றும்,

அதிலும் எனக்கு எந்த சட்டமும், கிடைக்காவிடில் மாநபியின் மடியில் வளர்ந்து பக்குவம் பெற்று பொன்னிழைகளாக ஒளிர்கின்றார்களே அப்படிப்பட்ட ஸஹாபாப் பெருமக்களுடைய நடை-முறைகளைப் பின்பற்றுவேன் என்றும் கூறினார்கள். இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்களுடைய கூற்று உலக முஸ்லிம்கள் அனைவரும் பின்பற்றுவதற்கான அருமையான வழியாகும்.

## அள்ளி வழங்கும் வள்ளல்

இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்கள் குவியல் குவியலான செல்வங்களைப் பெற்றிருந்தார்கள். அச்செல்வங்களையெல்லாம் இறைவழியில் ஏழை எளியவர்களுக்கு அள்ளி அள்ளி வழங்கினார்கள். தனதண்மையில் வசிப்பவர்கள் யாராக இருந்தாலும் — யூதனாக இருந்தாலும், கிறிஸ்தவனாக இருந்தாலும் தாராளமாக வழங்குவார்கள். குறிப்பாக மாநபி மணிமொழிச் சட்டங்களை போதிப்பதற்காக மாபெரும் மத்ரஸா ஒன்றையே நிறுவினார்கள். அம்மத்ரஸாவில் பயிலும் மாணவர்களில் அநேகருக்கும் உணவும், உதவியும் வழங்கினார்கள். அதுமட்டுமல்ல, அவர்களில் சிலருடைய இல்லங்களுக்கும் உதவித் தொகை வழங்கினார்கள். தம்செல்வங்கள் யாவற்றையும் மார்க்கக் கல்விக்காகவே அர்ப்பணித்தார்கள்.

தம் மத்ரஸாவில் பயிலும் மாணவர்களை பல அணியினராகப் பிரித்து வைத்தார்கள். இவர்களில் முதல் அணியினர் ஹதீஸ் கலை வல்லுநர்கள், இரண்டாம் அணி சட்டவியல் வல்லுநர்கள் இவ்விரு அணியிலும் அபூயூசுப், முஹம்மது இப்னு ஹஸன், ஸுபைர் இப்னு ஹுதைல், ஹஸன் இப்னு ஸியாத் அல்லுஃலுஃ(ரஹ்) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இம்மாபெரும் மாணவர்களிடையே தாம் விளக்கிய சட்டங்களை பரிசீலனைக்கு விட்டு விடுவார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் இமாமவர்கள் விளக்கிய சட்டங்களையும் அவைகளுக்கு ஆதாரமான மணிமொழிகளையும், அம்மணி மொழிகளை அறிவிக்கும் அறிவிப்பாளர்களையும் அலசி ஆராய்வார்கள். பல நாட்கள் ஆராய்வார்கள். ஆராய்ந்து ஆராய்ந்து இறுதியாக இமாமவர்கள் விளக்கிய சட்டங்களே மெய்யானவைகள், உண்மையானவைகள் என்ற முடிவுக்கு தள்ளப்பட்டு விடுகிறார்கள்.

இவர்கள் அனைவரும் இமாமவர்கள் விளக்கிய மணி மொழிச் சட்டங்களை வரிசைப்படுத்தி அப்பால் அவைகளுக்கு ஆதாரமான மணிமொழிகளையும் இறை வசனங்களையும் கொண்டு வந்து பல்லாயிரம் பக்கங்கள் கொண்ட நந்நூற்களை இவ்வுலகிற்கு வழங்கினார்கள். இதன் பிறகுதான் இவ்வுலகம் சட்டத்தின் மாண்பினையே உணரத் தொடங்கியது.

## வான்மறை ஓதுவதில் இன்பம் கண்டார்கள்

இப்படியெல்லாம் இமாமவர்கள் இரவும் பகலும் வான் மறையின் வசனங்கள், வள்ளல் நபியின் மணிமொழிகள், இவற்றில் மறைந்து கிடக்கின்ற சட்டங்களை விளக்குவதில் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார்கள். அதேநேரத்தில் அல்லும் பகலும் அல்லாஹ்வை வணங்குவதிலும் அல்குர்ஆனை ஓதுவதிலும் அதில் ஒளிர்கின்ற ஒப்பற்ற கருத்துக்களை அள்ளிப் பருகுவதிலும் இன்புற்று வந்தார்கள்,

இறையாண்மைகளை எடுத்துரைக்கும் உறுதி மிக்க வசனங்களை ஓதும்போது அவர்களுடைய உள்ளம் கதிரவன் ஒளிபட்ட பனிபோல் உருகிவிடும். உடல் நடுங்கிவிடும். அவர்களிரு கண்களிலிருந்தும் கண்ணீர் அருவியென ஓடும். தேனினும் இனிய இறை வசனங்களினால் ஈரமுற்ற அவர்களுடைய நாவு,



''ஏ அல்லாஹ்! உன் அடிமை நுஃமானை நீ மன்னித்துவிடு! உன் பெரும் கருணைக் கடலில் அவரைப் புகச் செய்; அவருடைய வாழ்வில் நன்மையைப் பெருகச் செய். நரக நெருப்பிலிருந்து அவரைக் காப்பாற்று! ஏ அல்லாஹ்! நீ மகா கருணையாளன்!'' என்று திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டேயிருக்கும்.

இப்படி தம்முடைய வாழ்நாட்கள் எல்லாவற்றையும் இறைப் பணியிலும், வான்மறை வசனங்களையும் வள்ளல் நபிமொழிகளையும் ஆராய்ந்து ஆராய்ந்து அவனியோருக்கு அருள்மொழிச் சட்டங்களை உருவாக்கிக் கொடுப்பதிலும் அர்ப்பணித்துக் கொண்டார்கள். அது மட்டுமல்ல, தனக்கு இறைவன் வழங்கிய செல்வங்கள் யாவற்றையும் இறை மொழியிலும், மார்க்க நெறியினைப் பரப்புவதிலும் வாரி வாரி வழங்கினார்கள். ஒரு துளி நேரத்தைக்கூட வீணாக்காமல் இறையருளைப் பெறுவதிலும் அவ்வருளை மக்கள் பெற்று இன்புறச் செல்வதிலும் கழித்தார்கள்.

## சேவையின் திருவுருவம் மறைவு

இதோ மகாமகா மேதையான, அரும்பணிகளின் திரு உருவான அருள் நபியின் அருஞ்சொற்களுக்குப் பணியாளரான இறையொளி சிந்திடும் திருமுகத்துடையவரான அறிவுக் கடலாய்த் திகழ்ந்த அபூஹனீபா, ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் ஹிஜ்ரீ 150-ஆம் ஆண்டில் வபாத்தடைகின்றார்கள். அவர்களுடைய வபாத்துச் செய்தியைக் கேள்வியுற்ற கார்மேகம் அழத் தொடங்கியது. கதிரவன் பேரொளி மங்கியது. அவனியோர் கண்கலங்கி நின்றனர், அவர்களிடம் பாடம் கற்ற அறிவு ஜீவிகள் நிலை குலைந்து விட்டனர்.

—★—

# இமாம் மாலிக் (ரஹ்)

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அருள்மொழி பொங்கும் பொய்கையாகவும் பாசமலர்கள் பூத்துக் குலுங்கும் பசுஞ் சோலையாகவும் எழிலுறும் வண்ணம் மதீனா நகர் இலங்கிக் கொண்டிருந்தது. அப்பெரு நகரில் பேரறிவு மிக்க இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் ஹிஜ்ரி 83-ல் பிறந்து 179-ல் வபாத்தாகின்றார்கள். அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள்பால் அளவிலா அன்புகொண்டு அவர்களின் அருள் மொழியினை அணுவணுவாய் அடியொற்றி வந்தார்கள். அதுமட்டுமா? அம்மணிமொழிகளை அவனியோருக்குப் போதிக்கும் போது, ஒலுச் செல்து மணம் பூசி அகத் தூய்மை யோடு அவை நடுவே அமர்ந்து அருமையான பாங்குடன் போதிப்பார்கள்.

மெய்யாய மணிமொழிகளைக் கண்டுகொள்ள நாடு நெடுகிலும் அவர்கள் பயணம் செய்யவில்லை. ஆயினும் அவர்கள் வாழ்ந்த மதீனா நகர். மாநபி மணிமொழிப் பண்ணையாக ஒளிர்ந்து கொண்டிருந்தது. அது மட்டுமா? அண்ணல் நபியவர்களின் அருளொளி வீசிடும் புனிதமிகு ரௌலா அங்கு பொலிந்து கொண்டிருந்தது, இதன் காரணமாக அறிஞர்கள், அறவோர்கள், ஹஜ்ஜுப் பயணத்தை நோக்கமாகக் கொண்ட இறைபக்தர்கள், இறையன்புப் பெருகிடும் மெய்க் காதலர்கள் திரள் திரளாக அங்கு வந்து குவிவார்கள். அப்படி குவிகின்ற பெருமக்களிடம் மாலிக் இமாம் அவர்கள் சென்று அண்ணல் நபிமொழிகளை கேட்டு விசாரித்து அறிந்துகொள்வார்கள். ஒருவர் இருவர் அல்ல, ஆயிரமாயிரம் அறிஞர்கள், அறவோர்களிடமெல்லாம் மாநபி மணிமொழிகளையும் அவற்றின் அறிவிப்பாளர்களையும் அவர்களின் நேர்மையினையும் கேட்டுத் தெரிந்து உண்மையான மணிமொழிகளைப் பதிவுசெய்து கொள்வதில் மட்டிலும் அவர்கள் மனநிறைவு பெறமாட்டார்கள். உண்மையெனக்



கண்ட மணிமொழிகள் மதீனா நகர நன்மக்களுடைய நடைமுறைகளுக்கு உடன்பட்டவையா? என்பது குறித்தும் ஆராய்வார்கள், திரும்பத் திரும்ப ஆராய்வார்கள்.

## மணிமொழி நூல் 'முஅத்தா'

மதீனா நகர மக்களின் மேலாம் நடைமுறைக் குறித்து மாலிக் இமாம் அவர்கள் உறுதிமிக்க நம்பிக்கை கொண்டிருந்தார்கள். மாநபி மணிமொழிகளை மையமாகக் கொண்டே அவர்களுடைய நடைமுறை மலர்ந்திருக்கிறது என்பதில் எள்ளளவு சந்தேகமும் அவர்கள் கொண்டதில்லை. இதனாற்றான் அவர்களுடைய நடைமுறைக்கு உடன்பட்ட மணிமொழிகளை மட்டுமே அவர்கள் தேர்வு செய்வார்கள்.

அதுமட்டுமல்ல, இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள், ஒரு இலட்சம் மணிமொழிகளைப் பெற்றிருக்கிறார்கள். அவைகளை அலசி ஆராய்ந்து பத்தாயிரம் மணிமொழிகளையே தங்கள் நிபந்தனைக்கேற்ப சரியெனக் கண்டார்கள், அதிலும் அவர்கள் மனநிறைவு பெறாமல் அப்பத்தாயிரம் மணிமொழிகளிலும் நன்கு அலசி ஆராய்த்து எழுநூறு மணிமொழிகளையே வடிகட்டி நூல் வடிவுக்குக் கொண்டு வந்தார்கள். அப்படிக் கொண்டு வந்த மணிமொழி நூலை மார்க்கச் சட்டப் பேரறிஞர்களான எழுபது வல்லுநர்களிடம் படித்துக் காட்டினார்கள்.

அவர்களனைவரும் ஒரே குரலில் இம்மணிமொழிகள் யாவும் உண்மையானவை, சந்தேகத்திற்கிடமற்றவை என்று உறுதிபடக் கூறினார்கள். இப்படி அவர்களனைவரும் ஒரு முகமாக இமாம் மாலிக் (ரஹ்) அவர்களின் கருத்திற்கு நேர்ப்பட்டதன் காரணமாக எழுநூறு மணி மொழிகள் கொண்ட தொகுப்புக்கு 'முஅத்தா' என்று அவர்கள் பெயர் சூட்டினார்கள்.

இப்படி வடிகட்டி எடுக்கப்பட்ட 'முஅத்தா' என்ற நூலை மாலிக் இமாம் அவர்கள் நாற்பது ஆண்டுகள் கடும் முயற்சி

மேற்கொண்டு அல்லுபகல் அயராது அரும்பாடுபட்டு உருவாக்கினார்கள். இத்துணை கடும்கஷ்டங்களை ஏன் அவர்கள் எடுத்துக் கொண்டார்கள்? இரவு பகல் கண் துஞ்சாது மெய்வருத்தம் பாராது பெரும் முயற்சிகளை மேற்கொண்டார்களே ஏன்? 'இத்தாணி இன்பங்களைப் பெற்று உயர்ந்துவிடவேண்டும் என்பதற்கா? இல்லை. அனைத்துலக முஸ்லிம்களும் அருள்நபி மணிமொழிகளையும் அவற்றிலிருந்து மலர்கின்ற சங்கடங்களையுமே பின்பற்ற வேண்டும் என்பதற்காகத்தான்.

எனவே ஏந்தல் நபிமொழியில் பெரும் தாகம் கொண்ட அறிஞர் பெருமக்கள் எண் திக்கிலிருந்தும் இமாம் மாலிக் (ரஹ்) அவர்களை நோக்கி தங்கள் வாகனங்களை முடுக்கி விட்டனர். அவர்கள் ஆக்கிய முஅத்தா என்ற நூலை ஆயிரக் கணக்கில் பிரதிகள் எடுத்து அவற்றை சுமந்து கொண்டு இஸ்லாமிய நகரெங்கும் சென்று வழங்கினார்கள். காண்போர் கரங்களிலெல்லாம் முஅத்தா மலர்ந்து மணம் பரப்பிக் கொண்டிருந்தது. எங்கும் முஅந்தா என்ற குரலே விண்முட்ட ஒலிக்கத் தொடங்கியது. மாநபி மணிமொழித் தொகுப்பு நூல் அருகி விட்ட கால காட்டத்தில் முஅத்தா முஸ்லிம்களுடைய இல்லங்களில் படிக்கப்பட்டு அதனை அடியொற்றிடும் அருங்காட்சி உள்ளங்களையெல்லாம் கொள்ளை கொண்டது. சாதாரண மக்கள் மட்டுமல்ல, மன்னர்களும் முஅத்தாவைப் பெற்று இன்புற்றனர்,

## மாமன்னர் ஹாரூன் அர்ரஷீத் சந்திப்பு

மாலிக் இமாம் அவர்களை மாமன்னர் ஹாரூன் அர்ரஷீத் அவர்கள் சந்திந்து நபிமொழி குறித்து உரையாடிக் கொண்டு இருந்தார்கள். அப்பொழுது, ''தங்கள் முஅத்தா அருமையான நூல். அதனை நான் பலமுறை படித்திருக்கிறேன். அதில் வருகின்ற மணிமொழிகள் ஒவ்வொன்றும் முத்து முத்தாக ஒளிர்கின்றன. அந்நூலை புனிதம் நிறைந்த கஃபாவின் சுவற்றில் தொங்க விட்டு அதிலுள்ள அருள்மொழி



யினையே அடியொற்றி நடக்க வேண்டுமென அனைத்து முஸ்லிம்களுக்கும் கட்டளையிட நான் விரும்புகிறேன். தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'' என்று ஹாரூன் அர்ரஷீத் கேட்டார்கள்.

இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள், ''அப்படியெதுவும் செய்து விடாதீர்கள். மாநபி மணிமொழிகளைப் பருகிய ஸஹாபாப் பெருமக்கள் பல நாடுகளிலும் பிரிந்து வாழுகின்றார்கள். அவர்கள் அறிவிக்கின்ற அருள் மொழிகள் என்னுடைய நூலில் இடம் பெறவில்லையாயின் அவைகள் பயனில்லாமல் போய்விடுமல்லவா?'' எனக் கூறினார்கள்.

## கலீபா மன்சூரின் சந்திப்பு

இறையருள் பொங்கிடும் புனித ரௌலாவை அபூஜஃபர் அல்மன்சூர் அவர்கள் தரிசிக்க வந்தார்கள். அதுகாலை மாலிக் இமாமவர்களைந் கண்டு முஅத்தா என்கிற நூலின் சிறப்பினைப் பற்றி பேசிக்கொண்டிருந்தார், ''அந்நூலைப் படித்து இன்புற்ற எத்தனையோ மனிதர்களில் நானும் ஒருவன், அம்மாபெரும் நூலை ஆயிரமாயிரம் பிரதிகள் எடுத்து ஒவ்வொரு பள்ளிகளிலும் முகப்பில் தொங்க விட்டு அதிலுள்ளபடி நடக்கவேண்டுமென ஒவ்வொரு முஸ்லிமுக்கும் கட்டளையிட்டு அதனை செயலாக்க விரும்புகிறேன்'' எனக் கூறினார்.

உடனே மாலிக் இமாமவர்கள், ''அப்படிச் செய்ய வேண்டாம். ஒருக்காலும் அப்படிச் செய்ய வேண்டாம்! நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் நேரடியாகத் தொடர்பு கொண்டு பக்குவம் பெற்ற ஸஹாபாப் பெருமக்கள் பல நாடுகளிலும் பிரிந்து வாழுகின்றார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் மாநபி மணிமொழிப் பேழையாகத் திகழ்கிறார்கள். என்னுடைய நூலில் இடம்பெறாத எண்ணிறந்த எத்தனையோ மணிமொழிகளை அவர்கள் அறிவிக்க வாய்ப்பிருக்கிறது. அவைகள் நான் கூறுகின்ற மணிமொழிகளுக்கு எதிரானவைகளாகவும் இருக்கலாம். அவைகளையெல்லாம் ஒருங்கிணைத்து மாபெரும் பல நூற்களை எனக்குப் பின்வரும்

பேரறிஞர்கள் இயற்றி விடுவார்கள். அப்பொழுது அந்நூற்கள் யாவும் பயனற்று பழுதாகி விடுமல்லவா? உங்கள் கட்டளையின் காரணமாக அம்மணிமொழி நூற்கள்பயனில்லாமல் போய்விடுவதை எப்படி நான் சகித்துக்கொள்ளமுடியும்? எனவே நீங்கள் அவ்வாறு கட்டளையிடுவதை நான் விரும்பவில்லை' என்று அழுத்தமாகக் கூறி விட்டார்கள்.

கலீபா மன்சூர் அப்படியே மலைத்துப் போய்விட்டார், எத்துணை மகத்தான வான்புகழை அவர்களுக்கு நாம் அர்ப்பணிக்கிறோம்! அதனை அவர்கள் புறக்கணித்து விட்டார்களே! என்று வியப்பு மேலிட அங்கிருந்து கிளம்பிச் சென்று விடுகின்றார்கள். அருள்மொழிக்காக வான் புகழை உரமாக்கினார்கள்.

எனதரும் நேயர்களே! கார்முகில் உள்ளளவும் முஅத்தா நிலைத்து நிற்க கலீபா மன்சூர் மகத்தான பாதையை காட்டினார். அனைத்து முஸ்லிம்களும் பின்பற்றத்தக்க ஒரே நூல் 'முஅத்தா' தான் என்றொரு நிலையை ஏற்படுத்த மன்சூர் முயன்றார். உண்மையில் இது மாலிக் இமாம் அவர்களுக்கு மாபெரும் பெருமையும் புகழும் ஆகும். இப்புகழையெல்லாம் இமாமவர்கள் கொஞ்சமும் பொருட்படுத்தவில்லை. அவர்களுடைய உள்ளத்தில் நபிமொழி ஒன்றே பிரகாசித்துக் கொண்டிருந்தது. அப்பிரகாசத்தின் வழியே அவனியோர் செல்ல வேண்டுமென்ற ஆர்வத்துடிப்பு மிகுதியாக இருந்தது. இதன் காரணமாக அவர்களுக்கு கிடைத்த வான்புகழ் அனைத்தையும் அர்ப்பணித்து அவற்றை நபிமொழி வளர்ந்தோங்க உரமாக்கினார்கள்.

மாலிக் இமாம் அவர்கள் நபிமொழிக்கு எள்ளின் நுனியளவு கூட மாறுபடாமல் சட்டங்களை விளக்கினார்கள். அவர்கள் விளக்கிய சட்டங்கள் ஒவ்வொன்றும் நபிமொழியிலிருந்து வெடித்துச் சிதறிய ஒளித்திவலைகளாகும். அந்திவலைகள் விழுந்த இருதயங்கள் ஒளிபெற்றன. இறைஞானம் பெற்றன. ஷாபியீ இமாம் போன்ற மகாமகா மேதைகளையெல்லாம் உருவாக்கின.

# மணிமொழிக்கே அவர்களது உயிர்

இப்படியெல்லாம் நபிமொழிக்காக அல்லும் பகலும் அயராது அரும்பாடுபட்டு வந்தார்கள். அவர்களுடைய எண்ணம், உணர்வு, உயிர் யாவும் நபிமொழிக்காகவே இருந்தன. அண்ணல் நபியவர்களுடைய புனித ரௌலாவுக்கு முன்னிருந்து மணிமொழிகளை அவர்கள் போதிக்கின்ற போது அவர்களுடைய அருள் முகத்திலிருந்து இறையொளி பிரதாசிப்பதைக் கண்ட ஆயிரமாயிரம் மாணவர்கள் அண்ணலவர்களுடைய அமுதமொழிகளைப் பருகுவதிலே பேரானந்தமுற்றார்கள்.

அது மட்டுமா? இரவெல்லாம் இறைவனை வணங்குவார்கள். பகலெல்லாம் பூமான் நபியின் பொன்மொழிகளைப் போதிப்பதில் மூழ்குவார்கள், அறிவை வழங்குவது போல அரும் செல்வங்களையும் அள்ளி அள்ளி வழங்குவார்கள். பற்றிலாத் துறவிபோல் வாழ்ந்து அவனியோருக்கு பற்றற்ற நிலைதனை விளக்கினார்கள்.

அல்லாஹ்வின் நினைவிலும் அருள் நபியின் நினைவிலும் அவர்களுடைய உள்ளம் கசிந்துகொண்டிருந்தபோது வபாத் அவர்களை வந்தடைந்தது. அருள் நபிமொழியின் மறுவுருவாய்த் திகழ்ந்து அம்மொழியையே விண்ணுக்கும் மண்ணுக்குமிடையே நிரம்பச் செய்து நிலையில்லா இவ்வுலகிலிருந்து இறையருளுக்கு இலக்கான இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் ஹிஜ்ரீ 179-ல் வபாத்தடைந்தார்கள். அவர்களுடைய வபாத்துச் செய்தியைக் கேள்வியுற்ற மதீனாநகர் சோகக் கடலில் விழுந்து தவியாய் தவித்தது. மாநபி மணிமொழியின் மாணிபுயரும் போதகர் மறைந்து விட்டாரே என்றெண்ணி அவனியோர் அழுதனர். விண்ணும் மண்ணும் அழுதன. யா அல்லாஹ்! அம்மகானுபாவரின் மணிமணியான சேவைகளை எங்கள் உள்ளத்திலும் மலர்ந்து மணம் பரப்பச் செய்வாயாக!

—★—

# ஹஜ்ரத் இமாம் ஷாபியீ (ரஹ்)

அருள் மழை பொழிந்திடும் அல்லாஹ்வின் ஆலயம் கஃபாவைச் சுமந்து கொண்டு கம்பீரமான தோற்றத்துடன் மாண்புறும் மக்கா நகர் காட்சி தந்து கொண்டிருந்தது. அறிஞர்கள், அறவோர்கள், பண்டிதர்கள், பாமரர்கள், அரசர்கள், அடிமைகள் ஆகியோர் அணி அணியாகக் கூடி ஏகத்துவக் குரலை முழங்கிடும் பொன்னகரமாகப் பொலிந்து கொண்டிருந்தது. அப்பொன்னகர எல்லையில் ஆரவாரம் எதுவுமின்றி அமைதிப் பூங்காவாக உஸ்ஸா என்ற சிற்றூர் இருந்து வந்தது. அவ்வூரில் அறிவுப் பேரலைகளை எழுப்பிக் கொண்டிருந்த சான்றாண்மை மிக்க ஷாபியீ இமாம் அவர்கள், ஹிஜ்ரீ 159-ல் பிறந்து 204-ல் வபாத்தடைகிறார்கள்.

நான்கு பெரும் இமாம்களில் இமாம் ஷாபியீ (ரஹ்) அவர்கள் குறைந்த காலமே வாழ்ந்திருக்கிறார்கள், அஃது 54 ஆண்டுகளே அவனியில் அவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். ஆயினும் அவ்வாண்டுகளில் அவர்கள் ஆற்றிய அரும்பணிகள் உலக வரலாற்றில் தங்க மணிகளாக ஒளிர்கின்றன.

## வல்லுநர்களுக்கு வழிகாட்டிய நூல்

அண்ணல் நபியவர்களுடைய மெய்யாய மணிமொழி களைக்கண்டு கொள்ளவும் அவற்றை அவனியெங்கும் பரப் பிடவும் அரும்பாடு பட்டிருக்கிறார்கள். பொல்லா நோய் அவர்களை வாட்டிடினும் கொஞ்சமும் அதனைப் பொருட் படுத்தாமல் நாடு நகரெங்கும் அலைந்து அருள்மொழித் தொகுப்பினை உருவாக்க கடும் முயற்சியினை மேற்கொண் டார்கள். அப்படி அவர்கள் உருவாக்கிய 'முஸ்னத் இமாம் ஷாபியீ' என்ற நூல் அன்றைய காலத்தில் மிகவும் பிரபல மடைந்திருந்தது. அம்மகத்தான நூல் கால வெள்ளத்தில் கரைந்து விடாமலும் வரலாற்றுப் புதையல்களில் புதைந்து விடாமலும் உயிர்த் துடிப்புடன் இன்று வரை இயங்கிக் கொண்டிருக்கிறது.



அவர்களுக்குப் பின்னர் அருள்மொழித் துறையில் ஈடு பாடுகொண்ட இமாம் புகாரீ, இமாம் முஸ்லிம், இமாம் திர்மிதி போன்ற ஹதீஸ் கலை வல்லுநர்கள் அதனை தங்க ளுக்கு வழிகாட்டியாகவே கொண்டனர். அதனை மிகுந்த கண்ணியத்துடன் ஏற்று அதனடிப்படையில் ஏமாநபி மணி மொழிகளின் உண்மைகளைக் கண்டுகொள்ள முயன்றனர்.

வரலாற்று பின்னணியில் வள்ளல் நபியவர்களுடைய மணிமொழிகளுக்கு இமாமவர்கள் கொடுக்கும் விளக்கம் பருகப் பருகத் தெவிட்டாத தேனமுதாகவே இருந்தது. அத் தேனமுதைப் பருகி இன்பமுற்ற இமாம் மாலிக் (ரஹ்) அவர் களும், இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்களும் இமாம் ஷாபியீ (ரஹ்) அவர்களை நெஞ்சாரப் பாராட்டியது மட்டுமல்ல. நுபுவ்வத்தினுடைய வழியில் வரும் மணிமொழி களை நுபுவ்வத்தினுடைய குடும்பத்தில் தோன்றிய அறிஞர் களே மிகையாக அறிந்து கொள்ள முடியும் என்று வியப்பு மேலிடக் கூறினார்கள். ஏனெனில் இமாம் ஷாபியீ (ரஹ்) அவர்கள் அண்ணல் நபியவர்களுடைய குடும்பத்தினராய் இருந்ததினால் இம்மகத்துவத்தை அவர்களுக்கு அவ்விரு வரும் வழங்கியிருக்கிறார்கள்.

## பல்கலை வல்லரர்

வரலாறு, வானியல், விஞ்ஞானம், மனோதத்துவம், மருத்துவம், கணிதம் முதலான பல கலைகளில் அளப்பெரிய அறிவும், அரபு மொழி, சொல்இலக்கணம், அணிஇலக்கணம் இலக்கியம் இவற்றில் ஆழிய புலமையும் திறனாய்வும் பெற்ற வர்களாகத் திகழ்ந்தார்கள். அவர்களுடைய சொற்கள் அகராதியாகவே அமைந்திருந்தன. அரபு மொழியில் அதிக மானவர்கள் அறிந்திராத வழக்கு மொழிகளையெல்லாம் மிக நன்றாக அறிந்திருந்தார்கள். வான்மறை வசனங்களின் ஒவ்வொரு சொல்லும் தூய அரபு மொழிச் சொல் என்பதற்கு வழக்கு மொழியிலிருந்து அவர்கள் காட்டும் சான்று அற்புத மாக அமைந்திருந்தது.

இமாம் ஷாபியீ (ரஹ்) அவர்கள் இறையொளி நிரம்பிடும் கஃபாவின் மீஸாப் பகுதிக்கு அருகே அமர்ந்துகொண்டு வான்மறை வசனங்களுக்கு விரிவுரையாற்றிக் கொண்டிருந்தார்கள். அப்போது அறிவும் அறமும் ஒருங்கிணைந்த சுப்யானுஸ்ஸவ்ரி என்பவர்கள், வகத் ஹாப மன்தஸ்ஸாஹா (92;10) என்று வான்மறையில் இறைவன் கூறியிருக்கிறான். ''திண்ணமாக எவன் இருதயத்தை பழுதடையச் செய்து விட்டானோ அவன் நஷ்டமடைந்து விட்டான்.'' இவ்வசனத்தில் 'தஸ்ஸா' என்ற சொல் இடம் பெற்றிருக்கிறது. இச்சொல் ஹிஜாஸ் நகரமக்களின் வழக்கில் இல்லை. அப்படியானால் அச்சொல் தூய அரபி மொழிச் சொல் இல்லையா? எனக் கேட்டார்கள். அதற்கு இமாமவர்கள் திண்ணமாக 'தஸ்ஸா' என்ற சொல் பிறமொழி கலவா தூய அரபி மொழிச் சொல்லாகும், இதில் எள்ளளவுப் ஐயமென்பதேயில்லை, இதோ! ஹிஜாஸ் நகர பூர்வீக மக்களைக் கொஞ்சம் கவனியுங்கள்.

அவர்கள் இயற்கையாகவே தூய அரபி மொழியில் பேசுபவர்கள், அவர்கள் பேசும் மொழி அரபி மொழிக்கே சான்றாக அமையும். அவர்கள் தம் பிழைப்பு கருதி பல நாடுகளுக்கும் சென்று குடியேறி விட்டார்கள். அப்படி குடியேறியவர்களில் ஒரு பகுதியினர் சூடானுக்குச் சென்று தங்கி விட்டார்கள். அவர்கள் அமைதியான தம் வாழ்க்கையினிடையே மொழித் தூய்மையையும் வளர்த்து வந்தார்கள். ஒரு பொருளைப் பூமியினுள் மறைத்து விட்டார்களாயின், அல்லது அதனை பழுதாக்கி விட்டார்களாயின், 'தஸ்ஸா' என்ற சொல்லை உபயோகிக்கின்றார்கள். அப்படி அவர்கள் உபயோகித்து வந்த சொல்லையே இறைவன் இவ்வசனத்தில் குறிப்பிட்டிருக்கிறான். அப்படி அவன் கூறியிருப்பது சொல்லழகு. எதுகை, மோனை, இலக்கியச்சுவை ஆகிய அனைத்தையும் தெளிவாகப் புலப்படுத்துகிறது. இப்போது கொஞ்சம் கவனியுங்கள்,



''கத் அப்லஹ மன் ஸக்காஹா, வகத் ஹாப மன் தஸ்ஸாஹா,'— ''எவன் தனது உள்ளத்தை தூய்மையாக்கினானோ அவன் வெற்றி பெற்று விட்டான். அதனைப் பழுதாக்கியவன் நஷ்டமடைந்து விட்டான்.''(91;9-10)

மன் ஸக்காஹா—மன்தஸ்ஸாஹா என்பது ஒன்றுக்கொன்று எதுகை மோனையாகவும், தங்க நிகர் அடுக்குத் தொடராகவும், இலக்கிய இன்சுவை மிக்கதாகவும் அமைந்திருக்கிறது என இமாம் ஷாபியீ (ரஹ்) அவர்கள் கூறிய போது, ஸுஃப்யானுஸ்ஸவ்ரி அவர்கள் பேரானந்தமுற்று அவர்களை ஆரத் தழுவினரர்கள்.

இப்படி இமாமவர்கள் பல கலை வல்லுநராகத் திகழ்ந்திடினும் வான்மறை வசனங்களையும் வள்ளல் நபிமொழிகளையும் ஆராய்ந்து அவற்றின் மெய்ப் பொருளை உலகிற்கு வழங்குவதற்காக அவர்கள் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார்கள். மெய்யாய மணிமொழிகளைத் தேடிப் பெறுவதற்காக நாடு நெடுகிலும் பயணம் மேற்கொண்டிருக்கிறார்கள். அப்படி பயணம் மேற்கொண்டு பக்தாதை வந்தடைந்தார்கள்.

பக்தாத் ஒன்றுக்கொன்று எதிரான கருத்துக்கள் மோதும் அறிவுக் களமாக இருந்தது. ஷீயாக்கள், முஃதஸிலிகள் ஹவாரிஜிகள், அஹ்லுல் குர்ஆன் போன்ற பல பிரிவினர் அங்கிருந்தனர். அவர்கள் தமக்கிடையே சின்னஞ்சிறு விஷயங்களிலும் மோதிக்கொண்டு பல பிரிவினராகப் பிரிந்து இஸ்லாமிய மாண்பினை மடியச் செய்து கொண்டிருந்தார்கள்.

## வெல்ல முடியாத வாதம்

இத்தகு சூழலில் அறிவு வானின் முழுமதியாக ஒளிர்ந்து கொண்டிருந்த இமாம் ஷாபியீ (ரஹ்) அவர்கள் பகுதாதுக்கு வருகை தந்தார்கள். அவர்களை தாகம் தணிக்கும் சூல் கொண்ட மழை முகில் என்றெண்ணிய எண்ணிறந்த அறிஞர்

கள் அணி அணியாக அவர்களைச் சந்தித்து அறிவமுது பருகினார்கள். ஆனால் அஹ்லுல் குர்ஆன் என்று சொல்லிக் கொள்ளும் பிரிவினரில் சிலர் இமாமவர்களுடைய அவைக்கு வந்தனர். அவர்கள் வான்மறை வசனங்களை மட்டுமே பின்பற்றுபவர்கள். மாநபியின் மணிமொழிகளில் எதுவுமே தேவையில்லை என்று மிக வக்கிர புத்தியுடன் கூறி வந்தனர். இவர்களில் ஒருவர் இமாமவர்களை நோக்கி, வான்மறை 'மனித குலத்தை நேர்வழிப்படுத்துவதற்குத்தானே இறங்கப் பெற்றது?' எனக் கேட்டார். இமாமவர்கள் ஆம்! அதில் ஐயமென்பதேயில்லை! என்று கூறினார்கள்.

அதற்கவர், அப்படியானால் மாநபியின் மணிமொழி ஏன்? அது தேவையா? அதனைப் பின்பற்றுவது அவசியமா? எனக் கேட்டார்.

உடனே இமாவர்கள், நீர் வான்மறை வசனங்களை மட்டுமே பின்பற்றுகிறீர் இல்லையா?, என்று கேட்டதற்கு ஆம்! வான்மறையை மட்டுமே பின்பற்றி வருகிறேன் என்று அறுதியிட்டுக் கூறினார்.

'அப்படியானால் நாளொன்றுக்கு ஐந்து வேளை தொழுகின்றீரா' என இமாமவர்கள் கேட்டார்கள். ஆம் திண்ணமாக ஐந்து வேளை தொழுகிறேன்! என்று அவர் பதிலளித்தார்.

உடனே இமாமவர்கள், ஒவ்வொரு தொழுகையிலும் எத்தனை எத்தனை ரக்அத்துகள் தொழுகின்றீர்? எனக் கேட்டார்கள். அதற்கவர், இன்னின்ன தொழுகையில் இத்தனை இத்தனை ரக்அத்துகள் தொழுது வருகிறேன். எனப் பகர்ந்தார், இமாமவர்கள் ஒவ்வொரு ரக்அத்திலும் சூரத்துல் பாத்திஹா— திறப்பு அத்தியாயம் நீர் ஓதுகின்றீரா? ஒவ்வொரு நிலையிலும் தக்பீர் கூறுகின்றீரா? தொழுகையின் முடிவில் ஸலாம் கூறுகின்றீரா? இப்படி அடுக்கடுக்காக பல கேள்விகளை இமாமவர்கள் கேட்டார்கள்.



அதற்கவர், ஆம்! ஆம்! என்றே பதிலளித்தார். உடனே இமாமவர்கள் இவை யாவும் வான்மறையில் வந்திருக்கின்றனவா? என்று கேட்டபோது, அவர் திகைத்து விட்டார். சிந்திக்கத் தொடங்கினார்.

மீண்டும் இமாமவர்கள், லுஹர் தொழுகை நான்கு ரக்அத்துகள், அஸர் தொழுகை நான்கு ரக்அத்துகள், மஃரிபுத் தொழுகை மூன்று ரக்அத்துகள், இஷாத் தொழுகை நான்கு ரக்அத்துகள், சுப்ஹுத் தொழுகை, இரண்டு ரக்அத்துகள் என்று வான்மறையில் வரவில்லையே! அவ்வாறாயின் நீர் யாரைப் பின்பற்றித் தொழுகிறீர்? தொழுகை, நோன்பு, ஸக்காத், ஹஜ் ஆகிய இஸ்லாமிய கடமைகள் ஒவ்வொன்றையும் எப்படிச் செய்ய வேண்டுமென்ற நடைமுறையை விதிப்படுத்தியவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களல்லவா? வான்மறையின் உள்ளார்ந்த கருத்துக்களையெல்லாம் விளக்கித் தருபவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களில்லையா? இதோ இறைவன் கூறுகிறான்:

''நபியே! உம்மால் இறக்கி வைக்கப்பட்ட வேதத்தை விளக்கி வைக்கும் பொருட்டே உம்மை தாம் அனுப்பி வைத்தோம்'. (16:44)

வான்மறைச் சட்டங்களை விளக்குவதற்காகவே வள்ளல் நபியவர்கள் அனுப்பப்பட்டார்கள் என்பது உண்மையானால் அவர்கள் கூறும் விளக்கத்தை ஏற்பது அவசியமில்லையா? எனக் கேட்டு விட்டு, அவரை நோக்கினார்கள். என்ன சொல்வதென்றறியாமல் அவர் மௌனமாக நின்று கொண்டிருந்தார். இமாமவர்கள் மீண்டும் தொடர்ந்தார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவனியோருக்கு வான்மறை அல்குர்ஆனை கற்றுக் கொடுத்தது போல தம்முடைய சொல், செயல் கொண்ட சுன்னத்தையும் கற்றுக் கொடுத்தார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வேதத்தையும் சுன்னத்தையும் கற்றுக்கொடுப்பதற்காகவே அனுப்பப்பட்டார்கள். இது குறித்து இறைவன் கூறுகிறான்:—

''எங்களிரட்சகனே! அவர்களுடைய இனத்திலிருந்து அவர்களுக்கு ஒரு ரஸூலை நீ அனுப்பி வைப்பாயாக! அவர்களுக்கு அவர் உன்னுடைய வசனங்களை ஓதிக்காட்டுவார். இன்னும் அவர்களுக்கவர் வான்மறையினையும் ஹிக்மத்தையும் கற்று வைப்பார்.''

(2: 129)

இன்னும் கூறுகிறான்; ''உங்களுக்கவர் நம்முடைய வசனங்களை ஓதிக்காட்டி உங்களைப் புனிதப் படுத்துவார். இன்னுமவர் உங்களுக்கு வான்மறையையும் ஹிக்மத்தையும் கற்று வைப்பார், நீங்கள் அறியாதவற்றையெல்லாம் உங்களுக்கு அறிவித்து வைப்பார்.''

(2: 151)

மேலும் கூறுகிறான்: ''உங்களுக்கவர் இறைவசனங்களை ஓதிக்காட்டி உங்களைப் புனிதப்படுத்துவார். உங்களுக்கவர் வேதத்தையும் ஹிக்மத்தையும் கற்றுவைப்பார்.''

(3:164)

இன்னும் கூறுகிறான்: ''திண்ணமாக அல்லாஹ் உங்கள் மீது வேதத்தையும் ஹிக்மத்தையும் இறக்கி வைத்திருப்பதை எண்ணிப் பாருங்கள்,

(2:231)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மனைவிமார்கள் குறித்து இறைவன் கூறுகிறான்: ''உங்களுடைய வீடுகளில் ஓதப்படுகின்ற இறை வசனங்களையும் ஹிக்மத்தையும் நீங்கள் நினைவு கூருங்கள்.''

(33;34)

இது தொடர்பாக இன்னும் பல வசனங்களை இறைவன் கூறியிருக்கிறான். இவ்வசனங்களில் கிதாப், ஹிக்மத் என்ற இரு சொற்களை இறைவன் கூறியிருக்கிறான். இவற்றில் கிதாப் என்பதற்கு குர்ஆன் என்று பொருளாகும். அப்படியானால் ஹிக்மத்தின் பொருள் என்ன? வான் மறை பற்றி அளப்பெரிய ஞானம் பெற்ற ஒருவரிடம் ஹிக்மத் என்றால் என்ன? என நான் கேட்டேன். அதற்கவர், அல்ஹிக்மத்து சுன்னத்து ரஸூலில்லாஹ் என்று விளக்கமளித்தார். அதாவது ஹிக்மத் என்பது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சுன்னத்தாகும்,



எனவே கிதாப் என்ற சொல்லை அடுத்து ஹிக்மத் என்ற சொல் எங்கெல்லாம் வருகிறதோ அங்கெல்லாம் ஹிக்மத் என்ற சொல்லுக்கு சுன்னத்து ரஸூலில்லாஹ்—நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய நடைமுறை என்றே பொருள் கொள்ள வேண்டும், ஏனெனில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மணிமொழி—நடைமுறை, வான்மறைக்கு விளக்கமாகவே அமைந்திருக்கிறது. ஆகவே ஹிக்மத் என்பதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சுன்னத் என்பதைத் தவிர வேறென்ன பொருள் கொடுக்க முடியும்? மேற் கூறிய வசனங்கள் யாவற்றிலும் கிதாப், ஹிக்மத் என்று இணைந்தே வந்திருப்பதால் வான்மொழி, வள்ளல் நபி மொழி ஆகிய இரண்டையும் பின்பற்றுவது அவசியமாகும். இறைமறையைப் பின்பற்றுபவர்கள் மாநபியின் மணிமொழியைப் பின்பற்றாமலிருக்க எந்த நியாயமும் இல்லை. மாநபி மணிமொழிகளைப் பின்பற்றுவது ஒவ்வொரு முஃமினின்மீதும் கட்டாயக் கடமையாகும். இது குறித்து இறைவன் கூறும் வசனங்களை நன்கு ஆராய்ந்து கேட்பீராக.

## நபிமொழியைப் பின்பற்றுவது அவசியம்

அண்ணல் நபியவர்களை அடியொற்றி நடப்பது முஃமினானவர்கள் மீது கட்டாயக் கடமையா? என்று 'அறிவு இயக்கம்' என தம்மை கருதிக் கொண்டிருக்கின்ற முஃதஸிலாக்களில் ஒருகுழுவினர் இமாமவர்களிடம் வந்து வினவினார்கள். அதற்கு இமாமவர்கள், அண்ணல் நபியவர்களை; அடியொற்றி நடப்பது அவசியம் மட்டுமல்ல, இன்றியமையாததுமாகும் என்று கூறிவிட்டு, அதற்கு ஆதாரமாக அமையும் இறை வசனங்களை அள்ளித் தெளித்தார்கள். அப்படி அவர்கள் தெளித்த வசனங்களில் சிலவற்றை இங்கு கூறுகிறேன்.

''உங்களுக்கு அல்லாஹ்வின் தூதர் எவற்றைக்கொண்டு வந்தாரோ அவற்றை இறுகப் பற்றிக் கொள்ளுங்கள்! எவற்றிலிருந்து அவர்கள் விலக்கினார்களோ அவற்றை விட்டும் நீங்கள் விலகிக் கொள்ளுங்கள்!''

(சூரத்துல் ஹஷ்ரு 7)

''நபியே! உமதிரட்சகனின் மீது ஆணையாக! அவர்கள் தங்களுக்கிடையே எழுகின்ற பிரச்சனைகளில் உம்மை நீதி பதியாக்கி அப்பால் நீர் வழங்குகிற தீர்ப்பில் அவர்களுடைய இருதயங்களில் எள்ளளவு சிரமமும் ஏற்படாமல் அதனைப் பரிபூரணமாக ஏற்றுக் கொள்ளாதவரை அவர்கள் முஃமின் களாக ஆக மாட்டார்கள்,'' (சூரத்துன்னிஸா; 65)

''அல்லாஹ்வும் அவனது தூதரும் எந்த விஷயத்தை விதியாக்கி விட்டார்களோ அந்த விஷயத்தில் தம்இஷ்டப்படி நடந்து கொள்ள முஃமினான எந்த ஆணுக்கும் எந்தப் பெண்ணுக்கும் உரிமையில்லை. எனவே அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் மாறு செய்கிறார்களோ அவர்கள் திண்ணமாக பகிரங்கமான வழிகேட்டில் தங்கி விடுகிறார்கள்''.

(சூரத்துல் அஹ்ஸாப்; 36)

''நபியவர்களுடைய கட்டளைக்கு மாறு செய்கின்றார்களே அவர்கள் தங்களையொரு சோதனை பற்றுவதையோ அல்லது கடுந்தண்டனை பற்றுவதையோ அஞ்சிக்கொள்ளக் கடவார்களாக!'' (சூரத்துந்நூர்; 63)

''இறைத் தூதருக்கு வழிபடுகிறார்களே அவர்கள் அல்லாஹ்வுக்கே வழிபடுகிறார்கள்.'' (சூரத்துன்னிஸா 4:80)

எவர்கள் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் வழிபடுகிறார்களோ அவர்கள் அல்லாஹ்வின் பேரருளைப் பெற்ற நபிமார்கள், மெய்யடியார்கள், உயிர்த் தியாகிகள், நல்லோர்கள் ஆகியவர்களுடன் இணைந்திருக்கிறார்கள்' இப்படிப்பட்டவர்கள் மிக அழகிய நல்ல தோழர்களாகும்.

(சூரத்துன்னிஸா; 69)

இப்படி இமாம் அவர்கள் அறிவுத் தேனூறும் இறை வசனங்களை அலையலையாக அள்ளிக் கொட்டினார்கள். இவ்வசனங்களை செவிமடுத்த அக்குழுவினர் மலைத்துப் போய் விட்டனர். மெய்மறந்து அப்படியே நின்றுவிட்டனர், உடனே இமாமவர்கள், மேலே கண்ட வசனங்கள் மாநபியவர்களைப் பின்பற்றுவது அவசியமானது. இன்றியமையாதது என்பதை உணர்த்தவில்லையா? அவர்களைப் பின் பற்றத் தவறியவர்களுக்கு கடும் தண்டனையும் சோதனையும் கிடைக்கப்பெறும் என்பது குறித்து எச்சரிக்க வில்லையா? அன்னவர்களை அடியொற்றி நடப்பதில்தான் இறையருள் கிடைக்கப்பெறும் என்று ஊக்கமும் உற்சாகமும் ஊட்ட வில்லையா? என்று வினவினார்கள்.



அப்போது அவர்களில் ஒருவர், நீங்கள் கூறுகின்றவற்றை அப்படியே நாங்கள் ஒத்துக் கொள்கிறோம். ஆயினும் ஒரு கேள்வி, ஒருவன் ஹஜ்ஜுக்கென இஹ்ராம் கட்டியிருக்கிறான். அவன் இஹ்ராம் கட்டிய நிலையில் குளவி ஒன்றைக் கொன்று விடுகிறான். இது அவனுக்கு ஆகுமானதா? அண்ணல் நபிமொழி சான்று பகருமா? எனக் கேட்டார். உடனே இமாமவர்கள் அடியிற்கண்ட இறை வசனத்தை ஓதிக் காட்டினார்கள்.

''அல்லாஹ்வின் தூதர் கொண்டு வந்தவற்றை நீங்கள் இறுகப் பற்றிக் கொள்ளுங்கள்! அவர்கள் விலக்கியவற்றை விட்டும்விலகிக்கொள்ளுங்கள்!''

இவ்வசனம் நபியவர்களுடைய சொல், செயல் ஆகியவற்றை இப்படியே பின்பற்ற வேண்டும். என எடுத்துரைக்கிறது. இப்போது கொஞ்சம் கவனியுங்கள்! சுப்யான் இப்னு உயைனா, அப்துல் மலிக், இப்னு ஹுதைஃபா ஆகிய அறிவிப்பாளர்கள் மிக உண்மையானவர்கள். அறவோர்கள், இப்படிப்பட்ட அறவோர்களைக் கொண்டு மாநபி மணி மொழியொன்றை அறிவிக்கபட்டுள்ளது. அஃது:

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ''எனக்குப் பின்னால் அபூபக்கர், உமர் ரலியல்லாஹு அன்ஹுமா ஆகியோரை நீங்கள் பின்பற்றுங்கள்'' என்று நவின்றுள்ளார்கள்.

இம்மணிமொழிப்படி அபூபக்கர், உமர் (ரலி) ஆகியோரை பின்பற்றுவது அண்ணல் நபியவர்களைப் பின்பற்றுவதாகவே அமையும்.

அமீருல் முஃமினீன் உமர் (ரலி) அவர்கள். ''ஹஜ்ஜுக்கென இஹ்ராம் கட்டியவர்கள்மீது குளவிகள் விழுந்து விடுமானால் அவற்றை அவர்கள் கொன்று விடட்டும்!'' எனக் கூறியிருக்கிறார்கள். இம்மணிமொழியினை சுப்யான் இப்னு உயைனா, முஸ்அத் கைஸ் இப்னு முஸ்லிம், தாரிக் இப்னு ஷிஹாப் ஆகிய உண்மையாளர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

மாநபியவர்களுடைய ஆணைப்படி உமர் (ரலி) அவர்களைப் பின்பற்றுவது நம்மீது கடமையாகும். அவர்கள் இஹ்ராம் கட்டிய ஒருவன் குளவியைக் கொன்றுவிடக் கட்டளையிட்டிருக்கிறார்கள். எனவே உமர் (ரலி) அவர்களுடைய கட்டளை கருணை நபியவர்களுடைய கட்டளையாகும். அவர்களைப் பின்பற்றுவது மாநபியவர்களைப் பின்பற்றுவதாகும். இதில் எள்ளளவும் சந்தேகமில்லை. ஏனெனில் ஸஹாபாப் பெருமக்கள் நுபுவ்வத்தினுடைய பேரொளியிலிருந்து ஒளிபெற்றவர்கள். எனவே அவர்களைப் பின்பற்றுவது அண்ணல் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதாகும்.

## அற்புதமான 'அர்ரிஸாலா'

இப்படி இமாமவர்கள் அவர்களுக்கு விளக்கமளித்துக் கொண்டிருந்தபோது, ஹதீஸ் கலை வல்லுநர்களில் மிகச் சிறந்த அப்துர் ரஹ்மான் இப்னு மஹ்தீ என்ற மேதையவர்கள், இமாமவர்களிடம் வந்து, எனதரும் சகோதரரே! வான் மறையிலிருந்தும், வள்ளல் நபிமொழியிலிருந்தும் சட்டங்களை எடுப்பது எப்படி? அந்தச் சட்டங்களை மக்கள் எளிதில் ஆதார அடிப்படையில் அறிந்து கொள்ள எந்தமுறையை மேற்கொள்வது? இஜ்மாவுக்கும், மாநபி மணிமொழிக்குமிடையேயுள்ள தொடர்பு என்ன? என்பன போன்ற நுட்பமான விஷயங்களைத் தொகுத்து முஸ்லிம் சமூகத்திற்கு நூல் ஒன்றை எழுதுமாறு வேண்டினரார்கள்,



எனவே இமாமவர்கள் அதனை ஏற்று அற்புதமான 'அர்ரிஸாலா' என்ற நூலை இயற்றி அப்பால் அதை அப்துர் ரஹ்மான் இப்னு மஹ்தீ அவர்களுக்கு அனுப்பிவைத்தார்கள். அதனைப் பெற்றுக்கொண்ட அப்துர்ரஹ்மான் இப்னு மஹ்தீ அவர்கள் பேராச்சரியமுற்று பின்வருமாறு கூறினார்கள்;

''அர்ரிஸாலா என்ற அந்த நூலைப் பலமுறை நான் படித்தேன். அது என்னை பேராச்சரியத்தில் ஆழ்த்தி விட்டது. மகா அறிஞர் ஒருவர் சட்டங்களை எடுக்கும் முறையை உபதேச அடிப்படையில் எழுதியிருப்பது என்னை திகில் கொள்ளச் செய்தது, அவருக்காக நான் அதிகமதிகம் அல்லாஹ்விடம் பிரார்த்திக்கிறேன்''.

இப்படி இமாமவர்கள் அல்லும் பகலும் அரும்பாடுபட்டு அருமை நபியவர்களுடைய அருள்மொழிகளையும் அவற்றில் ஆய்ந்தெடுக்கப்பட்ட மணிமொழிசட்டங்களையும் தொகுத்து எண்ணிறந்த நூல்களை வெளியிட்டிருக்கிறார்கள். அவர்கள் எழுதி வெளியிட்ட நூல்களில் 'முஸ்னத் இமாம் ஷாபியீ' என்ற நூல் ஹதீஸ் கலை வல்லுநர்களுக்கு ஒரு முன்மாதிரியாகவே அமைந்து விட்டது.

இமாம் அஹ்மது இப்னு ஹன்பல், இமாம் புகாரீ, இமாம் முஸ்லிம், இமாம் திர்மிதி, இமாம் அபூதாவூத் போன்ற ஹதீஸ் கலை வல்லுநர்கள், முஸ்னத் இமாம் ஷாபியீ என்ற நூலை அடிப்படையாகக் கொண்டே தங்களுடைய நூற்களை இயற்றியிருக்கிறார்கள். அப்படியே 'அர்ரிஸாலர' என்ற நூலை அவனிக்கு வழங்கி சட்ட வல்லுநர்களுக்கெல்லாம் அதனை ஒரு முன்மாதிரியாக ஆக்கினார்கள்.

இப்படி அவர்கள் இயற்றிய நூல்கள் இன்றும் ஜீவத் துடிப்புடன் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவர்களுக்குப் பின்னால் வந்த சட்ட வல்லுநர்கள் 'அர்ரிஸாலா' என்ற நூலை அடிப்படையாகக் கொண்டே ஆயிரக் கணக்கான சட்ட நூற்களை எழுதி வெளியிட்டிருக்கிறார்கள்.

மூச்சையும் அல்லாஹ்வின் வழியில் அர்ப்பணித்தவராக, அறவோர் திலகமாக வாழ்ந்து வந்தார்கள்.

இமாம் ஷாபியீ (ரஹ்) அவர்கள் அவனிக்கு ஒளி தரும் சூரியனாகவும், உடலுக்குஆரோக்கியமளிக்கும் அருமருந்தாகவும் இருந்து வந்தார்கள் என இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

### மெய்யுருகும் பிரார்த்தனை

இறுதியாக இமாம் ஷாபியீ (ரஹ்) அவர்கள் பிணியுற்ற போது அவர்களுடைய மாணவர்களில் ஒருவர், இமாமவர்களே! தாங்கள் எப்படி இருக்கின்றீர்கள்? எனக் கேட்டார்; அதற்கவர்கள் அடியிற்கண்டவாறு கூறினார்கள்:

நான் மரணமெனும் மதுவை அருந்திக் கொண்டிருக்கிறேன். என்னரும் சகோதரர்களை விட்டும் பிரிந்து கொண்டிருக்கிறேன், என் பயணம் தொடங்கி விட்டது; இறைவனை அடையப் போகிறேன், என் ஆன்மா சுவர்க்கம் செல்லுமாயின் நான் மகிழ்வடைவேன். என் ஆன்மா எரி நரகை நோக்கிச் செல்லுமாயின் என் நிலை என்ன? யா அல்லாஹ்! என் பிழையைப் பொறுத்தருள்! என்பிழை பெரிதாயினும் உன் மன்னிப்பு மிகப் பெரியது. மிக மிகப் பெரியது. உன்னுடைய மன்னிப்பே உன்னை அடைய நான் ஏறிவரும் ஏணியாகும், யா அல்லாஹ்! நீ மகா அன்புள்ளவன், மகா கருணையுள்ளவன், உன் அன்பும், கருணையும் எல்லையில்லாதவை. எல்லையில்லா உன் அன்பிலும்; கருணையிலும் எங்களை நீ புகச்செய்! என்று கூறியவாறு அவர்களுடைய ஆவி பிரிகின்றது.

அல்லாஹ்வுக்காகவும், அவனுடைய ரஸுலுக்காகவுங் அல்லும் பகலும் உழைத்து அவ்வுழைப்பிலேயே இன்பம்



கண்டு உழைத்த உத்தமர். மாநபி மணிமொழிகளை உலகில் நிலைக்கச் செய்தவற்காக பொல்லா நோயையும் பொருட்படுத்தாது நாடு நெடுகிலும் அலைந்து அலைந்து மணிமொழித் தொகுப்புகளை உலகிற்கு வழங்கித் தந்த மாமேதை இமாம் ஷாபியீ (ரஹ்) அவர்கள் ஹிஜ்ரீ 204-ல் வஃபாத் தானார்கள்.

அவர்களுடைய வஃபாத் (மரணச்) செய்தியைக் கேட்ட உலகம் கவலை அடைந்தது. கண்ணீர் விட்டது. இப்படி ஒரு பேரறிஞரை உலகம் எப்போதுதான் பெறப் போகிறதோ என ஏங்கியது. ஆலிம் குரைஷி ஒருவர் உலகெல்லாம் அறிவை நிரப்பி விட்டு கண்ணை மூடிவிட்டாரே என எண்ணி வருந்தாத உள்ளமேயில்லை, யா அல்லாஹ்! அந்த உத்தமரின் பொருட்டால் உன் அருளின் இன்காற்றை நுகரச் செய்வாயாக!

# இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் (ரஹ்)

அறிவு மலர் பூத்துக் குலுங்கிடும் பூங்காவாகவும் அறிவு மோதல்களை வடிகட்டி உண்மைக் கருத்தினை தெளிவுபடுத்திடும் பொன்னகரமாகவும், அறவோர்கள் பல்கிப் பெருகிடும் ஞானமாநகரமாகவும் பஃதாத் விளங்கிக் கொண்டிருந்தது, அப்பெருநகரில் அருள் இலக்கியமாம் அல்குர்ஆனுடைய காவலராக இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் அவர்கள் ஹிஜ்ரீ 164-ஆம் ஆண்டு பிறந்தார்கள்,

இமாமவர்கள் அறிவு, அன்பு, அறம், ஈகை, இறை வணக்கம், நேசம், பணி, இனிய சேவை, வாய்மை, தூய்மை பொறுமை ஆகிய அருளியல் பண்புகளில் மேம்பட்டவர்களாகத் திகழ்ந்து வந்தார்கள், இவ்வரும் பண்புகளில் அவனியோர் அவர்களை அதிகமதிகம் நேசித்து வந்தார்கள். பதினான்காம் வயதிலிருந்து அறிவு தேடிப் பயணம் மேற்கொண்டார்கள். நாடு நாடாக அலைந்து மொழி, இலக்கணம், இலக்கியம், சட்டம், மாநபி மணிமொழி, வான்மறை போன்ற மேலாம் கல்விகளில் அளப்பெரிய ஞானமும், உறுதி மிக்க புலமையும் பெற்றுத் திகழ்ந்தார்கள்.

மாநபி மணிமொழியின் உண்மைகளைக் கண்டுகொள்ளவும், அவற்றின் அறிவிப்பாளர்களுடைய நேர்மைகளைப் புரிந்துகொள்ளவும் மக்கா மதீனா ஜோர்டான், எகிப்து, ஷாம், கூபா போன்ற பெருநகர்களுக்கெல்லாம் பயணம் செய்தார்கள். மணிமொழித்துறையில் வல்லமைப் பெற்ற மகா மேதைகளை அவர்கள் சந்திக்கும் போதெல்லாம் அவர்களிடமிருந்து மாநபி மொழிகளைக் கற்றுக் கொண்டு அவற்றைப் பதிவு செய்வார்கள். மணிமெரழி கல்வியில அவர்களுக்கு ஏற்பட்ட ஆர்வத் துடிப்பினை அவர்களே எடுத்



துரைக்கும் அற்புதமான செய்தி ஒன்றை கீழே தருகிறேன். கவனமாகப் படியுங்கள்.

## மணிமொழித் தாகம்

இறையருள் சிந்திடும் கஃபாவின் பக்கமாக நானும் என் ஆசிரியர் இஸ்ஹாக் இப்னு ராஹவைஹி அவர்களும் வந்து கொண்டிருக்கிறோம். அங்கே சுப்யான் இப்னு உயைனா, அப்துர்ரஹ்மான் இப்னு மஹ்தீ போன்ற ஹதீஸ் கலை வல்லுநர்கள் மாணவர்களுக்கு மாநபி மணிமொழிகளைப் போதித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களருகே சிறுசிறு கூட்டம் இருந்து செவியேற்றுக் கொண்டிருந்தது. நாங்கள் ஒவ்வொரு கூட்டமாகப் பார்த்துக்கொண்டு அவர்கள் போதிக்கின்ற போதனைகளால் இன்புற்று ஆனந்தமடைந்து கொண்டே வந்தோம்.

இறுதியாக இறையருள் அமுதான ஜம்ஜம் என்ற நீரூற்றிற்கருகே வந்தோம். அந்நீரூற்று பொங்கியெழுவது போல் அங்கொரு வாலிபர் மாநபி மணிமொழிகளையும் மணிமொழிச் சட்டங்களையும் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மாணவர்களிடையே சொல்லிக் கொண்டிருந்தார். அப்பெருங் கூட்டத்தினரிடையே நாங்கள் போய் அமர்ந்தோம். அம் மணிமொழிப் போதகருக்கு முப்பத்தெட்டு வயதுகளே நிரம்பப் பெற்றிருந்தது. அவருடைய பெயர் முஹம்மது இப்னு இத்ரீஸ் அஷ்ஷாபியீ எனப்படும். அறிவு துள்ளி விளையாடும் அவருடைய போதனைகள் என் உள்ளத்தை கொள்ளை கொண்டன. அவர்கள் கூறிய மணிமொழி ஒவ்வொன்றையும் நான் பதிவு செய்துகொண்டிருந்தேன்.

## இஸ்ஹாக் இப்னு ராஹவைஹி-இமாம் ஷாபியீ

அப்பொழுது என் அருகே இருந்த இஸ்ஹாக் இப்னு ராஹவைஹி அவர்கள் எழுந்து இமாம் ஷாபியீ அவர்களை

நோக்கி, ஒரு கேள்வி! அதற்கு உங்கள் விடையினை எதிர் பார்க்கிறேன்! என்று உரத்த குரலில் கேட்டார். உடனே இமாமவர்கள் உம் கேள்வி என்ன? எடுத்துரைப்பீராக! என்று சொன்னார்கள்.

அப்போதவர்கள், கஃபாவைச் சுற்றியுள்ள 'ஹரம் ஷரீபில் எண்ணிறந்த வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. அவ் வீடுகள் அவற்றைக் கட்டியவர்களுக்குச் சொந்தமா? பொது வக்புக்கு உட்பட்ட பைத்துல்மாலுக்குச் சொந்தமா? எனக் கேட்டார்கள்.

''அவ்வீடுகளை யார் கட்டினார்களோ அவர்களுக்கு அவைகள் சொந்தம், அவைகள் பொது வக்புக்கு உட்பட்டவை அல்ல'' என்று இமாம் (ரஹ்) அவர்கள் கூறினார்கள். உடனே இஸ்ஹாக் இப்னு ராஹவைஹி அவர்கள் ஹரம் ஷரீப் பொது வக்பாகும். அதில் யார் வீடு கட்டினாலும் அது அவர்களுக்குச் சொந்தமாகாது என தாவூஸ், அல்கமா இருவரும் கூறி இருக்கிறார்களே! அதற்கு நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள்? எனக் கேட்டார்கள்.

அதற்கு இமாம் ஷாபியீ (ரஹ்) அவர்கள் ''தங்களுடைய வீடுகளிலிருந்தும், செல்வங்களிலிருந்தும் வெளியேற்றப் பட்டார்களே அப்படிப்பட்ட முஹாஜிரீன்களான ஏழைகளுக்கு...(59;8) என்றிறைவன் கூறியிருக்கிறான்.

இவ்வசனத்தில் 'தங்களுடைய வீடுகளிலிருந்து' என்றால் அவைகள் அவர்களுக்கு சொந்தமானவை என்று தானே பொருள் கொள்ளவேண்டும். அப்படி அவர்களுக்குச் சொந்தம் என்று பொருள் கொள்ளவில்லையாயின் 'தங்களுடைய வீடுகளிலிருந்து' என்பதற்கு என்ன தான் பொருள்?

இன்னும் கொஞ்சம் கவனியுங்கள்! மக்கா வெற்றியடைந்த போது மாநபியவர்கள் குரைஷிகளை நோக்கி, உங்களில் எவர் அபூசுப்யானுடைய வீட்டில் புகுந்து விட்டார்களோ அவர்களுக்கு பாதுகாப்பு உண்டு. இன்னும் உங்களில்



எவர் தத்தம் வீட்டுக் கதவுகளை தாழிட்டுக்கொண்டு உள்ளே இருக்கிறார்களோ அவர்களுக்கும் பாதுகாப்பு உண்டு என்று கூறினார்கள்.

இங்கு அபூசுப்யானுடைய வீடு என்று ஏந்தல் நபியவர்கள் கூறியிருக்கிறார்களே! அது அவர்களுக்குச் சொந்தமில்லையா? தங்கள் தங்கள் வீடுகளில் கதவுகளைத் தாழிட்டுக் கொண்டு என்று கூறியிருக்கிறார்களே அவைகள் அவர்களுக்குச் சொந்தமில்லையா? அவர்களுடைய உரிமையில் பட்டதில்லையா? அப்படி இல்லையானால் அண்ணல் நபியவர்கள் அபூசுப்யானுடைய வீடு, தங்கள் தங்கள் வீடு என்று கூறியது ஏன்? என்று கேட்டார்கள்.

அதற்கு இஸ்ஹாக் இப்னு ராஹவைஹி அவர்கள் அல்கமா, தாவூஸ் ஆகிய இருபெரும் மேதைகள் தவறாகச் சொல்லியிருப்பார்களா? என்று கேட்டார்கள்.

உடனே இமாம் ஷாபியீ (ரஹ்) அவர்கள், நான் வான்மறை வசனம், வள்ளல் நபிமொழி என்று கூறுகிறேன். நீங்களோ அல்கமா, தாவூஸ் என்று கூறுகிறீர்கள். வான்மறை வசனம், வள்ளல் நபிமொழி எங்கே? அல்கமா, தாவூஸின் கூற்று எங்கே?

இவ்விரண்டுக்குமிடையே வானுக்கும் பூமிக்குமிடையேயுள்ள தூரம் இல்லையா? வான்மறையும் வள்ளல் நபிமொழியும் வஹியினுடைய வாயிலிருந்து பிறந்தவை. அல்கமா, தாவூஸ் இவ்விருவருடைய கூற்றும் அப்படியா? என்ன கூறுகிறீர்கள்? எனக் கேட்டார்கள்.

இக்மொழியினைக் கேட்ட என் உள்ளம் ஆர்வத்துடிப்பால் உந்தி எழுந்தது. மனித மொழிக்கும் மாநபி மணிமொழிக்கும் உள்ள வேறுபாட்டை உணர்ந்தது, அவனி முஸ்லிம்கள் அனைவரும் மாநபி மணிமொழிகளைத்தான் பின்பற்ற வேண்டும். மனித மொழிகளை அல்ல என்ற உணர்வுத்தீ

ஹிஜ்ரீ 188 ஜம் ஜம் கிணற்றருகேயிருந்து என் இதயத்தில் பரவத் தொடங்கியது, அன்றிலிருந்து ஹிஜ்ரீ 204 வரை பதினாறு ஆண்டுகள் மாநபி மணிமொழிகளை ஆராய்ந்து ஆராய்ந்து மூன்று இலட்சம் மணிமொழிகளைப் பதிவுசெய்து கொண்டேன். அம்மணிமொழிகளை வடிகட்டி வடிகட்டி ஐம்பதாயிரம் உண்மையான மணிமொழிகளை மட்டும் தொகுத்து நூலாக வெளியிட்டேன். அதுமட்டுமல்ல அவற்றை மனித குலத்திற்கு போதிக்கவும் முற்பட்டேன்.

மாநபி மணிமொழிகளைப் பருக வேண்டுமென்று தாகத்தோடு வருகின்ற ஆயிரமாயிரம் மக்களுக்கு அல்லும் பகலும் இடைவிடாது அவைகளை எடுத்துரைத்தேன். இந்நூலை முதன் முதலில் பார்வையிட்ட யஹ்யப்னுமுயீன் என்பவர்கள் இதுவரை இப்படிப்பட்ட மணிமொழி நூலொன்றை எவரும் இயற்றவில்லை. 'முஸ்னத் இமாம் அஹ்மது' என்ற இந் நூல் மணிமொழித்துறையில் தாகம்கொண்டிருக்கின்ற எண்ணிறந்த மக்களுக்கு தாகம் தீர்க்கும் பெருமழையாகும் என்று கூறினார்கள்.

இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்கள் இறைவனை வணங்கி வழிபடுவதில் பேரானந்தமடைவார்கள். உலகோர் உறங்கிக்கொண்டிருக்கும்போது அவர்கள் விழித்தெழுந்து தொழுதுகொண்டும், இறைவனை தியானித்துக் கொண்டுமிருப்பார்கள். இறைவணக்கத்தின் காரணமாக அவர்களுடைய முகம் அருளொளியால் பொலிந்து கொண்டிருந்தது. அவ்வொளித் தோற்றத்தைப் பார்க்கும் மாணவர்களும் மற்றவர்களும் ஒருவகையான அச்சத்திற்குள்ளாவார்கள்.

''இமாமவர்கள் நுண்ணிய சட்டமொன்றை விளக்கிடும் பொழுது அதனை மறுத்து எதிர்க்கவேண்டுமென்ற எண்ணம் என் உள்ளத்தில் எழும். ஆனால் அவர்களுடைய அருள் முகத்தை பார்க்கிறபோது என் உள்ளத்தில் எழுந்த எதிர்



உணர்வு அப்படியே அடங்கிப்போய்விடும். பொங்கியெழுகிற பாலில் கொஞ்சம் தண்ணீரை ஊற்றுகின்றபோது அப்பால் அடங்கி விடுகிறதே அது போல'' என்று அபூஉபைதுல் காஸிமி அவர்கள் கூறுகின்றார்கள்.

மேலும் கூறுகிறார்கள்; அபூயூசுப், முஹம்மது இப்னு ஹஸன், யஹ்யப்னுஸயீத், அப்துர்ரஹ்மானிப்னு மஹ்தீ ரஹ்மத்துல்லாஹி அலைஹிம் போன்ற மகாமேதைகளிடமெல்லாம் நான் பாடம் கற்றிருக்கிறேன். அவர்களுடைய அவையில் அமர்ந்து அவர்களிடம் உரையாடியிருக்கிறேன். ஆயினும் என்னிருதயத்தில் அச்சம் அரும்புவதில்லை. அஹ்மது இப்னு ஹன்பல் இமாம் அவர்களுடைய அவையில் அமர்ந்துவிடும் போது என் உள்ளத்தை அச்சம் ஆட்கொண்டு விடுகிறது. அல்லாஹ்வின் நினைவு மலரத் தொடங்கி விடுகிறது. இது அவர்களுக்கிறைவன் வழங்கிய மகத்தான பாக்கியமாகும்.

அருள்மொழி உருவம்

# அஹ்மது இப்னு ஹன்பல் (ரஹ்)

இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்கள் மணி மொழிக் கல்விக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்கள். ஆயிரம் மைல்களுக்கப்பால் அண்ணல் நபிமொழி கிடைக்கப்பெறும் என்கிற உறுதி மிக்க நம்பிக்கை ஏற்பட்டு விடுமாயின் கொஞ்சமும் தயக்கமின்றி நெடும் பயணம் மேற்கொண்டு அம்மணிமொழியைப் பெற்றுக் கொள்வார்கள். அப்படிப் பெற்றுக் கொள்வதில் அவர்கள் அடைகின்ற ஆனந்தத்தை அளவிட முடியாது. அறுசுவை உண்வை அள்ளிப் பருகுவது போல அருள் மொழியை அள்ளி அள்ளிப் பருகுவார்கள். அவர்களைக் காணும் அறிஞர்கள், அதோ! அருள்மொழி இமாமே வந்து விட்டார்கள் என பெருமை படக் கூறுவார்கள்.

''மக்கள் என்னை அருள்மொழி இமாமெனக் கூறுகின்றனர். நானோ அம்மொழிகளைத் தேடி அலைவதில் பெருந் தாகமுற்றவனாக இருக்கிறேன் இதோ என்னுடைய கரத்தைப் பாருங்கள்! அதில் மைக்கூடு இருக்கிறது. இந்நிலையில் என்னை இமாமென்று இவர்கள் எப்படி கூறுகிறார்கள்? புதைக் குழியில் என்னை அடக்கம் செய்கின்றவரை மணி மொழிக் கல்வியில் பயணம் செய்துகொண்டேயிருப்பேன்'' என இமாமவர்கள் தம்மாணவர்களை நோக்கிக் கூறுவார்கள்.

''மணிமொழி அமுது பருகுவதில் பேரின்பம் கண்டு விட்டீர் என உம்மை மக்கள் போற்றிக் கூறுகின்றார்களே அப்படியானால் அவ்வமுதிலிருந்து கொஞ்சத்தை எம் பாத்திரத்திலும் ஊற்றுவீராக! அதனை நானும் பருகி இன்புறுகிறேன்'' என இமாமர்களை நோக்கி இலக்கியச் சுவைமிகு கவிதையொன்றை இமாம் ஷாபி (ரஹ்) அவர்கள் கூறினார்கள்.



எனவே இமாமவர்கள் நபிமொழிக் கல்வியினைப் பெற்று அதனை அவனியோரும் பெற்று இன்புற அயராது அல்லு பகல் முயன்று வந்தார்கள். அல்லாஹ்வின் அருள் அன்பைப் பெறவேண்டுமென்ற தூய நோக்கோடு தான் பெற்ற மணி மொழி இன்னமுதை இத்தரணி மாந்தர்களுக்கும் பருகச் செய்ய வேண்டுமென்பதற்காகப் பெரும்பாடு பட்டார்கள். நபிமொழியறிவு பெறுவதில் வறுமையும் பிணியும் இமாமவர்களுக்குத் தடையாக இருந்ததேயில்லை.

## உழைத்தே உண்பார்கள்

நபிமொழிகளைத் தேடும் அதே நேரத்தில் தம்முடையவும், தம் குடுப்பத்தினருடையவும் உணவுக்காக பெரும் பிரயாசையை மேற்கொள்வார்கள். காலையில் கயிற்றுடன் கிளம்பி காய்ந்துலர்ந்த பேரீச்ச மட்டைகளைச் சேகரித்து அவற்றைக் கட்டி தலையின் மீது சுமந்து கொண்டு கடை வீதியில் விற்று அதில் கிடைக்கப் பெறுகின்ற வருமானத்தைக் கொண்டு தானும் தன் குடும்பத்தவர்களும் உண்டு மகிழ்வார்கள். மாலை நேரம் வந்து விட்டாலோ துள்ளிக் குதித்து மணிமொழிப் பொய்கையில் மூழ்குவார்கள்.

இப்படி வறுமையோடு போராடிக் கொண்டிருக்கின்ற இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்களுக்கு சுப்யான் இப்னு உயைனா அவர்கள் பேருதவி வழங்க வேண்டுமென்றெண்ணி அவர்களைச் சந்திக்கிறார்கள். அஹ்மதே! இதோ ஒரு பொற்காசு என்னிடம் இருக்கிறது, இதனைப் பெற்றுக் கொண்டு உமது குடும்ப வாழ்வை மேலோங்கச் செய்வீராக! என்று கூறினார்கள். உடனே இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்கள் பொற்காசு ஒன்றும் எம்மை செம்மைப் படுத்திவிட முடியாது. என்னுடைய குடும்பம் சிறக்க என்னிடம் போதுமென்ற பொன்மனம் இருக்கிறது. எனவே பொற்காசைக் கொண்டு இன்பம் பெறுவதை விட அருள்மொழியை அவனியோருக்கு வழங்குவதிலேதான் பேரின்பம இருக்கிறது எனக் கூறினார்கள்.

## உயிர் போய்விடினும் 'குர்ஆன் மக்லூக்' என்றுரைக்கமாட்டேன்

வறுமைப் பிணியில் எரிந்து கொண்டிருந்த இமாமவர்கள் ஆதிக்க வெறியர்களின் பிடியில் சிக்குண்டு சொல்லொணாத் துன்பத்திற்குள்ளானார்கள். அவர்கள் தொடர்ந்து பதினான்கு ஆண்டுகள் வேதனைக்குள்ளாக்கப்பட்டார்கள். சாட்டையடியின் காரணமாக அவர்களின் பொன்மேனி பாளம் பாளமாகக் கிறி உதிரம், கசிந்து கொண்டிருந்தது. அவர்களின் மேனியில் விழுகின்ற சாட்டையடியின் குரல் கேட்கின்ற மக்களெல்லாம் உளமுருகிக் கண்ணீர் வடிப்பார்கள்.

இம்மகா உத்தமரையா அடிக்கிறீர்கள்? அவர் என்ன குற்றம் செய்தார்? அரசுப் பொருளை அபகரித்துக் கொண்டாரா? அல்லது களவொழுக்கத்தில் ஈடுபட்டாரா? அல்லது அரசைக் கவிழ்க்க எதிரிகளுடன் சேர்ந்து கொண்டு சதி செய்தாரா? பிறகு ஏன் இவரைத் துன்புறுத்துகிறீர்கள்? அவர் மேனியெல்லாம் உதிரத்தினால் செந்நிறமடைந்து விட்டதே! கருணை நபியவர்களின் கன்னல் மொழியினைத்தேடி நாடு நாடாக அலைந்து மாநபி அருள் மொழிக்கு அருந் தொண்டாற்றிய இம்மகா உத்தமருக்காக இப்படி துன்பம் கொடுக்க வேண்டும்? உங்களுக்கு இரக்கமில்லையா? என்று மக்களெல்லாம் கண் கலங்கியவாறு கூறுவார்கள்.

வெறிபிடித்த கலீபா மஃமூனும் அவரையடுத்து வந்த கலீபா முஃதஸிமும். முஃதஸிலாக்களுடன் சேர்ந்து கொண்டு பதினான்கு ஆண்டுகள் அஹ்மது இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்களுக்கு கொடுந்துன்பத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இப்படிப்பட்டவர்கள், 'குர்ஆன் மக்லூக்—படைக்கப்பட்டது' என்ற கொள்கையுடையவர்கள், இதே கொள்கையை இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்களும் ஏற்றுக் கொண்டு சட்டமாக்க வேண்டுமென்று அவர்களை கலீபா மஃமூன் வற்புறுத்தினரர்; கட்டாயப்படுத்தினார்.



ஆனால் இமாமவர்கள் இதனை ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணித்து விட்டார்கள், வான்மறை அல்குர்ஆன் எப்படி படைக்கப்பட்டதாக இருக்க முடியும்? அது என்றும் அழியாத நிலையானதாகும். அல்லாஹ்வின் அருள் மொழியாகும். அது படைக்கப்படாத வான்மொழி அதனைப் படைக்கப்பட்டது என்று நான் எப்படிக் கூறுவேன் என இமாமவர்கள் இயம்பினார்கள்.

அனைத்துப் பொருட்களையும் அல்லாஹ்தானே படைத்தான். குர்ஆனும் பொருள் என்பதில் அடங்கி விடுமல்லவா? என கலீபா மஃமூன் கேட்டார். உடனே இமாமவர்கள் பொருள் என்பது புறப்பொருளைக் குறிக்கும். ஆனால் கலாமுல்லாஹ் என்பது இறை உள்ளமையோடு இணைந்து போன அகமியமான ஒன்று. எனவே அது ஒருக்காலும் படைக்கப்பட்டதாக ஆகாது. வான்மறை அல்குர்ஆன் கைரு மக்லூக்—படைக்கப்படாதது என்று அறுதியிட்டு உறுதியாகக் கூறினார்கள். இதனைச் செவியேற்ற கலீபா மஃமூன் இவரைத் தண்டிக்குமாறு தன் பணியாட்களுக்குக் கட்டளையிட்டார்.

இமாமவர்களோ, என்னை எத்துணை கொடிய துன்பத்திற்கு உள்ளாக்கினாலும், அத்துன்பத்தில் என் உயிரே போய் விட்டாலும் குர்ஆன் மக்லூக்—படைக்கப்பட்டது என்று ஒருக்காலும் நான் கூற மாட்டேன். ஏனெனில் படைக்கப்பட்ட ஒவ்வொரு பொருளும் அழியும். ஆனால் அல்குர்ஆன்—இறைமொழி ஒருக்காலும் அழியமாட்டாது. அது உலகம் உள்ளளவும், விண்ணும் மண்ணும் உள்ளளவும் அதற்கப்பாலும் நிலைத்திருக்கக் கூடிய ஜீவமொழி, அல்லாஹ்வின் மொழி என்று கூறிக்கொண்டேயிருந்தார்கள்.

இப்படி அவர்கள் கூறி முடிப்பதற்கு முன்னே அவர்களுடைய இரு கரங்களும் விலங்கிடப்பட்டு சிறைக்குள் தள்ளப்பட்டார்கள். தொடரான வேதனைக்கு உள்ளாக்கப்பட்டார்கள். அவர்களுடைய பொன்மேனி செந்நிறமடைந்தது.

ஆயினும் அவர்களுடைய நாவிலிருந்து ''வான்மறை அல் குர்ஆன் அல்லாஹ்வின் மொழி, படைக்கப்படாத மெய்யாய மொழி'' என்று ஒலித்துக் கொண்டேயிருந்தது. பலமிக்க தன் கொள்கைப் பிடிப்பிலிருந்து கடுகளவும் அவர்கள் பிரளவில்லை.

கலீபா மஃமூனுடைய ஆட்சி தகர்ந்தது. முஃதஸிமுடைய ஆட்சி புரட்சி வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது. இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் விடுவிக்கப்பட்டார்கள். அவர்களுடைய உடல் மெலிந்து உருமாறிப் போயிருந்தது. அவர்களை அடையாளம் கண்டு கொள்வது கடினமாக இருந்தது. ஆயினும் அவர்கள் கவலை கொள்ளவில்லை, உறுதி மிக்கத் தன்னுடைய கொள்கையை இறுகப்பற்றியிருந் தார்கள்.

எனவே அவர்களுடைய கொள்கை வென்றது, உறுதியும் தூய்மையுமுள்ள கொள்கை எப்போதும் வெல்லத்தான் செய்யும். வான்மறை அல்குர்ஆன் இறைமொழி! என்றென் றும் நிலைத்திருக்கின்ற மொழி; படைக்கப்படாத அருளப் பட்ட மொழி என்று கூறிய இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்கள் ஆனந்தக் கண்ணீர் வடித்தார்கள்.

இப்படியெல்லாம் வான் மறைக்கும், வள்ளல் நபி மொழிக்கும் கடுகளவு மாறுபடாமல் மணிமொழிச் சட்டங் களை இயற்றி உலகோர் அனைவரும் உத்தம நபியவர்களின் மணிமொழிச் சட்ட வழியில் நடக்க அடிகோலினார்கள். இறைவனுக்கு முற்றாய் அடிபணிந்த அருமை நபி அவர் களுடைய மணிமொழிகளின் உண்மைகளைக் கண்டு கொள்ள அயராது பாடுபட்டு இறையின் பேரொளியைப் பெற்ற இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்கள் ஹிஜ்ரீ 241-ல் வபாத்தடைகின்றார்கள். அல்லாஹ்வின் மொழி படைக்கப்படாத அருளப்பட்ட மொழி என்பதை நிலைக்கச் செய்வதற்காக தன் உடல் பூராவற்றையும் உதிரமாக்கிக் கொண்ட உத்தமர் இதோ சாய்ந்துவிட்டார். அவர்களுடைய



மரணச் செய்தியைக் கேட்டு விட்ட உலகோர் கண்கலங்கி அவர்களுடைய உடலைத் தரிசிக்க வேண்டுமென்ற பேராவலோடு ஓடி வந்தனர். அவர்களுடைய ஜனாஸா தொழுகையில் கலந்து கொள்ள இலட்சோப லட்சம் மக்கள் கூடி கண்ணீர் உகுத்தனர். எத்த இமாமுக்கும் கிடைக்கப் பெறாத மக்கள் கூட்டம், அணியணியாக வந்து அவர்களு டைய ஜனாஸாத் தொழுகையில் கலந்துகொண்டது.

யா அல்லாஹ! எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அன்ன வர்களுடைய அருள்மொழிகளின் உண்மைகளைக் கண்டு கொள்ளவும், அவைகளிலிருந்து மணிமொழிச் சட்டங்களை விளக்கித் தரவும் அரும்பாடுபட்டு உன்னருள் மழைகளை ஏந்திக் கொள்ளும் தங்கப் பேழைகளாக அமைந்து விட்ட நன்மணிகளான நான்கு பெரும் இமாம்களுக்கு வருஷிக்கப் பெறுகின்ற அருளோடு எங்களுக்கு நீ அருளை வருஷிப்பா யாக! அம்மாபெரும் வலிகள் வேந்தர்களான இமாம்கள் காட்டிச் சென்ற வழியில் எங்களை நடக்கச் செய்வாயாக! ஆமீன்!

## அவர்களின் நோக்கமென்ன?

பர்லுத் தொழுகைக்குப் பிறகு கூட்டு துஆ இல்லை!

தராவீஹ் தொழுகை இருபது ரக்அத்துகள் தொழ வேண்டியதில்லை.

களா தொழ வேண்டியதில்லை! ஆட்காட்டி விரலை ஆட்ட வேண்டும்!

ஒலுச் செய்யாமல் குர்ஆனைத் தொடலாம்!—என்றெல் லாம் நம்மில் சிலர் கூறுகின்றனர். அப்படி அவர்கள் கூறு கின்றார்களே! நபி வழியைப்பின்பற்ற வேண்டுமென்பதற்கா? அதனை பரப்பவேண்டுமென்பதற்கா? இல்லை! முற்றிலும் இல்லை!

நபிமொழிகளிலிருந்து ஆராய்ந்து எடுக்கப்பட்ட சட்டங்களின்படி மத்ஹபுகளின்படி கட்டுப்பாடாக நடந்து வரும் முஸ்லிம்களிடையே குழப்பத்தையும், பிளவையும் உண்டு பண்ண வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தை மனதில் வைத்துக் கொண்டுதான் அவர்கள் அப்படிக் கூறுகிறார்கள், மணிமொழிகளைப் பின்பற்றுகிறோம் என்று அவர்கள் கூறுவதெல்லாம் மக்களை ஏமாற்றுவதற்காகத் தான், இவ்வுண்மையை அவர்கள் நடந்துகொள்ளும் விதம் மிகத் தெளிவாக புலப்படுத்தும்.

உதாரணம்: அணி அணியாக மக்கள் தொழுது கொண்டிருக்கையில் அத்தஹிய்யாத்தில இருக்கும்போது அவர்களில் ஒருவர் தன் ஆட்காட்டி விரலைச் சுற்றிச் சுற்றி ஆட்டுகின்றார். இது அருகிலிருப்பவருடைய உளத் தூய்மையையும் மன ஓர்மையையும் மிகவும் பாதித்து விடுகிறது. இதன் காரணமாக மன வேதனையடைந்த அவர் தொழுகை முடிந்ததும் விரலை ஆட்டியவரைக் கண்டிக்கின்றார். உடனே அவர்இவரை எதிர்க்கிறார். இப்படி இருவருக்கிடையே பேச்சு தடித்து அங்கு சிறிதொரு கலகமே ஏற்பட்டு விடுகிறது.

இன்னொரு உதாரணம்: முஸ்லிம்கள் நபிமொழிப்படி ஜமாஅத்தாக தொழுத பிறகு இமாம் துஆ ஓத மஃமூம்கள் ஆமீன் கூறி கூட்டாக துஆச் செய்கின்றார்கள். இதனை அவர்கள் எதிர்க்கிறார்கள். இறைவனிடம் ஒரு முகமாகக் கையேந்திக் கேட்பதை எப்படி இவர்கள் எதிர்க்கிறார்கள்? என்று ஜமா அத்தார்கள் வேதனையும், வேகத்தையும் காட்டுகிறார்கள், பதிலுக்கு இவர்களும் வேகத்தைக் காட்டுகிறார்கள். எனவே அங்கு ஜமா அத்தார்களுக்கும் இவர்களுக்குமிடையே மோதல் ஏற்படுகிறது.

மற்றொரு உதாரணம்: நபி வழிப்படியும் முஸ்லிம்களுடைய ஏகோபித்த கருத்தின்படியும் நாம் தராவீஹ் இருபது ரக்அத்கள் தொழுதுவருகிறோம். இதனை எதிர்த்து எட்டு ரக்அத்துகள் தான் என்று இவர்கள் கூறுகின்றனர். ஜமாஅத்தாக தொழுது கொண்டிருக்கும் போதே எட்டு ரக்அத்கள் முடிந்ததும் ஜமாஅத்தையே புறக்கணித்து வேகமாக வெளியேறி விடுகின்றனர், இதனைக் கண்ட ஜமாஅத்தினர்கள் கொதிப்படைகின்றனர். இதன் காரணமாகவும் பிளவும் மோதலும் ஏற்படுகின்றன.



இவர்கள் தமக்கு தவ்ஹீத் அமைப்பினர் என பெயர் வைத்துக்கொண்டு முஸ்லிம் ஜமாஅத்தினரோடு மோதி வருகின்றனர். இவர்கள் எங்கு இருந்தாலும் அமைதியோடு வணக்கவழிபாடுகளில் ஈடுபட்டிருக்கின்ற முஸ்லிம்களிடையே இப்படி குழப்பத்தை உண்டு பண்ணி வருகிறார்கள். இதை ஆங்காங்கே நீங்கள் நேர்முகமாகப் பார்த்தும் இருப்பீர்கள்.

முஸ்லிம்களிடையே மோதலையும், பிளவையும் யூதர்களும், கிறிஸ்தவர்களும், R. S. S. காரர்களும் தான் உண்டு பண்ணுகின்றார்கள். அதே வேலையை இவர்களும் முஸ்லிம்களிடையே செய்து வருகின்றார்கள். இவர்கள் விஷயத்தில் முஸ்லிம் ஜமா அத்தார் மிக எச்சரிக்கையாக இருந்து கொண்டு ஜமாஅத்தார்களுக்கு முரண்பாடாக நடந்து வருவதையும் தடுத்துவிட வேண்டும். இதனை ஜமா அத் ரீதியாகவும், வட்டார ரீதியாகவும் செய்ய வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவர்கள் மோதி வருகின்ற மஸாயில்கள் சிலவற்றிற்கு தக்க ஆதாரங்களோடு மிகத்தெளிவாக இதோ விளக்கங்கள் எழுதியிருக்கிறோம். நீங்களும் நன்கு கருத்தூன்றிப் படித்து தெளிவு பெற்று மத்ஹபுகளின் அடிப்படையில் வாழுமாறு உங்களை மிகவும் வேண்டிக் கொள்கிறோம். ஏனெனில் மத்ஹபுகள் என்பது, வான்மறையிலிருந்தும் வள்ளல் நபிமொழிகளிலிருந்தும் ஆராய்ந்து எடுக்கப்பட்ட சட்டங்களாகும். மத்ஹபுகள் பலவாறாக இருந்தாலும் சட்டங்களின் அடிப்படையில் அவை ஒன்றுதான்! ஒரே சட்ட அடிப்படையில் வாழக்கூடியவர்கள்தான் முஸ்லிம்கள்! அவர்களுடைய வழி ஒரே வழிதான், அதுதான் நேர்வழி! இமாம்கள் விளக்கித் தந்த நல்லவழி! எனவே அல்லாஹ் நம்மனைவரையும் நேரிய—நல்ல வழியில் நடத்தி நம்மை உறுதிமிக்க ஒன்றுபட்ட சமுதாயமாக ஆக்கியருள்வானாக!

—★—

# ஆட்காட்டி விரலை உயர்த்துவது சுன்னத்தாகும்

தொழுகையில் அத்தஹிய்யாத் ஓதும் போது ஆட்காட்டி விரலை உயர்த்துவது சுன்னத்தாகும். இதற்கு பின்வரும் நபிமொழிகள் சான்றுகளாக அமைந்திருக்கின்றன,

1. ''நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுகையில் அத்தஹிய்யாத்திற்காக உட்கார்ந்து விட்டார்களேயானால் தனது வலதுகர மணிக்கட்டை வலது தொடையின் மீது வைத்துக் கொண்டு விரல்களை மடக்கி ஆட்காட்டி விரலை மட்டும் உயர்த்தினார்கள்'' என அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

(முஸ்லிம், பாகம்: 2, பக்கம்: 90)

2. அப்துல்லாஹ் இப்னு ஜுபைர் (ரலி) அவர்கள் சொல்கின்றார்கள்: நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இரண்டாவது ரக்அத்தில் அல்லது நான்காவது ரக்அத்தில் உட்கார்ந்து விடுவார்களேயானால், தன் இரு கரங்களையும் இரு முட்டுகளின் விளிம்பின் மீது வைத்துக் கொண்டு அப்பால் தன் வலதுகர ஆட்காட்டி விரலை உயர்த்தினார்கள்.

3. ''நபியவர்கள் தொழுகையில் அமர்ந்து விடுவார்களேயானால் தம் வலக்கரத்தை முட்டின் விளிம்பின் மீது வைத்துக் கொண்டு ஆட்காட்டி விரலை உயர்த்தினார்கள்'' என்று அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (திர்மிதி பாகம்: 2, பக்கம் 87)

4. வாயில் இப்னு ஹுஜ்ரு (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்; நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம் ஆட்காட்டி விரலை உயர்த்துவதை நான் பார்த்தேன்.

(இப்னுமாஜா பாகம்; 1, பக்கம் 295)



5. அப்துல்லாஹ் இப்னு ஜுபைர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்! நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அத்தஹிய்யாத் ஓதும்போது தன் ஆட்காட்டி விரலை உயர்த்தினார்கள். அதனை ஆட்டவில்லை.

(அபூதாவூத் பாகம்: 1, பக்கம் 260)

6. ''நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அத்தஹிய்யாத்தின் போது ஆட்காட்டி விரலை உயர்த்தினார்கள். அதனை ஆட்டவில்லை'' என்று இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்கள் அறிவிக்கின்ற மணிமொழியொன்றை தல்கீஸுல் கபீர் என்ற நூல் 500-ம் பக்கத்தில் இப்னு ஹஜருல் அஸ்கலானி (ரஹ்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

இப்படியே இப்னு ஹிப்பான், தாரமி போன்ற மணிமொழி நூற்களிலும் நபியவர்கள் ஆட்காட்டி விரலை உயர்த்தினார்கள், சமிக்ஞை பண்ணினார்கள். அதனை ஆட்டவில்லை என்றே இடம் பெற்றிருக்கின்றன.

மேலே கண்ட மணிமொழிகளைக் கொஞ்சம் கவனித்துப் படியுங்கள்! அவற்றில் சில ஆட்காட்டி விரலை உயர்த்தினார்கள் என்றும், வேறுசில ஆட்காட்டி விரலை ஆட்டவில்லை என்றும் தெளிவு படுத்துகின்றன. இம்மணிமொழிகளிலிருந்து நம்முடைய இமாம்கள் ஆட்காட்டி விரலை உயர்த்துவது சுன்னத். அதனை ஆட்டுவது மக்ரூஹ் என்ற சட்டங்களை விளக்கித் தந்தார்கள். இச்சட்டம் அறிவாய்ந்ததும் இயற்கையானதுமாகும்.

இம்மணிமொழிகளின் அடிப்படையில் தாபியீன்களும் தபஉத்தாபியீன்களும் செயல்பட்டு வந்தார்கள். அதற்குப் பின்னரும் இன்று வரை முஸ்லிம் சமூகமனைத்தும் செயல்பட்டு வந்திருக்கின்றது. ஏகோபித்த இந்த செயல்பாட்டிற்கு மாற்றமாக நடப்பதற்கு எந்த ஒரு முஸ்லிமுக்கும் அருகதையில்லை.

இங்கு கேள்வியொன்று எழுகிறது. அஃது ''நபியவர்கள் ஆட்காட்டி விரலை ஆட்ட நான் பார்த்தேன்'' என்று வாயில் இப்னு ஹுஜ்ரு (ரலி) அவர்கள் அறிவித்த மணிமொழி யொன்றை இப்னுஹுஸைமா, பைஹகீ ஆகியோர் ரிவா யத்துச் செய்திருக்கிறார்களே! இது குறித்து நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?

இமாம் பைஹகீ, இப்னுஹுஸைமா இவ்விருவரும் அறிவித்த மணிமொழிக்கு நேர்மாற்றமாக இமாம் அஹ்மது, இமாம் அபூதாவூது. இமாம் இப்னு ஹிப்பான் ஆகியவர்கள் அறிவித்திருக்கிறார்கள், அப்படியே இமாம் பைஹகீ அவர் களும் அறிவித்திருக்கிறார்கள்.

இமாம் பைஹகீ அவர்கள் நபியவர்கள் ஆட்காட்டி விரலை ஆட்டினார்கள் என்பதை அறிவித்துவிட்டு அப்பால் அதற்கு அடியிற்கண்டவாறு அருமையான விளக்கத்தையும் தந்திருக்கிறார்கள்;

ஆட்காட்டி விரலை ஆட்டுவது என்பதன் பொருள் திரும்பத் திரும்ப அதனை ஆட்டிக் கொண்டிருந்தார்கள் என்பது அல்ல, அதனைக் கொண்டு சமிக்ஞை பண்ணினார் கள் என்பதுதான். இந்த விளக்கம் இமாமவர்களுடைய கருத்து மட்டுமல்ல, ஹதீஸ் கலை வல்லுநர்களின் ஒப்பு தலைப் பெற்ற கருத்துமாகும்.

எனவே இமாம் பைஹகீ அவர்களுடைய விளக்கப்படி நபியவர்கள் ஆட்காட்டி விரலை உயர்த்தினார்கள்—சமிக்ஞை பண்ணினார்கள் என்பதுதான் பொருளாகும். இப்பொருளின் அடிப்படையில் மணிமொழிகளுக்கிடையே வேறுபாடின்றி அனைத்தும் ஒன்றாகி விடும்.

இன்னொரு விஷயத்தையும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும். அஃது ஆட்காட்டி விரலை ஆட்டினார்கள் என்று வாயில் இப்னு ஹுஜ்ரு (ரலி) அவர்கள் அறிவித்த மணி மொழியின் ராவிகளில் ஆஸிம் இப்னு குலைப் என்பவரும் உள்ளார். 'இவரைவிட ஆட்காட்டி விரலை உயர்த்தினார் கள் ஆட்டவில்லை' என்று அறிவித்த ராவிகள் அனைவரும் மிக்க மேலானவர்கள். மிக்க நேர்மையானவர்கள், மிகவும் தேர்வு செய்யப்பட்டவர்கள். அவர்கள் அறிவிக்கின்ற மணி மொழிகளை அப்படியே ஏற்றுக் கொள்வது அவசியமாகும். எனவே ராவிகளுடைய அடிப்படையிலும் ஆட்காட்டி விரலை உயர்த்தினார்கள் என்பது மட்டுமே ஏற்புடையதாகும்.



ஆட்காட்டி விரலை ஆட்டுவது ஷைத்தானை திகில டையச் செய்துவிடும் என்று இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவித்த மணிமொழி ஸஹீஹானது அல்ல. ஏனெனில் இதனை அறிவிப்பவர்களில் வாகிதீ என்பவரும் இருக்கின் றார். இவர் பலவீனமானவர்.

எனவே ஆட்காட்டி விரலை உயர்த்துவது சுன்னத். அதனை ஆட்டுவது மக்ரூஹ் என்பது மிகத் தெளிவான ஒன்றாகும், மாநபி மணிமொழியை அப்படியே பிரதிபலிக்கக் கூடியதுமாகும்.

வாதத்திற்காக ஆட்காட்டி விரலை ஆட்டுவதை ஏற்றுக் கொண்டால் அடியிற் காணும் ஐயப்பாடு எழுகிறது. அஃது ஆட்காட்டி விரலை எப்படி ஆட்டுவது? மேலும் கீழுமா? அல்லது தெற்கும் வடக்குமா? அல்லது சுற்ற வேண்டுமா? இதற்கு ஆதாரங்கள் உண்டா? மாநபி மணிமொழிச் சான்று கள் உண்டா? எந்த ஆதாரமும் இருப்பதாக இதுவரை எவரும் கூறியதில்லை. எனவே ஐயப்பாடு என்ற இருளில் விழுந்து தவிப்பதை விட மிகப் பிரகாசமான, எழிலார்ந்த, ''ஆட்காட்டி விரலை உயர்த்தினார்கள்'' என்பதன் பக்கம் திரும்பி விடுவது ஏற்றமுடையதும் அறிவுடையதுமாகும்.

## களாத் தொழுகை அவசியமாகும்

'களா' என்பது ஒரு வணக்கத்தை அதற்கென குறிப் பிடப்பட்ட நேரத்தில் செய்யாமல் விட்டு விட்டு பிறிதொரு

நேரத்தில் திரும்பச் செய்வதாகும். இதற்குத்தான் 'களா' என்று ஷரீஅத் மொழியில் கூறப்படுகிறது. இப்படி தவறி விட்ட தொழுகையை களாச் செய்வது அவசியமாகும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், அவர்களின் அன்புத் தோழர்களும் குறிப்பிடப்பட்ட நேரங்களில் செய்யத் தவறி விட்ட தொழுகைகளை பிறிதொரு நேரத்தில் களா வாகத் தொழுதிருக்கிறார்கள்,

ஹிஜ்ரீ 5-ஆம் ஆண்டில் கன்தக்—அகழ்போர் நடை பெற்றது. முஸ்லிம்களுக்கு முற்றிலும் எதிரான பல கூட்டத் தினர் ஒன்றாக இணைந்து மாபெரும் அணியாகத் திரண்டு அண்ணலவர்களையும் ஸஹாபாப் பெருமக்களையும் ஒழித் துக் கட்டி விடவேண்டும் என்ற கொடுமையான எண்ணத் துடன் செயல்படத் தொடங்கினார்கள். எந்நேரத்திலும் முஸ்லிம்களைத் தாக்கிவிடும் மாபெரும் அச்சுறுத்தல் ஏற் பட்டுக் கொண்டேயிருந்தது. இம்மாபெரிய அச்சுறுத்த லிலிருந்தும் தம் அணியினரைக் காப்பாற்றும் பொருட்டு மிகப் பெரும் அகழ் ஒன்றை அண்ணல் நபியவர்களும் ஸஹாபாப் பெருமக்களும் தோண்டத் தொடங்கினார்கள்.

பகைவர்களின் பயங்கர அச்சுறுத்தல் கார்முகிலென சூழ்ந்து வந்துகொண்டிருப்பதினால் நபியவர்களும் அவர் களரும் தோழர்களும் கடும் பசியையும் பொருட்படுத்தாமல் அகழ் வெட்டிக் கொண்டேயிருந்தார்கள். இதன் காரணமாக அண்ணல் நபியவர்களுக்கும் ஸஹாபாப் பெருமக்களுக்கும் அஸர் தொழுகை தவறி விட்டது. அவர்களனைவரும் மிகுந்த வருத்தத்துடன் சூரியன் மறைந்த பிறகு மஃரிப் நேரத்தில் அஸர் தொழுகையை களாவாகத் தொழுதுவிட்டு அப்பால் மஃரிபைத் தொழுதார்கள்.

அஸர் தொழுகை மட்டும்தான் தவறி விட்டது என்று புகாரீ ஷரீப் 84-ம் பக்கத்திலும் முஸ்லிம் 66-ம் பக்கத்திலும் இடம் பெற்றிருக்கிறது. ஆனால் திர்மிதி மற்றும் ஹதீஸ்



நூற்களில் அண்ணல் நபியவர்களுக்கும் அவர்களரும் தோழர் களுக்கும் லுஹர், அஸர், மஃரிப் ஆகிய மூன்று நேரத் தொழுகைகளும் தவறி விட்டன. எனவே அவர்கள் அம் மூன்று நேர தொழுகைகளையும் முறையே வரிசைப்படுத்தி இஷாவுடைய நேரத்தில் களாவாக தொழுது முடித்தார்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இம்மணிமொழிகள் நபியவர்களும் ஸஹாபாப் பெரு மக்களும் தவறி விட்ட தொழுகைகளை மற்றொரு நேரத்தில் களாவாகத் தொழுதிருக்கிறார்கள் என்பதை உள்ளங்கை நெல்லிக்கனி போல தெளிவாக எடுத்துரைக்கின்றன. அப் படியே உறக்கத்தின் காரணமாக தவற விட்ட தொழுகையை பிறிதொரு நேரத்தில் களாச் செய்திருக்கிறார்கள் என்பதை அடியிற் கண்ட மணிமொழி தெளிவுபடுத்துகிறது.

ஓர் இரவு நபியவர்களும் எண்ணிறந்த தோழர்களும் நடந்து வந்து கொண்டிருந்தார்கள். இரவு பூராவும் தொடர்ந்து நடந்ததின் காரணமாக அயர்வும் களைப்பும் அவர்களுக்கு அதிகமதிகம் ஏற்பட்டன. எனவே கடைசி இரவின்போது சுபுஹுத் தொழுகைக்கு எழுப்புவதற்காக ஒருவரை நியமித்து விட்டு அவர்களனைவரும் உறங்கி விட்டனர். சுபுஹுத் தொழுகைக்காக எழுப்புவதற்குப் பொறுப்பேற்றவரும் உறங்கி விட்டார். அனைவருமே உறக்கத்தில் ஆழ்ந்து விட்டனர்.

காலைக் கதிரவனின் பேரொளி அவர்களுடைய மேனி யில் பட்ட பிறகுதான் அவர்களனைவரும் விழித்தெழுந்தனர். உடனே நபியவர்கள் சுபுஹுத் தொழுகை தவறி விட்டதை எண்ணி மனம் வருந்தி அந்த இடத்தை விட்டும் அகன்று கொஞ்ச தூரம் நடந்தார்கள். அதன் பிறகு சுன்னத் இரண்டு ரக்அத்கள் தொழுதுவிட்டு இகாமத் சொல்லி சுபுஹுத் தொழுகை இரண்டு ரக்அத்களையும் களாவாகத் தொழுது முடித்தார்கள்.

இந்நிகழ்ச்சி புகாரீ, முஸ்லிம் மற்றும் மணிமொழி நூற்களிலும் காணப்படுகிறது. எனவே உறக்கம் காரணமாக தவறிவிட்ட தொழுகையை களாச் செய்து தொழுது விட வேண்டும் என்பதை மேலே கண்ட மெய்யாய மணிமொழி தெளிவுபடுத்துகிறது. அப்படியே ஒருவன் தொழுகையை மறந்து விட்டுவிடுவானாயின் அதனை நினைவு படுத்திய பொழுது தொழுது விடுவான் என்ற மாநபி மணிமொழி எல்லா ஹதீஸ் நூற்களிலும் காணப்படுகிறது.

எனவே மேலே கண்ட மாநபி மணிமொழிகளிலிருந்து அடியிற் கண்ட மூன்று உண்மைகளை மிகத் தெளிவாகவும் சந்தேகத்திற் கிடமின்றியும் விளங்கிக் கொள்கிறோம்.

1. அலுவல் காரணமாக தொழுகையை அதற்குரிய நேரத்தில் தொழத் தவறி விட்டால் அதனை வேறொரு நேரத்தில் களாவாகத் தொழுது விட வேண்டும்.

2. உறக்கத்தின் காரணமாக தொழுகை தவறி விட்டால் அதனை பிரிதொரு நேரத்தில் களாவாகத் தொழுது விடவேண்டும்.

3. தொழுகையை மறந்து விட்டால் நினைவு வந்ததும் அதனை தொழுது விடவேண்டும்.

மேலே கண்டவற்றை மீண்டும் ஒரு முறை படித்துப் பாருங்கள்! அண்ணல் நபியவர்களும் அவர்களரும் தோழர்களும் தவறிவிட்ட தொழுகைகளை களாவாகத் தொழுதிருக்கிறார்கள். இந்தப் பேருண்மையின் அடிப்படையில் நான்கு பெரும் இமாம்களும் தவறிவிட்ட தொழுகைகளை களாச் செய்வது அவசியம் என்று சட்டம் செய்திருக்கிறார்கள். இதற்குஎதிரான எந்தநடைமுறையும் அறிவிக்கப்படவில்லை.

ஆனால் ஹிஜ்ரீ 661-ல் தோன்றிய இப்னு தைமிய்யா என்பவரும் அவரைச் சார்ந்த சிலரும் தவறிப் போய்விட்ட தொழுகையை களாச் செய்ய வேண்டியதில்லை. அதற்குப்



பதிலாக நபிலான தொழுகைகளை அதிகப்படுத்துவது அவசியமாகும் என்று கூறியிருக்கின்றனர். இது அப்பட்டமான தவறாகும். மாநபி மணிமொழிக்கு முற்றிலும் மாறானதுமாகும். இறைவனால் விதிக்கப்பட்ட பர்லான தொழுகையை ஒருவன் விட்டு விட்டானாயின் அது பெரிய குற்றமாகும். அக்குற்றத்திலிருந்து மீள வேண்டுமாயின் எந்த பர்லான தொழுகையை அவன் விட்டானோ அந்த தொழுகையை பிரிதொரு நேரத்தில் களாச் செய்ய வேண்டும். அது அவனுக்கு குற்றப் பரிகாரமாகும். பர்லான தொழுகையை விட்டு விட்டு அதற்குப் பதிலாக நபில் தொழ வேண்டிய அவசியம் என்ன வந்து விட்டது?

தவறிப்போன ஒரு தொழுகையை களாச் செய்யாமல் அதற்குப் பதிலாக தெளபாச் செய்திருக்கிறார்கள் என்பதற்கு எள்ளளவு ஆதாரமுமில்லை. மாநபி அவர்களிடமிருந்து எந்தச் செயலோ, எந்தச் சொல்லோ, எந்த சமிக்ஞையோ அறிவிக்கப்படவுமில்லை.

இறைவன் கூறுகிறான்; ''திண்ணமாக தொழுகை என்பது குறிப்பிடப்பட்ட நேரங்களில் முஃமின்கள் மீது கடமையாக்கப்பட்ட ஒன்றாகும்'' (4;103)

இவ்வசனம் தொழுகையை உரிய நேரத்தில் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும் என்பதையே வலியுறுத்திக் கூறியிருக்கிறது. அப்படி உரிய நேரத்தில் தொழத் தவறி விட்டால் அத்தொழுகையை பிறிதொரு நேரத்தில் களாச் செய்ய வேண்டியதில்லை என்று சிலர் இவ்வசனத்திலிருந்து எதிரான விளக்கம் கொள்கின்றனர். இவ்விளக்கம் அபத்தமானது; உண்மைக்குப் புறம்பானது; மாநபி அவர்களுடைய மகத்தான நடைமுறைக்கு முற்றிலும் மாறானது. எனவே இவ்விளக்கத்தின்பால் கொஞ்சமும் கவனத்தை செலுத்தாமல் சூரிய ஒளியைப் போல பிரகாசித்துக் கொண்டிருக்கிற பெருமானார் (ஸல்) அவர்களுடைய நடைமுறைகளை அப்படியே பின்பற்றுங்கள்.

# தராவீஹ் தொழுகை இருபது ரக்அத்துகள்

''அண்ணல் நபியவர்கள் ரமலான் இரவுகளில் ஜமாஅத் தாக இல்லாமல் தனியாக இருபது ரக்அத்களும் வித்ரும் தொழுது வந்திருக்கிறார்கள்'' என்று அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

''தராவீஹ் தொழுகை இருபது ரக்அத்கள்'' என்பதற்கு மேலே கண்ட மணிமொழியே ஆதாரமாக அமைந்திருக்கிறது

இம்மணிமொழியை இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களிட மிருந்து முக்ஸிம் என்பவர்களும், முக்ஸிம் என்பவர்களிட மிருந்து ஹகம் என்பவர்களும், ஹகம் என்பவர்களிடமிருந்து அபூஷைபசி இப்ராஹீம் இப்னு உஸ்மான் அவர்களும் அறி வித்திருக்கின்றனர். முக்ஸிம், ஹகம் ஆகிய இருவரும் நேர்மையானவர்கள்; நம்பகமானவர்கள், அபூஷைபா இப்ராஹீம் இப்னு உஸ்மான் என்பவர் குறை கூறப்பெற்ற வர். ஆகையினால் அவர் கூறும் மணிமொழி லயீபானது என்று ஹதீஸ் கலை வல்லுநர்கள் கூறுகின்றனர்.

இம்மணிமொழி அறிவிப்பாளர்களில் முதல் இரண்டு பேர்களும் நியாயமானவர்கள்; நம்பகமானவர்கள். மூன்றா வது வருகின்ற அபூஷைபா இப்ராஹீம் இப்னு உஸ்மான் என்பவர் மட்டுமே குறை கூறப் பெற்றவர். அவர் கூறிய மணிமொழி பலவீனமானதுதான். எனினும் அப்பலவீனம் கடுமையடையவில்லை. ஏனெனில் அம்மணிமொழியினு டைய அறிவிப்புத் தொடரில் ஒருவர் மட்டுமே குறை கூறப் பெற்றவர்.

ஒரு மணிமொழியினுடைய பலவீனம் கடுமையடையா விடில் அம்மணிமொழியினை ஆதாரமாகக் கொள்வது நியாயமானதே என்று இமாம் அபூதாவூது (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்.



ஒரு மணிமொழி பலவீனமாக இருந்து அம்மணிமொழி யினை நெறிமிக்க நல்லறிவாளர்கள் அங்கீகரித்து விட்டார் களாயின் அதற்கு ஸனது என்பதே தேவையில்லை என்று ஹதீஸ் கலை வல்லுநர் இப்னு அப்துல் பர்ரு கூறியிருக் கிறார்கள்,

லயீபான மணிமொழியை வெடுக்கென மறுப்பதற்கு எந்த முகாந்திரமும் இல்லை. அம்மணிமொழி குறித்து அடியிற் கண்டபடி ஆய்வு நடத்த வேண்டும்.

1. லயீபான மணிமொழிக்கு மாறாக மெய்யாய மணி மொழி வந்திருக்கிறதா?

2. அம்மணி மொழியின் பலவீனம் கடுமையடைந் திருக்கிறதா?

3. லயீபான மணிமொழிக்கு வலுவூட்டக் கூடிய வேறு ஆதாரங்கள் வந்திருக்கின்றனவா?

இப்படி மூன்று விதமான அடிப்படைகளை மையமாக வைத்துக் கொண்டு லயீபான மணிமொழியை ஆராய்தல் வேண்டும். நபிமொழியின் உண்மையைக் கண்டு கொள் வதில் பேரார்வம் கொண்டவர்களின் பேணுதலுக்கு இது இயற்கையான நியதியாகும்.

எனவே லயீபான ஒரு மணிமொழிக்கு மாறாக மெய்யாய மணிமொழியெதுவும் இல்லையாயினும், மணிமொழியினு டைய பலவீனம் கடுமையடையாவிடினும் அம்மணிமொழியை வலிவு படுத்தக்கூடிய வேறு ஆதாரங்கள் இருந்திடினும் அப் படிப்பட்ட மணிமொழியை ஆதாரமாகக் கொள்வது அவசியமானது: இன்றியமையாதது. இப்படி இப்னு ஹஜருல் அஸ்கலானி என்பவர்களும் தஹபீ அவர்களும் இமாம் நவவீ அவர்களும் கூறியிருக்கின்றனர்.

இவ்வடிப்படையில் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவித்த மணிமொழிக்கு மாறாக மெய்யாய மணி

மொழி எதுவும் உறுதிப்படவில்லை. இம்மணிமொழி அறிவிப்புத் தொடரில் ஒருவர் மட்டுமே பலவீனமாக இருப்பதினால் இம்மணிமொழியினுடைய பலவீனம் கடுமையடையவில்லை. இம்மணிமொழிக்கு வலுவூட்டக் கூடிய ஆதாரங்கள் பல பிரகாசமாக இருக்கின்றன.

எனவே அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறிய மணிமொழி உண்மையாகவும், உறுதியாகவும் ஆகி விடுகின்றது. இம்மணிமொழியின் அடிப்படையில் தராவீஹ் தொழுகை இருபது ரக்அத்கள் என்பது சந்தேகத்திற்கிடமின்றி நிருபணமாகி விடுகின்றது.

இங்கொரு கேள்வி எழுகிறது, அன்னை ஆயிஷாநாயகி அவர்கள் அண்ணல் நபியவர்கள் எட்டு ரக்அத்களே தொழுதிருக்கிறார்கள் !என்ற மணிமொழியை அறிவித்திருக்கிறார்களே! இது குறித்து நீங்கள் என்ன கூறுகின்றீர்கள்?

அன்னை ஆயிஷா நாயகி அவர்கள் அறிவித்த மணிமொழி ரமலான் தொழுகை குறித்தோ, தராவீஹ் தொழுகை குறித்தோ அல்ல. அவர்கள் அறிவித்த மணிமொழியை இதோ கூறுகிறோம்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ரமலான் இரவுகளிலும் ரமலான் அல்லாத இரவுகளிலும் எட்டு ரக்அத்களைப் பார்க்கிலும் அதிகமாக்கியதில்லை. அவைகளை நான்கு நான்கு ரக்அத்களாகவும், அழகாகவும் நேர்த்தியாகவும் தொழுவார்கள். அப்பால் வித்ரு மூன்று ரக்அத்களும் தொழுது வந்தார்கள்.

நபியவர்கள் ரமலான் இரவுக்கு மட்டுமல்லாமல் ஒவ்வொரு இரவிலும் எட்டு ரக்அத்களும் அப்பால் வித்ரும் தொழுது வந்ததினால் இம்மணிமொழி தஹஜ்ஜுதினுடைய எட்டு ரக்அத்களையே குறிப்பதாக அமைந்திருக்கிறது. ஏனெனில் நபியவர்கள் தஹஜ்ஜுதினுடைய தொழுகை எட்டு ரக்அத்களை தவறாது தொழுது வந்தார்கள். இப்படி



தஹஜ்ஜுது தொழுது வரும்படி இறைவனே நபியவர்களுக்கு கட்டளையிட்டிருக்கிறான்.

எனவே ஆயிஷா நாயகி (ரலி) அவர்கள் அறிவித்த மணிமொழி தராவீஹ் தொழுகையை குறிப்பிடுவதாக இல்லை, தராவீஹ் தொழுகை எட்டு ரக்அத்கள் என்று எந்த மணிமொழி நூலிலும் அறிவிக்கப்படவில்லை. எனவே இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவித்தமணிமொழிப்படி, ''தராவீஹ் தொழுகை இருபது ரக்அத்கள் ஆகும்.'' இம்மணிமொழிக்கு எதிரான எந்த மணிமொழியும் இல்லை. இம்மணிமொழியை ஆதரித்து எண்ணிறந்த மணிமொழிகள் வந்திருக்கின்றன,

''அமீருல் முஃமீனின் உமர் (ரலி) அவர்களுடைய காலத்தில் ஸஹாபாப் பெருமக்கள் ரமலான் இரவுகளில் தராவீஹ்தொழுகை இருபது ரக்அத்கள் தொழுதுவந்தார்கள்.

இம்மணிமொழியை ஸாயிப் இப்னு யஸீத் என்ற ஸஹாபி அறிவித்துள்ளார்கள் என ஹதீஸ்கலை வல்லுநர்களில் ஒருவரான பைஹகீ இமாம் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இம்மணிமொழியை அறிவித்த அறிவிப்பாளர்கள் அனைவரும் உண்மையாளர்கள். குறை கூறப் பெறாதவர்கள். இப்படி இமாம் நவவீ அவர்கள் மஜ்மூஃ எனும் தமது நூல் வால்யூம் 4, பக்கம் 32-ல் கூறியிருக்கிறார்கள். இப்னு ஹஜருல் அஸ்கலானி அவர்கள் தல்கீஸுல் ஹபீர் என்ற நூல் 265-ம் பக்கத்திலும் கூறியிருக்கிறார்கள்.

ஸாயிப் இப்னு யஸீத் (ரலி) அவர்கள் நபித்தோழர்களில் ஒருவர். ஹஜ்ஜத்துல் விதாவின் போது நபியவர்களுடன் புனித ஹஜ்ஜை நிறைவு செய்திருக்கிறார்கள். இவர்கள் ஹிஜ்ரீ 88-ல் வபாத்தடைந்திருக்கிறார்கள்.

''அமீருல் முஃமினீன் உமர் (ரலி) அவர்கள் காலத்தில் ஸஹாபாப் பெருமக்கள்! தராவீஹ் தொழுகை இருபது ரக்அத்களையும் வித்ரு தொழுகை மூன்று ரக்அத்களையும் தொழுது வந்திருக்கிறார்கள்.

இம்மணிமொழியை யஸீத் இப்னு ரூமான் அவர்கள் அறிவித்திருப்பதாக இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் முஅத்தா என்ற தம்முடைய நூல் 138-ம் பக்கத்தில் பதிவு செய்திருக்கிறார்கள்.

யஸீத் இப்னு ரூமான், ஸாயிப் இப்னு யஸீத் இருவரும் ஒரு காலத்தில் வாழ்ந்திருக்கிறார்கள். அமீருல் முஃமினீன் உமர் (ரலி) அவர்களும், ஸாயிப் இப்னு யஸீத் (ரலி) அவர்களும், ஒரு காலத்தில் வாழ்ந்திருக்கிறார்கள். இவ்விருவருடைய காலத்திலும் தராவீஹ் தொழுகை இருபது ரக்அத்கள் என்று அறியப்பட்டு நடைமுறையிலும் இருந்து வந்திருக்கிறது.

எனவே ஸாயிப் இப்னு யஸீத் அவர்கள் 'காலத்தில் வாழ்ந்த யஸீத் இப்னு ரூமான் அவர்கள், அமீருல் முஃமினீன் உமர் (ரலி) அவர்களுடைய காலத்தில் தராவீஹ் தொழுகை இருபது ரக்அத்களாக இருந்து வந்தது என்று அறிவித்திருப்பது முற்றிலும் உண்மையானது. சந்தேகத்திற்கிடமற்றது.

ஒரு காலத்தினுடைய நிகழ்ச்சியை அறிவிப்பதற்கு அந்நிகழ்ச்சியுடைய காலத்தில் அறிவிக்கக் கூடியவர் இருக்க வேண்டுமென்பதில்லை. ஆனால் ஒருவரைத் தொட்டும் அறிவிக்கவேண்டுமாயின் அறிவிக்கக் கூடியவர் அவருடைய காலத்தில் இருப்பதோடு அவரை சந்தித்திருக்கவும் வேண்டும். இது ஒரு நியதி. இந்நியதியின்படி யஸீத் இப்னு ரூமான் அவர்கள் உமர் (ரலி) அவர்களுடைய காலத்தில் நடந்த நிகழ்ச்சியைத்தான் அறிவிக்கிறார்கள். அவர்களைத் தொட்டும் அறிவிக்கவில்லை. எனவே அவர்கள் உமர் (ரலி) அவர்களுடைய காலத்தில் இருக்க வேண்டுமென்பதில்லை.

யஸீத் இப்னு ரூமான் என்பவர் நம்பிக்கையானவர், நேர்மையானவர், குறை கூறப்பெறாதவர் என்று ஹதீஸ் கலை வல்லுநர்களான இமாம் நஸயீ, இமாம் இப்னுமுயீல் போன்றவர்கள் கூறியிருக்கிறார்கள். ரிஜாலுல் முஅத்தா என்ற நூல் 42-ம் பக்கத்தில் இது இடம் பெற்றிருக்கிறது.



இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் யஸீத் இப்னு ரூமான் அவர்களுடைய மாணவர். இவ்விருவரும் சேர்ந்து ஒரு மணிமொழியை அறிவித்து விடுவார்களாயின் அம்மணிமொழியை மறுப்பதற்கு எந்த முகாந்திரமும் இல்லை. ஏனெனில் அவ்விருவரும் நம்பத்தக்கவர்கள் என்று ஹதீஸ் கலை வல்லுநர்கள் அனைவரும் ஒரே குரலில் கூறியிருக்கிறார்கள்.

இங்கு இன்னொரு மணிமொழியையும் நினைவு கூருவது பொருத்தமாகும். அஃது உபை இப்னு கஃபு (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். அமீருல் முஃமினீன் உமர் (ரலி) அவர்கள் என்னை நோக்கி, ''நீர் ரமலான் இரவுகளில் மக்களுக்கு தொழ வைக்க வேண்டுமென நான் விரும்புகிறேன், ஏனெனில் மனிதர்கள் அதிகமான இறைவசனங்களை மனப்பாடம் செய்யாதவர்களாகவும் நோன்பு நோற்பவர்களாகவும் இருக்கிறார்கள், ஆகையால் அவர்களுக்கு நீர் தொழ வைப்பீராக!' என்று கட்டளையிட்டார்கள், அதற்கு நான், ''அப்படி தொழுவது நபியவர்களுடைய காலத்தில் இல்லையே!'' என்றுரைத்தேன். அதற்குஅமீருல் முஃமினீன் அவர்கள், ''அது எனக்கும் தெரியும், ஆயினும் அப்படித் தொழுவது அழகிய நன்மையாகும்'' என்று கூறிவிட்டு தாமே அவர்களுக்கு இருபது ரக்அத்களை தொழ வைத்தார்கள்.

இம்மணிமொழியினை இப்னு மனீஃ என்ற ஹதீஸ் கலை வல்லுநர் அறிவித்திருக்கிறார்கள்.

(கன்ஜுல் உம்மால் வால்யூம் 8, பக்கம் 409)

ஸாயிப் இப்னு யஸீத் (ரலி) அவர்கள் கூறிய மணிமொழி யஸீத் இப்னு ரூமான் (ரலி) அவர்கள் கூறிய மணிமொழி ஆகிய இம்மணிமொழிகள், ஒன்றுக்கொன்று வலிவையும் உறுதியையும் ஊட்டுவதில் அனைத்து மணிமொழிகளுமே உண்மையைப் பெற்று விடுகின்றன. மேலே கண்ட மணிமொழிகள் அமீருல் முஃமினீன் உமர் (ரலி) அவர்களை தொட்டுமே அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அம் மணிமொழிகளோடு இமாம் அலீ (ரலி) அவர்கள் கூறிய மணிமொழியை

யும் சேர்த்து சீர்தூக்கிப்பார்ப்பது ஏற்புடையதாகும். அஃது ரமலானுடைய இரவுகளில் நாங்கள் இருபது ரக்அத்கள் தொழுபவர்களாக இருந்தோம். அமீருல் முஃமினீன் உமர் (ரலி) அவர்கள் ரமலான் இரவுகளில் நம் பள்ளிகளை ஒளி மயமாக்கி வைத்தார்கள்.

(உம்தத்துல் காரி பாகம் 7, பக்கம் 178. பத்ஹுல் பாரி)

உஸ்மான் (ரலி) அவர்கள் காலத்திலும் ரமலான் இரவுகளில் இருபது ரக்அத்கள் தொழுது வந்தார்கள். அவர்கள் வெகு நேரம் நின்று தொழுததினால் நிற்க முடியாத நிலை ஏற்பட்டு ஊன்றுகோல்கள் மீது சாய்ந்துகொண்டார்கள்.

அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் (ரலி) அவர்கள், சுவைத் இப்னு ஹப்லா (ரலி) ஆகிய இருவரும் ரமலானுடைய இரவுகளில் தராவீஹ் தொழுகை இருபது ரக்அத்கள் தொழுது விட்டு வித்ரு மூன்று ரக்அத்களும் தொழுதுவந்தார்கள் என்று இப்னு அபீஷைபா அறிவித்திருக்கிறார்கள். இது இர்ஷாதுஸ்ஸாரி என்ற நூல் மூன்றாம் பாகம் 428-ம் பக்கத்தில் இடம் பெற்றிருக்கிறது.

இப்படி அமீருல் முஃமினீன் உமர் (ரலி) அவர்களுடைய நடைமுறையினை உஸ்மான் (ரலி), அலீ (ரலி), அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊது (ரலி) உள்ளிட்ட ஸஹாபாப் பெருமக்கள் அனைவரும் முழுக்க முழுக்க பின்பற்றி வந்தனர், அவர்களுக்கு மாறாக ஸஹாபாப் பெருமக்களில் எவரும் எட்டு ரக்அத்கள் தராவீஹ் தொழுததாக எந்த அறிவிப்பும் எந்த நூலிலும் இல்லை.

அப்படியே முஹம்மது இப்னு ஸீரீன், தாவூஸ், யஸீத் இப்னு ரூமான், அதாஃ போன்ற தாபியீன்கள் யாவரும் தராவீஹ் இருபது ரக்அத்களே தொழுது வந்திருக்கின்றனர், அவர்களனைவரும் அமீருல் முஃமினீன் உமர் (ரலி) அவர்களைத் தொட்டும் அறிவித்துமிருக்கின்றனர்; தாபியீன்களில் எவரும் தராவீஹ் எட்டு ரக்அத்கள் தொழுததாக எந்த அறிவிப்பிலும் இல்லை.



இமாம் அபூஹனீபா (ரஹ்) இமாம் மாலிக் (ரஹ்) இமாம் ஷாபியீ (ரஹ்) இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் (ரஹ்) சுப்யான் இப்னு உயைனா (ரஹ்) போன்ற தபஉத் தாபியீன்கள் அனைவருமே தராவீஹ் தொழுகை இருபது ரக்அத்கள் என்ற உமர் (ரலி) அவர்களுடைய கூற்றை உறுதிப்படுத்தி அதனையே செயல்படுத்தியும் வந்திருக்கிறார்கள். அவர்களில் எவரைத் தொட்டும் எட்டு ரக் அத்கள் என்று எந்த அறிவிப்பும் இல்லை.

அமீருல் முஃமினீன் உமர் (ரலி) அவர்களுடைய செயலைக் குறித்து இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்கள் அடியிற் கண்டவாறு கூறுகிறார்கள். அஃது,

உமர் (ரலி) அவர்கள் ரமலான் இரவுகளில் தராவீஹ் இருபது ரக்அத்கள் தொழுதிருக்கிறார்கள் என்பது அவர்களுடைய மனோ இச்சையிலிருந்தோ சுய அறிவிலிருந்தோ பிறந்ததல்ல. அண்ணல் நபியவர்களுடன் மிக நெருங்கிப் பழகி வந்ததன் காரணமாக அவர்களுக்கு ஏற்பட்ட உறுதி மிக்க உள்ளுணர்வை ஆதாரமாகக் கொண்டே அமைந்திருந்தது, இதனாற்றான் அவர்களுடைய நடைமுறைக்கு மாறாக எந்த ஒரு ஸஹாபியும் எட்டு ரக்அத்கள் தொழுததாக அறிய முடியவில்லை. அதுமட்டுமல்ல, அண்ணல் நபியவர்கள் ரமலான் இரவுகளில் மூன்று இரவுகள் ஜமாஅத்தாகத் தொழுதார்கள். அந்த தொழுகையில் உமர் (ரலி) அவர்களும் கலந்து கொண்டார்கள். அப்படி அவர்கள் கலந்து கொண்டதின் பயனாகத்தான் தராவீஹ் தொழுகை இருபது ரக்அத்கள் என்று அவர்கள் கூறினார்கள்.

இந்த அடிப்படைக் காரணமாகவே மக்காவின் மக்கள் அனைவரும் மஸ்ஜிதுல் ஹராமில் இருபது ரக்அத்கள் தொழுது வந்தார்கள் என இமாம் ஷாபியீ (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள். இன்னும் எண்ணிறந்த மகாமேதைகளும் இதே கருத்தைக் கொண்டிருக்கிறார்கள்.

புகாரி ஷரீப் என்ற மணிமொழி நூலுக்கு விரிவுரை எழுதிய இப்னு ஹஜருல் அஸ்கலானி, மஹ்மூத் இப்னு அஹ்மது அல்ஜனி, ஷிஹாபுத்தீன் அஹ்மது அல்கஸ்தலானி போன்ற விரிவுரை வல்லார்கள் அனைவருமே இது குறித்து அழகிய ஆய்வு நடத்தி, ''தராவீஹ் தொழுகை இருபது ரக்அத்கள்'' என்ற முடிவுக்கு வந்து, இது ஏகோபித்த கருத்தாக இருக்கிறது'' என்றும் கூறியிருக்கிறார்கள்.

நபிகள்திலகம் முஹம்மது(ஸல்) அவர்கள் தம்மரும் செயல்கள் சொற்கள் யாவற்றையும் ஸஹாபாக்கள் என்கிற பண்படுத்தப்பட்ட பூமியில் பயிரிட்டு பக்குவமாக வளர்த்திருக்கிறார்கள். எனவே அவர்களுடைய சொற்களையும், செயல்களையும் இறையருள் பெற்ற ஸஹபாப் பெருமக்கள் தான் ஒன்றுகூட விட்டு விடாமல் காப்பாற்றித் தந்தவர்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்: ''எனதரும் நேயர்களே! எனக்குப் பிறகு நீங்கள் அபூபக்கர் (ரலி), உமர் (ரலி) ஆகிய இருவரையும் பின்பற்றிச் செல்லுங்கள்!''

இம்மணிமொழியை இமாம் ஷாபியீ (ரஹ்) அவர்கள், 'உம்மூ' என்ற தம்முடைய நூலில் பதிவு செய்துள்ளார்கள். இதே மணிமொழியை ஹதீஸ் கலை வல்லுநர்களான இமாம் திர்மிதி, இமாம் அஹ்மது, இமாம் இப்னுமாஜா, இமாம் இப்னு ஹிப்பான் (ரஹ-அலைஹிம்) ஆகியோரும் அறிவித்திருக்கின்றனர்.

இமாம் ஷாபியீ (ரஹ்) அவர்கள் அறிவித்த மணிமொழியின் அறிவிப்பாளர்களான ஸுஃப்யான் இப்னு உயைனா, அப்துல் மலிக் இப்னு அஸீஸ், இப்னு ஹுதைஃபா ஆகிய அனைவரும் உண்மையானவர்கள், மெய்யானவர்கள். நேர்மையானவர்கள். இப்படிப்பட்ட உறுதியான அறிவிப்பாளர்களின் தொடருடன் கூறப்பட்ட மணிமொழி மெய்யானது; எள்ளளவும் சந்தேகமற்றது,



இம்மணிமொழியின்படி அமீருல் முஃமினீன் அபூபக்கர் (ரலி), அமீருல் முஃமினீன் உமர் (ரலி) ஆகிய இருவரையும் பின்பற்றுவது முஸ்லிம்களின் மீது இன்றியமையாக் கடமையாகும். இம்மணிமொழியை உண்மையென்றறிந்து விட்ட பிறகு அதற்கு மாறாக நடக்க எந்த முஸ்லிமுக்கும் நியாயம் கிடையாது.

இருபது ரக்அத்கள் தராவீஹ் தொழுவது உமர் (ரலி) விளக்கித் தந்த சட்டமாகும். இந்தச் சட்டம் உண்மையானதென்றறிந்த அனைத்து ஸஹாபாக்களும் அதனை அப்படியே அடியொற்றி நடந்து வந்தனர்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்; ''என்னுடைய சுன்னத்தையும், எனக்குப்பிறகு நெறிமிக்க கலீபாக்களுடைய சுன்னத்தையும் நீங்கள் உறுதியாக பற்றிக் கொண்டு விடுங்கள்.''

இம்மணிமொழியை இமாம் அஹ்மத், இமாம் அபூதாவூது, இமாம் இப்னுமாஜா, இமாம் திர்மிதி, இமாம் ஹாகிம் (ரஹ்) ஆகியவர்கள் அறிவித்திருக்கின்றனர். எனவே ஸஹாபாப் பெருமக்களைப் பின்பற்றி நடப்பது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கட்டாயக் கடமையாகும். ஏனெனில் அவர்களின் வழியாகத்தான் வள்ளல் நபியவர்களுடைய சொற்களையும், செயல்களையும் அறிந்து கொள்கிறோம்.

இறைவன் கூறுகிறான்: இறை நம்பிக்கையின் பக்கம் ஆரம்பக் கட்டத்திலேயே முந்திக் கொண்டு வந்த முஹாஜிரீன்களையும் அன்சாரிகளையும், இன்னும் நற்காரியங்களில் அவர்களைப் பின்பற்றி வந்தார்களே அவர்களையும் அல்லாஹ் பொருந்திக் கொண்டு விட்டான். அவர்களும் அவனை பொருந்திக் கொண்டு விட்டனர். இன்னும் அவர்களுக்கவன் இடையிடையே நீரருவிகள் ஓடிக்கொண்டிருக்கிற சுவர்க்க பூங்காக்களை தயார்படுத்தியும் வைத்திருக்கிறான். அவர்கள் அவற்றில் காலாகாலம் நிரந்தரமாகத் தங்கி விடுவார்கள். இது மாபெரும் வெற்றியாகும்.

# தக்பீர் தஹ்ரீமுக்காக உயர்த்திய கரங்களை எங்கே கட்டுவது?

''ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்கள் தன் வலக்கரத்தைக் கொண்டு இடக்கரத்தினுடைய மணிக்கட்டைப் பற்றிக் கொண்டு அவற்றை தொப்புளுக்கு மேலே கட்டியிருந்ததை நான் பார்த்தேன்'' என ஜரீர் (ரலி) அவர்கள் சாற்றுகின்றார்கள். இம்மணிமொழி ஸஹாபாக்களின் நடைமுறையைக் காட்டுகிறது. ஆயினும் நபியவர்களைத் தொட்டும் அறிவிக்கப்பட்டதில்லை.

'தொப்புளுக்கு மேலே' என்ற சொற்றொடர் ஸயீத் இப்னு ஜுபைர் (ரலி) அவர்களைத் தொட்டும் அறிவிக்கப்பட்டுள்ளது என்று அபூதாவூது அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

''நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்முடைய வலக்கரத்தை இடக்கரத்தின் மீது கட்டி அப்பால் அவற்றை தம் நெஞ்சின் மீது வைத்தார்கள்'' என்று தாவூஸ் அவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

தாவூஸ் அவர்கள் நபியவர்களின் வபாத்திற்குப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு பிறந்தார்கள். ஆகையினால் அவர்கள் நபியவர்களைத் தொட்டும் அறிவிக்க எந்த வாய்ப்பும் இல்லை. ஆயினும் தாவூஸ் அவர்கள் மிக்க நல்லவர், மிக்க நேர்மையாளர்.

''நபியவர்கள் தம்முடைய வலக்கரத்தை இடது கரத்தினுடைய மணிக்கட்டின் மீது கட்டி அவற்றை அலஸ்ஸத்ரி— நெஞ்சின் மீது வைத்தார்கள்'' என்று இப்னு ஹுஸைமா அவர்களும் இன்தஸ்ஸத்ரி— ''நெஞ்சினிடத்தில் வைத்தார்கள்'' என்று பஸார் அவர்களும் அறிவித்துள்ளார்கள்.

இவ்விரு அறிவிப்புகளின்படி அலஸ்ஸத்ரி, இன்தஸ்ஸத்ரி என்பது ஸியாதத்— அதிகப்படியானதாகும், மெய்யாய



மணிமொழி நூற்களான புகாரீ, முஸ்லிம் போன்ற நூற்களில் 'அலஸ்ஸத்ரி' 'இன்தஸ்ஸத்ரி' என்பது இடம்பெறவில்லை. இப்னு ஹுஸைமா அவர்கள் கொண்டு வந்த மணிமொழியினுடைய அறிவிப்பாளர்களும் இமாம் முஸ்லிம் அவர்கள் கொண்டு வந்த மணிமொழியினுடைய அறிவிப்பாளர்களும் ஒன்றாகவே இருக்கின்றனர். ஆனால் முஸ்லிம் அவர்களுடைய அறிவிப்பில், 'அலஸ்ஸத்ரி' என்பது இல்லை. எனவே இது முஸ்லிமை விட ஸியாதத்—அதிகமானதாகும்.

இப்படி வருகிற ஸியாதத்தை ஒத்துக் கொள்ள வேண்டுமா? அல்லது அதனைத் தள்ளி விட வேண்டுமா? என்பதில் ஹதீஸ் கலை வல்லுநர்களிடையே கருத்து வேறுபாடுகள் நெளிகின்றன. அநேகர் அதனை ஒத்துக் கொண்டு அதன்படி அமல் செய்வது ஏற்புடையது. அதனை ஆதாரமாகக் கொண்டு சட்டத்தை நிறுவுவது நியாயமானது என்று கூறுகின்றனர். இதன்படி இப்னு ஹுஸைமா, பஸார் ஆகியோர் அறிவித்த மணிமொழிகள் மெய்யானவை. உண்மையானவையாகும். இம்மணிமொழிகளில் அலா என்றும்' இன்த என்றும் இருசொற்கள் இடம் பெற்றிருக்கின்றன. இச்சொற்களின் இயற்கையான பொருள் என்ன? இங்கு கொள்ள வேண்டிய பொருள் என்ன? என்பனவற்றை அறியாமல் இம்மணிமொழியினுடைய முழுமையான பொருளை விளங்கிக்கொள்ள முடியாது.

எனவே மேற்கூறிய நபிமணிமொழியிலுள்ள 'அலா', 'இன்த' என்ற சொற்களுக்கு என்னென்ன பொருள் என்பதை இங்கு ஆராய்வோம். 'அலா' என்ற சொல் மேலே, இல், சமீபம், அருகில் என்ற பொருட்களில் வழங்கப்பட்டு வருகிறது. அப்படியே 'இன்த' என்ற சொல் இடம், காலம், சமூகம், சமீபம், அருகில் என்ற பொருட்களில் வழங்கப்பட்டு வருகிறது. இது மொழி ரீதியாகவும் இலக்கண ரீதியாகவும் எழுதப்பட்டது. நீங்களும் கொஞ்சம் ஆராய்ந்து பாருங்கள்!

''அலா'' ''இன்த'' என்ற இரண்டு சொற்களும் சமீபம் அருகில் என்ற பொருட்களில் ஒன்றுபட்டு விடுகின்றன, எனவே அவ்விரண்டுக்கும் அருகில், சமீபம் என்ற பொரு ளைக் கொடுப்பதே இயற்கையானதும் ஏற்றமிக்கதுமாகும். சொற்கள் வேறு வேறாக இருந்தாலும் பொருளில் ஒன்றாகி விடும்போது அந்தப் பொருளையே கொள்வது அனைத்து இலக்கண வல்லுநர்களாலும் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகும். இதன்படி மாநபியின் மணிமொழிக்கு அடியிற் கண்ட பொருள் அமையும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தக்பீர் தஹ்ரீமுக்காக உயர்த்திய தம்மிரு கரங்களில் இடதுகர மணிக்கட்டின் மீது வலது கரத்தைக் கொண்டு பற்றி அவற்றை நெஞ்சுக்கு சமீபமாக வைத்தார்கள்.

இங்கு இனியொரு மணிமொழியைக் கவனிக்க வேண் டும். அஃது ஜரீர் அவர்கள் அறிவிக்கிறார்கள்; ''இமாம் அலீ (ரலி) அவர்கள் தன்னிடதுகர மணிக்கட்டின் மீது வலது கரத்தைக் கட்டிக் கொண்டு அவற்றைத் தொப்புளுக்கு மேலே வைத்திருப்பதை நான் பார்த்தேன்''. இம்மணிமொழி இமாம் அலீ (ரலி) அவர்களைத் தொட்டும் அறிவிக்கப் பட்டிருப்பினும் மெய்யாய ஆறு நூற்களில் ஒன்றான அபூ தாவூதில் இடம் பெற்றிருக்கிறது. அபூதாவூது அவர்கள், இம் மணிமொழி ஸயீது இப்னு ஜுபைர் அவர்களைத் தொட்டும் அறிவிக்கப் பட்டிருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள், (பக்கம் 201)

இது ஸஹாபாப் பெருமக்களுடைய தூய நடைமுறையை எடுத்துக் காட்டுகிறது. எனவே மாநபியின் மணிமொழியினை யும் ஸஹாபாப் பெருமக்களின் நடைமுறையினையும் ஒருங்கிணைத்துப் பொருள் கொண்டோமாயின் அடியிற் கண்ட பொருள் ஏற்படும்.

அஃது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது வலது கரத்தை இடது கரத்தின் மீது கட்டிக் கொண்டு அவற்றைத் தொப்புகளுக்கு மேலே நெஞ்சுக்கு சமீபமாக வைத்தார்கள், இதனை இன்னும் தெளிவாகச் சொல்லவேண்டுமாயின் நெஞ்சுக்கு கீழே தொப்புளுக்கு மேலே அவற்றை வைக்க வேண்டும் என்பது வரும்.



இந்த மணிமொழி மெய்யானது என்பதை ஏற்றுக் கொண்டு அதில் மறைந்து கிடக்கின்ற மணிமொழிச் சட் டத்தை முதலில் விளக்கியது ஷாபியீ மத்ஹபுதான். ஷாபியீ மத்ஹபினுடைய சட்டப்படி இடது கரத்தின் மணிக்கட்டின் மீது வலது கரத்தை கட்டிக் கொண்டு நெஞ்சுக்கு கீழே தொப்புளுக்கு மேலே வைப்பது சுன்னத்தாகும். இந்தச் சட் டம் மாநபியின் மணிமொழிகளுக்கு எந்த வகையிலும் மாறு பட்டதாக இல்லை. அம்மணிமொழியில் மறைந்து கிடக் கின்ற சட்டத்தை இத்தரணி மாந்தர்களுக்கு எடுத்துக் காட்டி யிருக்கிறது. இதுதான் உண்மை. இவ்வுண்மையை ஏற்று செயல்படுவதில் இறையருள் ததும்பி வழிகிறது.

இப்படியே ஹனபி மத்ஹபினுடைய சட்டமும் நபியவர் களுடைய மணிமொழிகளிலிருந்தும், ஸஹாபாப் பெரு மக்களுடைய நடைமுறையிலிருந்துமே எடுக்கப்பட்டிருக் கிறது. அஃது தக்பீர் தஹ்ரீமுக்காக உயர்த்திய கரங்களில் இடதுகர மணிக்கட்டின்மீது வலது கரத்தைக்கொண்டு பற்றி அப்பால் அதை தொப்புளுக்கு கீழே வைக்கவேண்டும்.

அமீருல் முஃமினீன் அலீ (ரலி) அவர்கள் அறிவிக்கின் றார்கள்: ''தொழுகையின் போது ஒரு மணிக்கட்டை பிறி தொரு மணிக்கட்டின் மீது கட்டி அப்பால் அதனை தொப் புளுக்குக் கீழே வைப்பது சுன்னத்தாகும்.'' இம்மணிமொழி அபூதாவூது 202-ம் பக்கத்தில் இடம் பெற்றிருக்கிறது.

அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ''தொழுகையின் போது மணிக்கட்டில் ஒன்றை மற்றொன் றைக் கொண்டு பற்றி அவற்றைத் தொப்புளுக்குக் கீழே

வைக்க வேண்டும்'' இம்மணிமொழியும் அபூதாவூதில் இடம் பெற்றிருக்கிறது.

இவ்விரு மணிமொழிகளும் ஸஹாபாப் பெருமக்களுடைய நடைமுறையை எடுத்துக்காட்டுவதாக அமைந்திருக்கின்றன, இந்நடைமுறையை மையமாகக் கொண்டுதான் இரு கரங்களையும் தொப்புளுக்கு கீழே வைப்பது சுன்னத் என்று ஹனபி மத்ஹபினுடைய சட்டம் எடுக்கப்பட்டுள்ளது.

## ஒலு இல்லாமல் திருக்குர்ஆனைத் தொடக் கூடாது

வான்மறை அல்குர்ஆன் அல்லாஹ்விடமிருந்து அண்ணல் நபியவர்களுக்கு அருளப்பெற்றது. அருளியல் பண்புகளின் பொய்கையாகவும், அகமிய அறிவு ஊற்றாகவும் இலங்கிக் கொண்டிருக்கிறது. இத்துணை மகத்துவம் பொருந்திய திருகுர்ஆனை ஒலுச் செய்து சுத்தம் செய்துகொள்ளாமல் எவரும் தொடலாகாது. ஏனெனில் பரிசுத்த குர்ஆனுக்கு புனிதமும் கண்ணியமும் வழங்குவதற்காகத்தான்.

அல்லாஹ் கூறுகிறான்; அல்குர்ஆனை பரிசுத்தவான்களே தவிர வேறு எவரும் தொடமாட்டார்கள். (56:79)

பரிசுத்தவான்கள் என்போர் வானவர்களாகும் என விரிவுரையாளர்களில் சிலர் விளக்கம் தந்திருக்கின்றனர். ஏனெனில் அவர்கள் தான் பிழைகள் யாவற்றை விட்டும் அகபுற அசுத்தங்களை விட்டும் சுத்தமானவர்கள் என்பதினால். முத்தஹ்ஹரூன் என்பதற்கு வானவர்கள் என்று பொருள் கொள்வதினால் ஒலு இல்லாமல் திருகுர்ஆனைத் தொடலாம் என்று ஒருபோதும் ஆகாது. வானவர்கள் என்று பொருள் கொண்டாலும் மனிதர்கள் என்று பொருள் கொண்டாலும் திருகுர்ஆனை ஒலுவுடனேயே தொடவேண்டும்.

பெரும்பாலான விரிவுரை வல்லுநர்களும், ஹதீஸ் கலை வல்லுநர்களும் 'முத்தஹ்ஹரூன்' என்பதற்கு அசுத்தங்களை விட்டும், சிறுதொடக்கு, பெருந்தொடக்குகளை விட்டும்



சுத்தமான மனிதர்கள் என்றே பொருள் கொண்டிருக்கின்றனர். ஏனெனில் திருகுர்ஆன் மனித குலத்தை நேர்வழிப்படுத்துவதற்காகவே இறக்கி வைக்கப்பட்டிருக்கிறது. எனவே அது மனித சுத்தத்தையும் தூய்மையையும் குறியாகக் கொண்டிருக்கிறது. ஆகையினால் ஒலுச் செய்து சுத்தம் செய்து கொண்டார்களே அப்படிப்பட்டவர்களையே 'முத்தஹ்ஹரூன்' என்பது குறிக்கும்.

எனவே ஒலுச் செய்து சுத்தமுடன் இருப்பவர்களே இந்த குர்ஆனைத் தொடவேண்டும், மற்றவர்கள் தொடக்கூடாது அப்படித் தொடுவது வான்மறை அல்குர்ஆனுக்கு வழங்கப் பெற்ற புனிதத்துவத்தையும் மகத்துவத்தையும் மாசுபடுத்துவதாகும்.

ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாமை ஏற்பதற்கு முன்பு தன் சகோதரியும் அவரது கணவரும் இஸ்லாமாகி விட்டார்கள் என்ற செய்தியைக் கேட்டு சினம் கொண்டு அவர்களுடைய இல்லத்திற்கு வருகிறார்கள். அங்கே அவர்கள் வான்மறை அல்குர்ஆனை ஓதிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இனிமையாக ஓதிக் கொண்டிருப்பதைக் கண்டு அந்த குர்ஆனை என்னிடம் கொடுங்கள். நானும் கொஞ்சம் ஓதிப்பார்க்கிறேன் என்று உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். உடனே அவர்களுடைய சகோதரி, ''நீர் அசுத்தமானவர் உம்மிடம் இதனைக் கொடுக்க மாட்டேன் அப்படிக் கொடுக்க வேண்டுமாயின் நீர் சுத்தம் செய்து விட்டு வாரும்'' என்று கூறினார்கள். அதற்கு உமர் (ரலி) அவர்கள் குளித்து சுத்தம் செய்துவிட்டு வந்து அந்த குர்ஆனைப் பெற்று ஓதி அப்பால் இஸ்லாமாகி விட்டார்கள்.

இம்மணிமொழி பைஹகீ பாகம் 1, பக்கம் 88-லும் தாரகுத்னீ பாகம் 1 பக்கம் 123-லும் இடம் பெற்றிருக்கிறது.

அப்துர் ரஹ்மான் இப்னு யஸீத் கூறுகிறார்கள்: ஒரு சமயம் நாங்கள் ஸல்மான் பார்ஸி அவர்களுடன் பயணம்

செய்துகொண்டிருந்தோம். அப்போது அவர்கள் வெளிக்குச் சென்றுவிட்டு திரும்பி வந்தார்கள். உடனே உங்களிடம் திருகுர்ஆனை ஓதக் கேட்பதற்கு நாங்கள் விரும்புகிறோம். எனவே ஒலுச் செய்துவிட்டு வாரும் என்று கூறினோம். அதற்கவர்கள், திருகுர்ஆனை ஓதுவதற்கு ஒலு தேவையில் லையே! அதனைத் தொடுவதற்குத்தான் ஒலு தேவை, ஏனெனில் ஒலுச் செய்து சுத்தம் செய்தவர்களேயன்றி மற்றவர்கள் திருகுர்ஆனைத் தொடமாட்டார்கள். ஆகை யினால் நான் ஓதுகிறேன். நீங்கள் கேளுங்கள் என்று கூறி னார்கள். (தாரகுத்னி பாகம் 1 பக்கம் 123)

திருகுர்ஆனை ஒலுச் செய்து சுத்தம் செய்யாமல் எவரும் தொடவேண்டாம் என்று ஏந்தல் நபியவர்கள் எமன் நாட்டு மக்களுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்கள். இம் மணிமொழி தாரகுத்னீ பாகம் 1 பக்கம் 123-லும், அபூதாவூது திர்மிதியிலும் இடம் பெற்றிருக்கிறது. இம்மணிமொழி அறிவிப்பாளர்கள் அனைவருமே மெய்யானவர்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அம்ரு இப்னுல் ஹஸ்மு (ரலி) அவர்களுக்கு எழுதிய அஞ்சலில் வான்மறை அல் குர்ஆன் பேரற்புதமானது; அதனை ஒலு இல்லாமல் தொட வேண்டாம் என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

(பைஹகீ பாகம் 1 பக்கம் 87)

இம்மணிமொழியின் அறிவிப்பாளர்கள் அனைவருமே மெய்யானவர்கள். உண்மையானவர்கள். ஆனால் சிலர் இம்மணிமொழியில் வந்த அப்துர் ரஹ்மான் இப்னு தாவூத் குறை கூறப்பெற்றவர் என்று கூறுகின்றனர். உண்மையில் இம்மணிமொழியில் அந்த அப்துர் ரஹ்மான் இப்னு தாவூது என்பவர் வெறும் அப்துர் ரஹ்மான் இப்னு தாவூது அல்ல. அப்துர் ரஹ்மான் இப்னு தாவூது அல்கௌலானி என்பவர் தான் இம்மணிமொழியில் இடம்பெற்றிருக்கிறார்கள். அப்துர் ரஹ்மான் இப்னு தாவூது அல்கௌலானி என்பவர்கள் உண்மையானவர்கள். நம்பகமானவர்கள்.



எனவே இம்மணிமொழி மெய்யானது, உண்மையானது என்று ஹாகிம் அவர்கள் தம்முடைய முஸ்தக்ரக்கிலும் இமாம் மாலிக் அவர்கள் தம்முடைய முஅத்தாவிலும் அபூதாவூது அவர்கள் தம்முடைய மராஸீலிலும் குறிப்பிட்டிருக்கிறார்கள். மேற்கூறிய மணிமொழிகள் யாவற்றிலிருந்து அடியிற் கண்ட பேருண்மையை நாம் விளங்கிக் கொள்கிறோம்.

நம்முடைய கரங்களில் மிளிர்ந்து கொண்டிருக்கின்ற வான்மறை அல்குர்ஆனை ஒலுவின்றித் தொடக் கூடாது. இது ஹதீஸ்கலை வல்லுநர்களாலும் நான்கு பெரும் இமாம் களாலும் உறுதி செய்யப்பட்ட ஒன்றாகும்.

## கூட்டு துஆ

அல்லாஹ்விடம் பிரார்த்தனை பண்ணுவது மிக முக்கிய மானது. மனிதனுக்கு பிணிகள், சங்கடங்கள், தேவைகள் ஏற்படுகின்றபோது அவர்கள் அல்லாஹ்விடம் பிரார்த்தனை பண்ணுகிறார்கள். பிரார்த்தனை பண்ணுவதின் காரண மாக தங்களுக்கு இருக்கின்ற இறை நம்பிக்கையை உறுதி செய்து கொள்கின்றனர். அது மட்டுமல்ல, அல்லாஹ் வுடன் அந்தரங்கமாக உரையாடிடும் அகமிய நிலையையும் பெறுகிறார்கள்.

எனவே பிரார்த்தனை பண்ணுவது என்பது இறைவ னோடு நெருங்குவதற்குரிய அரிய வாய்ப்பாகும். இறைவன் கூறுகிறான்.

என்னிடம் பிரார்த்தனை பண்ணுங்கள்! உங்களுக்கு நான் ஜவாப் சொல்கிறேன். (40;60)

இன்னும் கூறுகிறான்; நீங்கள் மிகக் கெஞ்சியும், இரகசியமாகவும் உங்கள் இரட்சகனிடம் பிரார்த்தனை பண்ணுங்கள். (7:55)

மேலும் கூறுகிறான்: நபியே! என்னடியார்கள் உம்மி டம் வந்து என்னைக் குறித்து கேட்டார்களாயின் திண்ண மாக நான் அவர்களுடைய அருகில் இருக்கிறேன். அவர் கள் என்னிடத்தில் பிரார்த்தனை பண்ணும்போது அப்

பிரார்த்தனையை நான் ஏற்றுக் கொள்கிறேன் என்று நீர் கூறுவீராக! (2:186)

இப்படி வான்மறையில் எண்ணிறந்த வசனங்கள் இருக்கின்றன. அப்படியே பிரார்த்தனை குறித்து எண்ணில் அடங்கா மணிமொழிகளும் இருக்கின்றன. நபியவர்கள் நவின்றுள்ளார்கள்;

உங்களிரட்சகனிடம் நீங்கள் கேளுங்கள்! நீங்கள் கேட்காவிடில் அவன் கோபமடைகிறான். பிரார்த்தனை பண்ணுவது இறைவணக்கமாகும். அல்லாஹ்வை நெருங்குவதற்குரிய அரிய வழி பிரார்த்தனை பண்ணுவதாகும். நீங்கள் ஒரு விஷயம் குறித்து இறைவனிடம் கையேந்தி விட்டால் அதனை வெறுமையாக்கி விட இறைவன் வெட்கப் படுகிறான். (திர்மிதி, இப்னுமாஜா, நஸயீ)

மனிதர்கள் தம்முடைய தேவைகள் குறித்து தனியாகவும் கூட்டாகவும் இறைவனிடம் பிரார்த்தனை பண்ணுகிறார்கள். ஆதி பிதா ஆதம் (ஆலை) அவர்களையும் அவர்களுடைய மனைவி ஹவ்வா (அலை) அவர்களையும் சுவர்க்கத்தில் எங்கும் சென்று எதனையும் புசிக்கலாம் என்று இறைவன் கூறி அப்பால் ஒரு மரத்தை சுட்டிக் காட்டி அதனருகே நீங்கள் இருவரும் நெருங்காதீர்கள் என கட்டளையிட்டிருந்தான். ஆனால் அவ்விருவரும் அம்மரத்திற்கருகே நெருங்கி அதன் கனிகளைப் புசித்து விட்டார்கள். அதன் காரணமாக அவர்களுக்கு இறைவன் அணிவித்திருந்த அகமிய ஆடைகள் அகன்று அவர்கள் மிகுந்த கவலையும் வேதனையும் அடைந்தார்கள். அப்போது அவ்விருவரையும் அழைத்து, உங்களிருவரையும் இம்மரத்தை விட்டு நான் விலக்கவில்லையா? திண்ணமாக உங்களிருவருக்கும் ஷைத்தான் பகிரங்கமான பகைவன் என்று நான் கூறவில்லையா? என இறைவன் கேட்டான். உடனே அவ்விருவரும். ''எங்களிரட்சகனே! எங்களுக்கே நாங்கள் தீங்கிழைத்து கொண்டு விட்டோம். எங்கள்பால் இரக்கம் காட்டி எங்களை நீ மன்னிக்காது போனால் திண்ணமாக நாங்கள் நஷ்டமடைந்தவர்களில் ஆகி விடுவோம்'' என்று கூறினார்கள். (7;22-23)



இவ்வசனங்களுக்கு எப்படிப் பொருள் கொடுத்தாலும் ஆதமும், ஹவ்வாவும் கூட்டாகச் சேர்ந்து துஆக் கேட்டார்கள் என்பதையே புலப்படுத்துகின்றன.

அப்படியே இப்ராஹீம் நபி (அலை) அவர்களும் இஸ்மாயில் நபி (அலை) அவர்களும் ஒளி பொருந்திய கஃபாவின் அடித்தளத்தை உயர்த்திக் கட்டிய போது, ''எங்களிரட்சகனே! எங்களிடமிருந்து நீ இதனை ஏற்றுக் கொள்வாயாக! திண்ணமாக நீ மிக்க அறிபவனும் மிக்க செவியேற்பவனுமாவாய். , எங்களிரட்சகனே! இன்னும் எங்களை உனக்கு அடிபணிந்த இருமுஸ்லிம்களாகவும் எங்களுடைய சந்ததிகளிலிருந்து உனக்கு அடிபணிகின்ற முஸ்லிம் சமுதாயத்தையும் ஆக்கிவைப்பாயாக!'' என்று அவ்விருவரும் பிரார்த்தனை பண்ணினார்கள். (2;127—128)

மூஸா (அலை) அவர்களையும், அவரது சகோதரர் ஹாரூன் (அலை) அவர்களையும் அழைத்து, நீங்கள் இருவரும் பிர்அவ்னிடம் செல்லுங்கள்! திண்ணமாக அவன் அட்டூழியம் பண்ணுகிறான். ஆகையினால் அவனிடம் நீங்கள் இருவரும் மிக்க மென்மையாகக் கூறுங்கள்! ஒருக்கால் அவன் ஞானம் பெற்றுவிடுவான்; அல்லது அச்சமடைந்து விடுவான் என்று இறைவன் கூறினான். உடனே அவ்விருவரும் எங்களிரட்சகனே! எங்கள் மீது அவன் அவசரப்பட்டு தண்டனை வழங்கி விடுவான் என்பதையும் அல்லது அவன் வரம்பு மீறி விடுவான் என்பதையும் அஞ்சுகிறோம் எனக் கூறினார்கள். (20;43-44)

மேலே கண்ட இறைவசனங்கள் ஆதம்—ஹவ்வா அவர்களும் இப்ராஹீம்—இஸ்மாயீல் அவர்களும், மூஸா—ஹாரூன் ஆகிய நபிமார்கள் கூட்டாகச் சேர்ந்து துஆச் செய்திருக்கிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. அப்படியே அருள் நபிமொழிகளில் கூட்டாகச் பிரார்த்தனை செய்திருப்பதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன.

ஒரு பயணத்தின் போது நபியவர்களும் அவர்களுடைய தோழர்களும் மதீனாவை நெருங்கிக் கொண்டிருந்தார்கள், அப்பொழுது அண்ணல் நபியவர்கள் அல்லாஹுு அக்பர் என்று தக்பீர் முழக்கினார்கள், இதைக் கேட்ட நபித்தோழர் களும் உரத்த குரலில் தக்பீர் சொன்னார்கள் உடனே நபி யவர்கள். நீங்கள் எவனிடம் துஆக் கேட்கின்றீர்களோ அவன் செவிடனல்ல. உங்களை விட்டும் மறைந்தவனுமல்ல, திண்ணமாக நீங்கள் எவனிடம் துஆக் கேட்கின்றீர்களோ அவன் உங்களருகில் இருக்கிறான் என்று கூறினார்கள்.

(அபூதாவூது, புகாரி, முஸ்லிம்)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அவர்களுடைய தோழர்களும் மதீனாவிலிருந்து புறப்பட்டு துல்ஹுலைபா வுக்கு வந்து, ழுஹரைத் தொழுத பிறகும், அஸரைத் தொழுத பிறகும் குரலை உயர்த்தி, லப்பைக் அல்லாஹும்ம லப்பைக் என்ற தல்பிய்யாவை முழங்கினார்கள். இப்படி ஹஜ் நெடுகிலும் தொழுகைக்குப் பின்னரும் இடையிலும் மிகுந்த பக்தியோடு தல்பிய்யா கூறினார்கள். தல்பிய்யா என்பது துஆவாகும். இப்படி தொழுகைக்குப் பின்னரும் மற்ற நேரங்களிலும் கூட்டாக நபியவர்களுடைய காலத்தி லேயே துஆச் செய்திருக்கிறார்கள் என்பது அபூதாவூது என்ற மணிமொழி நூலில் இடம் பெற்றிருக்கிறது.

ஒருவர் துஆ ஓதி மற்றவர் ஆமீன் கூறுவதும் நபியவர் களுடைய காலத்திலிருந்தே நடைமுறையில் இருந்து வந் திருக்கிறது. தொழுகையின்போது சூரத்துல் பாத்திஹாவை ஓதி, வலள்ளால்லீன் என்று இமாம் சொல்லி ஆமீன் கூறி விட்டால், மஃமூம்கள் அனைவரும் ஆமீன் என்று கூறுவார் கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் வலள்ளால்லீன் என்று சொன்னபோது ஆமீன் என்று மற்றவர்கள் கேட்கும் விதத்தில் சொல்வார்கள்.

(அபூதாவூது. இப்னுமாஜா)



இமாமாகின்றவர் 'கைரில்மக்லூபி அலைஹிம் வலல் லால்லீன்' என்று கூறிவிட்டாராயின் நீங்களும் ஆமீன் என்று கூறுங்கள். திண்ணமாக வானவர்களும் ஆமீன் என்று கூறுகிறார்கள். அவர்களுடைய ஆமீனுக்கு நீங்கள் கூறு கின்ற ஆமீன் நேர்பட்டு விடுமானால் உங்களுடைய முன் பாவங்கள் மன்னிக்கப்பட்டு விடுகின்றன.

சூரத்துல் பாத்திஹாவின் கடைசிப்பகுதி அப்பட்டமான துஆவாகும். அதனை இமாம் ஓதி முடித்த போது ஆமீன் என்று கூறுவதை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்குக் கற்றுத் தந்திருக்கிறார்கள். பக்தியும் அச்சமும் நிறையப் பெற்ற தொழுகையிலும் கூட மனிதர்களெல்லாம் ஆமீன் என்று இறைந்து கூறுவதை அண்ணல் நபியவர்கள் அங்கீ கரித்திருக்கிறார்கள்' என்றால் தொழுகை முடிந்த பிறகும், மற்ற நேரங்களிலும் துஆ ஓதி கூட்டாக ஆமீன் கூறுவது குறித்து கேட்கவும் வேண்டுமோ!

தொழுகை முடிந்த பிறகு துஆக் கேட்பது ஏற்றமானது. இறைவனிடம் அங்கீகாரம் பெறுவதற்கு மிகவும் உகந்தது. தனியாக தொழுதாலும், கூட்டாகத் தொழுதாலும் தொழுகை முடிந்தவுடன் வெடுக்கென்று எழுந்து வந்து வந்து விடக் கூடாது. சிறிது நேரம் அமைதியாக அமர்ந்து துஆ ஓத வேண்டும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பள்ளியில் அமர்ந்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஒருவர் அங்கு வந்து தொழுது விட்டு வெடுக்கென எழுந்து செல்லத் தொடங் கினார். உடனே நபியவர்கள், அவரை அழைத்து தொழுகை முடிந்ததும் அல்லாஹ்வைப் புகழ்ந்து அப்பால் என் மீது ஸலவாத்துக் கூறி உமக்காக பாவமன்னிப்புக் கேள் என்று கூறினார்கள். இன்னொருவரும் தொழுதுவிட்டு ஹம்தும் ஸலவாத்தும் சொல்லி விட்டு தனக்காக துஆ கேட்காமல்

எழுந்து வந்தார். உடனே நபியவர்கள் அவரை அழைத்து, உமக்காகவும் நீர் துஆச் செய்வீராக! என்று கூறினார்கள்.

(திர்மிதி)

எனவே தொழுகை முடிந்ததும் வெடுக்கென்று எழுந்து விடாமல் துஆச் செய்வது மேலான நடைமுறையாகும். ஒருவன் தனியாகத் தொழுது விட்டானாயினும் மனிதர்கள் ஒன்று கூடி ஜமாஅத்தாகத் தொழுது விட்டார்களாயினும் அவர்களுடைய துஆ அல்லாஹ்விடம் அங்கீகரிக்கப் படுவதற்கு மிக உகந்த நேரமும் அற்புதமான நேரமுமாகும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒருவர் வந்து எந்த துஆ—பிரார்த்தனை—மிக அங்கீகரிக்கப்படும் எனக் கேட்டார். அதற்கு அண்ணல் நபியவர்கள், பர்லாக்கப்பட்ட தொழுகை முடிந்த பிறகும், கடைசி இரவின் போதும் கேட்கப்படுகின்ற துஆ மிகவும் அங்கீகரிக்கப்படும் எனக் கூறினார்கள். இப்படி அபூஉமாமா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

(திர்மிதி)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம் ஆயுட்காலம் முழுவதும் இமாமாக இருந்து தொழுகை நடத்தி வந்தார்கள். அவர்கள் பர்லான தொழுகையைத் தனியாகத் தொழுததோ, மற்றவர்களுக்குப் பின்னால் தொழுததோ மிகமிகக் குறைவாகும். அவர்கள் தொழுது முடிந்த பிறகும் வெடுக்கென்று எழுந்து விடுவதில்லை. சிறிது நேரம் அமர்ந்திருப்பார்கள். அப்பொழுது அல்லாஹும்ம லா மானிஅ லிமா அஃதய்த்த என்ற துஆவை ஓதுவார்கள். இன்னும் சில நேரங்களில் அல்லாஹும்ம அன்தஸ்ஸலாம், வமின்கஸ் ஸலாம் என்று தொடங்குகின்ற துஆவை ஓதுவார்கள். இப்படி அண்ணலவர்கள் பல துஆக்கள் ஓதியிருக்கிறார்கள். அப்போது ஸஹாபாப் பெருமக்கள் அண்ணலவர்கள் ஓதுவதைக் கேட்டுக்கொண்டிருப்பார்கள்.

(புகாரீ, முஸ்லிம்)



எனவே தொழுகைக்குப் பிறகு தனியாகவும் கூட்டாகவும் துஆக் கேட்பது நபியவர்கள் காலம் தொட்டே இயற்கையாக இருந்து வருகின்ற மிக்க மேலான பழக்கமாகும். கூட்டாக துஆக் கேட்பது, நம்முடைய ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்தக் கூடியதாகவும் இஸ்லாமிய கூட்டு வாழ்க்கையின் உயிரோட்டமாகவும் அமைந்திருக்கிறது. ஒன்று பட்ட நெறிமிக்க நல்ல வாழ்வின் எடுத்துக் காட்டாகவே கூட்டு துஆ அமையப் பெற்றிருக்கிறது. இத்தகைய அருமையான துஆவிலிருந்து நம்மை எவரும் விலக்கி விடமுடியாது.

சாதாரண காலத்திலும் கூட ஒருவர் துஆச் செய்து மற்றவர் ஆமீன் கூறுவது இயற்கையான ஒன்றாகும். அப்துல்லாஹ் இப்னு ஸைத் அவர்களும், அவர்களுடைய தோழர் ஒருவரும் துஆச் செய்து கொண்டிருந்தார்கள். அப்போது அங்கு வந்த அருமை நபிகள் (ஸல்) அவர்களுடைய துஆவுக்கு ஆமீன் கூறினார்கள். அப்படியே அபூஹுரைரா (ரலி) அவர்கள், அல்லாஹும்ம இன்னீ அஸ் அலுக்க இல்மன் லா யுன்ஸா—நாயனே! எனக்கு மறந்து போய் விடாத அறிவு ஞானத்தை உன்னிடம் நான் கேட்கிறேன் என்று துஆச் செய்தார்கள். அதற்கு அண்ணல் நபியவர்கள் ஆமீன்! என்று கூறினார்கள்.

(புகாரீயினுடைய ஷரஹ் பத்ஹுல் பாரி)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிம்பரின் மீது ஒருபடி ஏறினார்கள். அப்போது ஆமீன்! என்று கூறினார்கள். இரண்டாவதுபடி ஏறியபோதும் ஆமீன்! என்றும், மூன்றாவதுபடி ஏறிய போதும் ஆமீன்! என்றும் கூறினார்கள். இது குறித்து ஸஹாபாப் பெருமக்கள், அல்லாஹ்வின் தூதரே! இதுவரை உங்களிடம் நாங்கள் கேட்டிராத ஒரு விஷயத்தை இன்று கேட்டோமே! அதன் விளக்கம் என்ன? என்று கேட்டார்கள்,

அதற்கு அண்ணல் நபியவர்கள், ஜிப்ரயீல் (அலை) அவர்கள் என்னிடம் வந்து ரமலான் மாதத்தை ஒருவர் அடைந்து

அம்மாதத்தில் இறை மன்னிப்பை எவர் பெறவில்லையோ அவரை அல்லாஹ் அவனுடைய அருளை விட்டும் தூரமாக்கு வானாக! என்று பிரார்த்தனை செய்தார். உடனே நான், ஆமீன்! என்று கூறினேன். இரண்டாவது படியில் ஏறிய போது ஒருவரிடம் உம்முடைய பெயர் கூறப்பட்டு அவர் உம்மீது ஸலவாத்துச் சொல்லவில்லையானால் அவரை விட்டும் அல்லாஹ்வினுடைய அருள் தூரமாகட்டும் என்று ஜிப்ரயீல் (அலை) அவர்கள் கூறியபோது நான் ஆமீன்! என்று கூறினேன். மூன்றாவது படி ஏறியதும், ஜிப்ரயீல் (அலை) அவர்கள் உங்களில் எவரிடம் தன்னுடைய வயது முதிர்ந்த தாயும் தந்தையும் இருந்து அப்பால் அவர் அவ்விருவரையும் மேன்மைப் படுத்தாது அவர்களுடைய அதிருப்திக்கு உள்ளாவாராயின் அவரை அல்லாஹ் தன் அருளை விட்டும் வெகு தூரத்தில் ஆக்குவானாக! என்று பிரார்த்தனை பண்ணினார்கள். அதற்கு ஆமீன்! என்று நான் கூறினேன் என அண்ணல் நபியவர்கள் விளக்கம் அளித்தார்கள்.

(ஹாகிம், இப்னுஹிப்பாள், இப்னுஹுஸைமா)

எனவே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மற்றவர்களுடைய துஆவிற்கு ஆமீன்! கூறியிருக்கிறார்கள். அதனைதன் நேயர்களுக்குக் கற்றுக் கொடுத்து பயிற்சியும் அளித்திருக்கிறார்கள். இறையொளி நிரம்பிய ஏந்தல் நபியவர்களுடைய வாழ்க்கை பூராவுமே துஆதான். இறைவனிடம் துஆச் செய்யாத நேரமேயில்லை. உண்ணும் போதும், உறங்கும் போதும், விழித்தெழுந்த போதும், மல ஜலம் கழிக்கச் செல்லும் போதும், அவ்விரண்டிலிருந்து முடிந்த போதும், பள்ளிக்குச் செல்கின்ற போதும், பள்ளியை விட்டு வெளியே வருகின்ற போதும், வாகனத்தில் ஏறும் போதும், இறங்கும் போதும், தொழுகையின் போதும். தொழுகை முடிந்த பிறகும், தனியாகவும், கூட்டாகவும் துஆச் செய்து கொண்டேயிருப்பார்கள்.

இப்படி எல்லா நிலைகளிலும் சந்தர்ப்பங்களிலும் தனியாகவும் கூட்டாகவும் துஆச் செய்திருக்கிறார்கள். இயற்கை



நிலைகளில் சிறிது மாற்றம் ஏற்பட்டால் கூட அண்ணலவர்கள் துஆச் செய்வார்கள். இந்நிலையில் ஜமாஅத்தாகத் தொழுது விட்டு துஆச் செய்யக் கூடாது என்று கூறுவது எந்த வகையிலும் பொருந்தாது. ஜமாஅத்தாகத் தொழுது விட்டு துஆச் செய்வதும். தனியாகத் தொழுது துஆச் செய்வதும் ஆகிய இவ்விரண்டுமே 'பர்லுத் தொழுகைக்குப் பிறகு துஆச் செய்வது இறைவனுடைய அங்கீகாரத்திற்கு மிக நெருக்கமானது' என்ற மணிமொழிக்கு உட்பட்டதாகவே இருக்கின்றன.

எனவே நாம் வழக்கில் கொண்டிருக்கிற பர்லுத் தொழுகைக்குப் பிறகு கூட்டாக ஓதுகின்ற துஆ நபிவழியை எண்பித்துக்காட்டுவதாகவே அமைதிருக்கிறது. அதுமட்டுமல்ல, முஸ்லிம்களுடைய ஒருமைப்பாட்டையும் ஒற்றுமையையும் தெளிவுபடுத்துவதாக இருக்கிறது.

## கப்ரு ஜியாரத் சுன்னத்தாகும்

இறந்து போனவர்களின் கப்ருகளை ஜியாரத் செய்வது இறையச்சம், பக்தி, பணிவு, தெய்வீக உணர்வு போன்ற மேலாம் பண்புகளை உண்டாக்கி விடுவது மட்டுமல்ல, பாவங்களின்பால் வெறுப்பையும் உண்டாக்கி விடுகிறது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்: "கப்ருகளை ஜியாரத் செய்வதை விட்டும் உங்களை நான் விலக்கிக் கொண்டிருந்தேன். ஆயினும் இப்போது நீங்கள் அவைகளை ஜியரரத் செய்யுங்கள்! திண்ணமாக அது மறுமையை நினைவூட்டுகிறது."

இஸ்லாமிய ஆரம்ப காலத்தில் ஏகத்துவப் பண்புகளில் ஸஹாபாப் பெருமக்கள் நன்றாகப் பயிற்சியும் பக்குவமும் பெறாத கால கட்டத்தில் கப்ரு ஜியாரத் செல்வதை அண்ணல்

நபியவர்கள் விலக்கியிருந்தார்கள். எது எது ஷிர்க் என்பதையும் அதன் சாயல்கள் எது எது என்பதையும் மிகத் தெளிவாக அறிந்து கொண்டு ஏகத்துவ உணர்விலும், நெறியிலும் பண்புகளிலும் ஸஹாபாப் பெருமக்கள் ஊறித் திழைத்து விட்டபொழுது நபியவர்கள் கப்ரு ஜியாரத் பண்ணுவதை அவர்களுக்கு ஆகுமாக்கி விட்டார்கள். இம்மணிமொழி முஸ்லிம், அஹ்மது போன்ற எல்லா மொழி நூற்களிலும் இடம் பெற்றிருக்கிறது.

அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அருள் நபியவர்கள் தன்னரும் தாயின் கப்ரை ஜியாரத் பண்ணினார்கள். அப்போதவர்கள் மிக அதிகமாக அழுது கொண்டிருந்தார்கள். இதனைக் கண்ட மற்றவரும் அழத் தொடங்கினார்கள், அப்போது அண்ணல் நபியவர்கள், என்னிரட்சகனிடம் என் தாய்க்கு பாவமன்னிப்புக் கோர நான் அனுமதி கேட்டேன். அவன் அனுமதியளிக்கவில்லை. ஆயினும் என் தாயின் கப்ரை ஜியாரத் பண்ன அனுமதி வழங்கி விட்டான். எனவே நீங்கள் கப்ருகளை ஜியாரத் பண்ணுங்கள். திண்ணமாக அது மறுமைப் பேற்றினை நினைவூட்டுவதாக அமைந்திருக்கிறது. இம்மணிமொழியும் எல்லா மணிமொழி நூற்களிலும் இடம் பெற்றிருக்கிறது.

ஆயிஷா நாயகி (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஏந்தல் நபியவர்கள் என்னிடம் தங்குகின்ற ஒவ்வொரு இரவின் கடைசிப் பகுதியிலும் ஜன்னத்துல் பகீஃ என்ற கப்ருஸ்தானிற்கு செல்பவர்களாக இருந்தார்கள், அப்போதவர்கள் அங்கு நின்று கொண்டு, அஸ்ஸலாமு அலைக்கும் யாதார கௌமின் முஃமினீன் இன்னா இன்ஷா அல்லாஹு பிகும் லாஹிகூன் — முஃமின்களின் இல்லத்தவர்களே! உங்களின் மீது சாந்தி உண்டாகட்டும்! திண்ணமாக நாங்களும் உங்களை வந்தடையப் போகிறோம் என்று கூறிவிட்டு, யா அல்லாஹ்! பகீஃ உடையவர்களை நீ மன்னிப்பளிப்பாயாக! என்று துஆவும் செய்வார்கள், இம்மணிமொழி



முஸ்லிமிலும் மற்றும் மணிமொழி நூற்களிலும் பதிவு செய்யப் பெற்றிருக்கிறது.

## கப்ரு ஜியாரத் செய்பவர்கள் என்ன கூற வேண்டும்?

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கப்ரு ஜியாரத் செய்பவர்கள் என்ன சொல்லவேண்டும் என்பது பற்றி தம் தோழர்களுக்குக் கற்றுக் கொடுப்பவர்களாக இருந்தார்கள். அஃது உங்களில் எவரேனும் கப்ரு ஜியாரத்திற்குச் சென்றால், முஃமின்களான இல்லத் தோழர்களே! உங்களுக்கு சாந்தி உண்டாகட்டும்! இன்ஷா அல்லாஹ் நாங்களும் உங்களை வந்தடைவோம். நீங்கள் எங்களுக்கு முந்தி விட்டீர்கள். அதிவிரைவில் உங்களை நாங்கள் வந்தடைகிறோம். உங்களுக்கும் எங்களுக்கும் அனைத்துப் பிணிகளிலிருந்தும் அல்லாஹ் ஆரோக்கியத்தை வழங்க அவனிடத்தில் நாங்கள் துஆ செய்கிறோம் என்று பிரார்த்திப்பார்கள். இம்மணிமொழி முஸ்லிம், அஹ்மது மற்றும் மணிமொழி நூற்களிலும் வரையப்பெற்றிருக்கிறது,

அல்ஹம்துலில்லாஹ்